நமது

# தமிழ்மண்

ஆசிரியர் : தொல்.திருமாவளவன்

₹15

VOL:20 ● ISSUE:225 ● மார்ச் 2026




திமுக - வி.சி.க. கூட்டணி : எட்டுத் தொகுதிகள் பங்கீடு

## தமிழ்மண்ணில் இடதுசாரி சனநாயக அரசியல் பாதுகாக்கப்பட வேண்டும்!

தொகுதிப் பங்கீட்டிற்குப் பிறகு எழுச்சித்தமிழர்



### திருமாவளவன் சாதித்தது என்னவென்றால்:

# பெரியாரியம், அம்பேத்கரியம், மார்க்சியம் ஆகிய கொள்கைகளில் ஈடுபாடு உள்ள இளைய தலைமுறைகளை உருவாக்கியதுதான்!

**எழுச்சித்தமிழர் பெருமிதம்**

**செஞ்சி - விழுப்புரம் சாலையில் 19.02.2026 அன்று நடைபெற்ற வழக்கறிஞர் சு.மழைமேனி பாண்டியன் அவர்களின் தலைமையில் இயங்கிய 'அம்பேத்கர் மக்கள் கட்சி'யை விடுதலைச் சிறுத்தைகள் கட்சியுடன் இணைத்தல் மற்றும் 2026 சட்டமன்றப் பொதுத்தேர்தலை முன்னிட்டு நிதியளிப்பு விழா - முப்பெரும் விழா நிகழ்வில் ஆற்றிய உரையின் சுருக்கம்:**

என் உயிரின் உயிரான விடுதலைச் சிறுத்தைகளே! உங்கள் அனைவருக்கும் என்னுடைய பணிவார்ந்த வணக்கம்.

மழைமேனி பாண்டியன் அவர்கள் 'அம்பேத்கர் மக்கள் கட்சி' என்கிற ஒரு கட்சியை உருவாக்கி சில பத்தாண்டுகளாகத் தனித்து இயங்கி வந்தார். இன்றைக்கு அவர் அந்தக் கட்சியைச் சார்ந்த முன்னணித் தோழர்களோடு, ஆயிரக்கணக்கான தோழர்களோடு விடுதலைச் சிறுத்தைகள் கட்சியில் தம்மை இணைத்துக் கொண்டிருக்கிறார். அவர் இந்தக் கட்சியில் இணைந்ததில் நான் மகிழ்ச்சியடைகிறேன், மனப்பூர்வமாக வரவேற்கிறேன். அவரோடு இணைந்த அத்தனை தோழர்களையும் விடுதலைச் சிறுத்தைகளாய் வரவேற்று வாழ்த்துகிறேன்.

'ஏதேனும் ஓர் அரசியல் கட்சியில் இணையவேண்டும் என்று எண்ணாமல், புரட்சியாளர் அம்பேத்கர் அவர்களின் கொள்கைகளை உரத்துப் பேசுகிற விடுதலைச் சிறுத்தைகள் கட்சியில் நாம் இணையவேண்டும்' என்று

முடிவெடுத்திருப்பது, அவர் புரட்சியாளர் அம்பேத்கரின் கொள்கைகளின்மீது கொண்டிருக்கிற ஈடுபாட்டையும் தீவிரத்தையும் நமக்கு உணர்த்துகிறது.

இன்றைக்குப் பொதுவாழ்க்கையில் இருப்பவர்கள் பலர் உடனே அரசியலில் வளர்ந்துவிட வேண்டும், பதவியைப் பெற்றுவிடவேண்டும் என்று ஆர்வம் காட்டுவதை நாம் பார்க்கிறோம். அப்படிப் பல பேர் அவ்வப்போது கட்சி மாறிச் செல்வதை நாம் பார்க்கிறோம். என்னுடைய தலைமையையேற்ற என் உயிரின் உயிரான விடுதலைச் சிறுத்தைகள் எத்தனை புயலடித்தாலும், எத்தனை இடி இடித்தாலும், எவ்வளவு பெருமழை பொழிந்தாலும் காட்டாற்று வெள்ளம் அடித்து அடியோடு புரண்டு வந்தாலும் 'நாங்கள் எப்போதும் சிறுத்தைகளாகவே இருப்போம், திருமாவளவன் தலைமையில் இயங்குவோம்' என்று தொடர்ந்து பயணிப்பதுதான் எனக்கு வியப்பும் பெருமையும் மகிழ்ச்சியும். அதற்காக என் உயிரின் உயிரான விடுதலைச் சிறுத்தைகளுக்கு நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

### தமிழ்நாட்டு அரசியலின் சாதனை

விஜயகாந்த் அவர்கள் கட்சி தொடங்கியபோது 'தலித் இளைஞர்கள் தான் பெருவாரியாக அணிதிரண்டு போகிறார்கள். திருமாவளவனோடு இருப்பவர்கள்தான் போகப் போகிறார்கள்' என்றெல்லாம் வதந்தியைக் கிளப்பினார்கள். ஆனால், அதற்குப் பிறகுதான் அங்கீகாரம் பெற்று. இன்றைக்கு இரண்டு நாடாளுமன்ற உறுப்பினர்களையும், நான்கு சட்டமன்ற உறுப்பினர்களையும் கொண்ட ஒரு மாநிலக் கட்சியாக, சொந்தச் சின்னம் பெற்ற கட்சியாகவும் தமிழ்நாட்டு அரசியலில் சாதனை படைத்திருக்கிறது.

தமிழ்நாட்டில் அம்பேத்கர் பெயரில் இதற்கு முன்பு எத்தனையோ பல இயக்கங்கள், முன்னணித் தலைவர்கள், பெருந்தலைவர்கள் இருந்திருக்கலாம். ஒன்று அல்லது இரண்டு இடங்களைப் பெற்று எந்தக் கூட்டணியில் இடம் பெற்றிருக்கிறார்களோ அந்தக் கூட்டணிக்குத் தலைமை தாங்கக்கூடிய கட்சியின் சின்னங்களில் போட்டியிட்டு வெற்றி பெற்றிருக்கலாம். ஆனால், முதன் முதலாக தமிழ்நாட்டில் புரட்சியாளர் அம்பேத்கரின் பெயரில் இயங்குகிற ஓர் இயக்கம் இன்றைக்கு அனைத்துத் தரப்பு மக்களுக்குமான ஓர் அரசியல் கட்சியாகப் பரிணாமம் பெற்று, ஒரு மாநிலக் கட்சியாக அங்கீகாரம் பெற்றிருக்கிறது என்று சொன்னால் அது விடுதலைச் சிறுத்தைகள் கட்சிதான். அந்தப் புதிய வரலாற்றைப் படைத்திருக்கிறது. இது அவ்வளவு எளிதான ஒன்றல்ல.

> **நாங்கள் எப்போதும் சிறுத்தைகளாகவே இருப்போம், திருமாவளவன் தலைமையில் இயங்குவோம்' என்று தொடர்ந்து பயணிப்பதுதான் எனக்கு வியப்பும் பெருமையும் மகிழ்ச்சியும்!**

அம்பேத்கர் பெயரைச் சொல்வது, அவருடைய கொள்கையையேற்று அவருடைய பெயரில் இயங்குவது அவ்வளவு எளிதாக பொதுச்சமூகம் ஏற்றுக் கொள்வதில்லை, அங்கீகரிப்பதில்லை. ஆனால், அந்தத் தடைகளைத் தகர்த்து விடுதலைச் சிறுத்தைகள் கட்சி தமிழ்ச் சமூகத்திற்கான, பொதுச்சமூகத்திற்கான ஒரு பேரியக்கம் என்பதை இன்றைக்கு நிலைநாட்டியிருக்கிறது.

### புரட்சியாளர் அம்பேத்கர் கனவு

'சமத்துவ இந்தியாவைக் கட்டமைக்க வேண்டும்' என்கிற கனவை புரட்சியாளர் அம்பேத்கர் அவர்கள் கண்டார். அதற்காக தம் வாழ்வை அவர் ஒப்படைத்துக் கொண்டார். 80 அல்லது 90 வயதுவரை வாழவேண்டியவர் 65 வயதில் காலமாக நேர்ந்தது. இரவு பகல் பாராமல், உறக்கம் இல்லாமல், ஓய்வு இல்லாமல் அவர் உழைத்த உழைப்பு, அவருடைய

அர்ப்பணிப்பு; மிகக் குறுகிய வாழ்நாளை அவருக்குத் தரும் நிலை உருவானது. அப்படிப்பட்ட புரட்சியாளர் அம்பேத்கர் அவர்கள் சாதித்த சாதனைகள் ஏராளம் என்றாலும் அவருடைய படைப்புகளுள் காலத்திற்கும் இந்தச் சமூகத்தில் மிகப்பெரிய தாக்கத்தை ஏற்படுத்திக்கொண்டே இருக்கும் என்கிற படைப்புகளுள் இரண்டு முக்கியமான படைப்புகள். ஒன்று, அவர் சாகும் தருவாயில் எழுதி முடித்த 'புத்தரும் அவரது தம்மமும்' என்கிற நூல். அது இந்தியாவில் மெல்ல, மெல்ல மிகப்பெரிய பண்பாட்டுப் புரட்சியை நிகழ்த்தி வருகிறது. அடுத்து, அரசியல் களத்தில் மிகப்பெரும் தாக்கத்தை உருவாக்கி வருகிற இந்திய அரசமைப்புச் சட்டம். இந்திய அரசமைப்புச் சட்டம், ஏதோ பல சட்டங்களிலிருந்து நகலெடுத்துத் தொகுக்கின்ற ஒன்றல்ல. அப்படித் தொகுக்கப்பட்ட ஒரு நூல் அல்ல. ஒரு புதிய இந்தியாவைக் கட்டமைப்பதற்கான கனவு அது. ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக இந்த மண்ணில் நிலவுகிற சமூகக் கட்டமைப்பை அடியோடு தகர்த்தெறிவதற்கான கனவு. பிறப்பின் அடிப்படையிலான உயர்வு—தாழ்வைத் தகர்த்தெறிந்து 'அனைவரும் சமம்' என்கிற நிலையை உருவாக்குவதற்கான ஒரு கனவு; சாதாரணமானதல்ல.

### இரத்தம் சிந்தாமல் ஒரு புரட்சி

அண்ணன் மேதகு பிரபாகரன் அவர்களைப்போல படை கட்டி, பயிற்சி கொடுத்து, ஆயுதம் தாங்கி, இரத்தம் சிந்தி, உயிர் ஈகம் செய்து புரட்சி செய்யவேண்டும் என்கிற நிலைப்பாட்டை எடுக்காமல், படை கட்டாமல், பயிற்சி அளிக்காமல், ஆயுதம் தரிக்காமல், இரத்தம் சிந்தாமல் ஒரு புரட்சியை உருவாக்க முடியும் என்று சொன்னால் அது புரட்சியாளர் அம்பேத்கர் ஒருவரால்தான் நிகழ்ந்தது. அந்தப் புரட்சிக்கான வெடிமருந்துக்கிடங்கு; அவர் எழுதிய அரசமைப்புச்சட்டம். அந்தப் புரட்சிக்கான ஆயுதக்கிடங்கு; அவர் எழுதிய அரசமைப்புச்சட்டம். அந்தப் புரட்சிக்கான ஏவுகணைகள்; புரட்சியாளர் அம்பேத்கர் எழுதிய அரசமைப்புச்சட்டம். இது வெறும் சட்டம் கிடையாது. சனாதன தர்மம் உருவாக்கி வைத்திருக்கிற சமூகக் கட்டமைப்பைத் தவிடுபொடியாக்கிவிட்டு, சமகாலத்தில் ஒரு புதிய சமூகக் கட்டமைப்பை உருவாக்குவதற்கான, ஒரு மகத்தான கோட்பாட்டுப் பெட்டகம் அரசமைப்புச் சட்டம். ஒரே நேரத்தில் ஒன்றைத் தகர்க்கின்ற வேலையை அது செய்கிறது; இன்னொன்றைக் கட்டியெழுப்புகின்ற வேலையையும் அது செய்கிறது. ஒரே நேரத்தில் பழமையை இடித்து நொறுக்குகிறது; புதுமையைக் கட்டமைக்கிறது. அதுதான் அரசமைப்புச் சட்டம்.

### சங் பரிவார்களின் முதல் எதிரி

ஆர்.எஸ்.எஸ் உள்ளிட்ட சங்பரிவார்களின் முதல் எதிரி காங்கிரஸ் இல்லை; தேர்தல் களத்தில் அவர்கள் எதிரிகள். உண்மையான எதிரி; அவர்கள் வெளியில் சொல்லாமல், வெளிப்படையாகச் சொல்லாமல் தங்களின் முதல் எதிரி என்று அடையாளப்படுத்துவது இந்திய அரசமைப்புச் சட்டம்தான் அல்லது புரட்சியாளர் அம்பேத்கர்தான். இதை உணர்ந்த முதல் இயக்கம் விடுதலைச் சிறுத்தைகள் கட்சிதான். நான், இன்றைக்கு நேற்றைக்கு அல்ல, கிட்டத்தட்ட 20 ஆண்டுகளாகத் தொடர்ந்து மேடைகளில் இதைப் பேசி வருகிறேன். பா.ச.க ஆட்சிக்கு வந்த பிறகு இதை இன்னும் தீவிரமாக நான் பேசி வருகிறேன். மோடி பிரதமரான பிறகு நான் பேசாத மேடைகளே இல்லை. அரசமைப்புச் சட்டத்தின் பாதுகாப்பைப் பற்றிப் பேசி வருகிறேன். ஏனென்றால், இந்தச் சட்டம்தான், மெல்ல மெல்ல சமூக சமத்துவத்தை உருவாக்குவதற்கான அடித்தளத்தை அமைத்து வருகிறது.

ஆர்.எஸ்.எஸ்.ஸும், பா.ச.க.வும் இதர சங்பரிவார்களும் 'அம்பேத்கர் ஜெயந்தி' கொண்டாடுவார்கள், அவரின் சிலைக்கு மாலை போடுவார்கள், பிறந்த நாள் — நினைவு நாளில் வீரவணக்கம் செலுத்துவார்கள். ஆனால், அவர்தான் அவர்களின் முதல் எதிரி. அதைச் சொல்ல




மாட்டார்கள். அதை நாம் புரிந்துகொள்ள வேண்டும். அதைப் புரிந்துகொள்வதற்கு அம்பேத்கரைப் படிக்க வேண்டும். அதைப் புரிந்து கொள்வதற்கு பெரியாரைப் படிக்க வேண்டும். அதைப் புரிந்துகொள்வதற்கு மார்க்சியத்தைப் படிக்க வேண்டும்.

'திருமாவளவன் என்ன சாதித்தான்?' என்று வருங்காலத்தில் யாராவது கேள்வி கேட்டால், "பெரியாரியம், அம்பேத்கரியம், மார்க்சியம் ஆகிய கொள்கைகளில் ஈடுபாடு உள்ள இளைய தலைமுறைகளை உருவாக்கினான், தலைவர்களை உருவாக்கினான். அதுதான் திருமாவளவனின் சாதனை என்று காலம் சொல்லும்; சொல்ல வேண்டும். அந்தக் கட்டடத்தைக் கட்டினார், இந்த மாளிகையைக் கட்டினார், இந்த மேம்பாலத்தைக் கட்டினார், இவர்களுக்கெல்லாம் கல்வி நிறுவனங்களைக் கட்டினார், பல்கலைக் கழகங்களைக் கட்டினார் என்று சொல்லவேண்டும் என்று நான் விரும்பவில்லை. ஆற்றல் வாய்ந்த தலைமுறையை உருவாக்கினான்; கொள்கை சார்ந்த, கோட்பாடு சார்ந்த தலைமுறையை உருவாக்கினான்; அதன் வழி, இந்த நாட்டையும் அரசமைப்புச் சட்டத்தையும் பாதுகாத்தது அந்த இயக்கம் என்பதுதான் திருமாவளவனின் சாதனையாக இருக்க வேண்டும்" என்று நான் விரும்புகிறேன்.

தி.மு.க தலைமையிலான கூட்டணியில் நாம் ஏன் தொடர்கிறோம்? அ.தி.மு.க கூட்டணிக்கு அல்லது புதிதாக உருவாகியிருக்கிற விஜய் தலைமையிலான கூட்டணிக்குப் போகமுடியும் என்கிற வாய்ப்புகள் இருந்தும் அல்லது 'எங்கள் அணிக்கு வாருங்கள்' என்று அழைப்புகள் இருந்தும் அதையெல்லாம்கூட நான் பொருட்படுத்தாமல் தி.மு.க தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியில் தொடர்வோம் என்று சொல்வதற்கு என்ன காரணம்? இங்கேயே இருக்க வேண்டும் என்று யாராவது என்னைக் கட்டாயப்படுத்தினார்களா? இந்த அணியைவிட்டுப் போகமுடியாது என்கிற நெருக்கடி ஏதேனும் என்னைச் சூழ்ந்திருக்கிறதா? அப்படி எதுவும் இல்லை. நான் உள்வாங்கியிருக்கிற அம்பேத்கரின் அரசியல்தான் அதற்குக் காரணம். நாம் புரிந்துகொண்டிருக்கிற பெரியார் கருத்தியல்தான் அதற்குக் காரணம். பாட்டாளிவர்க்கத்தின்

மீட்சிக்கான மார்க்சியம்தான் அதற்குக் காரணம். பா.ச.க., ஆர்.எஸ்.எஸ் போன்ற வலதுசாரிகள் இந்த மண்ணில் வலுப் பெற்றுவிடக் கூடாது.

**வாலாட்ட முடியாத ஒரே மாநிலம் தமிழ்நாடு**

தி.மு.க கூட்டணியைப் பலவீனப் படுத்துவது பா.ச.க.வின் செயல் திட்டங்களுள் ஒன்று. ஏனென்றால், அவர்கள் எல்லா மாநிலங்களிலும் விளையாடிப் பார்த்திருக்கிறார்கள்; தமிழ்நாட்டில் விளையாட முடியவில்லை. கர்நாடகாவில் அவர்களால் ஆட்சியைப் பிடிக்க முடிந்தது. மகாராஷ்டிராவிற்குள் புகுந்து அங்கேயும் ஆட்சியைக் கைப்பற்ற முடிந்தது. பீகாருக்குள் நுழைந்து நித்தீஷ்குமார் அவர்ளோடு இணைந்து ஆட்சியதிகாரத்திற்குள் நுழைய முடிந்தது. ஒடிசாவில் நவீன் பட்நாயக் தவிர வேறு யாரும் முதலமைச்சராக வரமுடியாது என்கிற நிலையை மாற்றி அங்கேயும் குழப்பத்தை உருவாக்க முடிந்தது. மேற்கு வங்கத்திலும் அவர்களால் வாலாட்ட முடிந்தது. ஆனால், அவர்களால் வாலாட்ட முடியாத ஒரே மாநிலம் தமிழ்நாடு தான். குழப்ப முடியாத ஒரே மாநிலம் தமிழ்நாடுதான்.

**காவிக்கொடியைப் பறக்கவிடுவதே நோக்கம்**

இங்கேயும் காவிக்கொடியைப் பறக்க விடுவதுதான் அவர்களின் நோக்கம். அதற்காகத்தான் பெரியாரை இன்றைக்குச் சாடுகிறார்கள். சிலபேர் அவர்களுக்குத் துணையாக இன்றைக்கு இயக்கம் கட்டி பெரியாரை விமர்சிக்கிறார்கள். நன்றி மறந்த நிலையில் பெரியாரை விமர்சிக்கிற இயக்கங்கள் பல உருவாகியிருக்கின்றன. ஆர்.எஸ்.எஸ்.காரர்களும் தமிழ்த்தேசியம் பேசுகிற போலிகளும் ஒரே குரலை எழுப்புகிறார்கள், ‘பெரியார் என்ன சாதித்து விட்டார்’ என்று?

புரட்சியாளர் அம்பேத்கருக்கு அந்தக் காலத்தில் நம்பிக்கைக்குரிய நண்பராக இருந்தவர் தந்தை பெரியார். புரட்சியாளர் அம்பேத்கர் தமிழ்நாட்டிற்கு வந்தபோது தலித் இயக்கத் தலைவர்கள்கூட யாரும் அவரைப் பெரியதாக ஏற்றுக் கொள்ளவில்லை. அப்படி தலித் இயக்கத் தலைவர்கள் எல்லாம் அந்தக் காலத்தில் காங்கிரசில் இருந்தார்கள். மறைந்த சந்திரசேகர் காங்கிரசில் இருந்தார்; இளையபெருமாள் காங்கிரசில் இருந்தார்; கக்கன் காங்கிரசில் இருந்தார்; தென்காசி அருணாச்சலம் காங்கிரசில் இருந்தார் — இப்படிச் சொல்லிக்கொண்டே போகலாம். குடியரசுக் கட்சி காங்கிரசுக்கு ஆதரவாக இருந்திருக்கிறது. எம்.சி.ராஜா கூட அன்றைக்கு அம்பேத்கரை ஏற்றுக்கொள்ளவில்லை; விமர்சித்த காலம் அது. அந்தக் காலத்தில் தேசிய அளவில் இந்த ஒடுக்கப்பட்ட மக்களுக்கென்று உருவாகியிருக்கிற உண்மைத் தலைவர், புரட்சித்தலைவர் அம்பேத்கர்தான் என்று அடையாளம் கண்டவர் தந்தை பெரியார்.

**இருவரின் நோக்கம்**

பெரியாரை ‘மியான்மருக்கு வாருங்கள்’ என்று கூப்பிட்டார் அம்பேத்கர். அம்பேத்கர் விடுத்த அழைப்பையேற்று பர்மாவில் நடைபெற்ற பௌத்த மாநாட்டிற்கு பெரியார் சென்றார்; அந்த அளவுக்கு நட்பு. ஏன், அம்பேத்கரும் பெரியாரும் ஒரே மதமா? அம்பேத்கரும் பெரியாரும் ஒரே மொழியா? அம்பேத்கரும் பெரியாரும் ஒரே சாதியா? எந்த அடிப்படையில் அவர்கள் இருவரின் நட்பு உருவானது? இந்த சனாதன தர்மத்தை அழித்தொழிக்க வேண்டும். பிறப்பின் அடிப்படையில் இருக்கிற சாதி, மேல் சாதி, கீழ்ச்சாதி என்கிற நிலைப்பாட்டைத் தகர்க்க வேண்டும். இந்தக் கேட்டினை அழித்தொழிக்க வேண்டும். இதுதான் இருவரின் நோக்கம்.

அம்பேத்கர் பேசியதைத்தான் பெரியார் பேசினார். பெரியார் பேசியதைத்தான் அம்பேத்கர் பேசினார். அந்த இரண்டு தலைவர்களும் எப்படி சமமாக முடியும் என்று கேள்விகளை எழுப்புகிறார்கள். இது எவ்வளவு பெரிய அவதூறு. ஆபத்தான அரசியல். இவர்கள் யாருக்குச் சேவை செய்கிறார்கள்? பெரியாரைச் சிதைப்பது என்பது தி.மு.க உள்ளிட்ட கட்சிகளைப் பலவீனப்படுத்திவிட்டு இங்கே அவர்கள்

வலுப்பெறுவதற்காகத்தான். சரி, தி.மு.க.வைப் பலவீனப்படுத்தினால் விடுதலைச் சிறுத்தைகளுக்கு என்ன நட்டம் என்று கேள்வி எழலாம். அது தி.மு.க.வை மட்டும் பலவீனப்படுத்துவதாக முடியாது; பெரியார் அரசியலுக்கு வேட்டு வைக்கிறார்கள். நாம் பேசுகிற அரசியல் பெரியார் அரசியல். நாம் பேசுகிற அரசியலுக்கு வைக்கிற வேட்டு. ஆகவேதான், சங்பரிவார்கள் இங்கே வளரக்கூடாது, வலுப்பெற்றுவிடக் கூடாது. ஆர்.எஸ்.எஸ்.க்குத் துணை போகக்கூடிய சாதிய மதவாத சக்திகள் வளரக்கூடாது என்று நாம் சொல்கிறோம்.

**வி.சி.க நிலைப்பாடு**

இன்றைக்கு, பா.ம.க.வை தி.மு.க.வில் சேர்க்கக்கூடாது என்று திருமாவளவன் தடுத்துவிட்டார் என்று சொல்கிறார்கள். இல்லை, நான் அப்படிச் சொல்லவில்லை. தி.மு.க.வுக்கு அப்படி நெருக்கடி கொடுக்க, கெடுபிடி செய்ய ஒருபோதும் நான் எண்ணியதில்லை. எங்கள் கட்சியின் நலன்கருதி நாங்கள் எடுத்த முடிவு; 2011க்குப் பிறகு. தருமபுரியில் நடந்த நாயக்கன்கொட்டாய், நத்தம் சூறையாடலுக்குப் பிறகு அவர்கள் கையாண்ட 'Social Engineering' என்கிற நிலைப்பாடுதான். தலித் அல்லாதார் இயக்கம் கண்ட அந்த நிலைப்பாடுதான்.

பெரியார் 'பார்ப்பனர் அல்லாதார் இயக்கம்' தொடங்கி "பார்ப்பனர் அல்லாதார் எல்லோரும் வாருங்கள்; எல்லோரும் ஒன்று சேர்வோம்" என்றார். ஆனால், தமிழ்நாட்டில் கடந்து சில ஆண்டுகளுக்கு முன்பு 'தலித் அல்லாதார் அனைவரும் ஒன்று சேர்வோம் வாருங்கள்' என்றார் ஒருவர். இங்கே தான் நமக்கு அதிர்ச்சியாக இருக்கிறது. பெரியார் பெயரில் இயக்கம் கண்ட அவர் தலித்தை எதிர்த்து பிற சாதிகளையெல்லாம் ஒன்று சேர்க்கின்ற அரசியல் அது. இதற்குப் பெயர்தான், 'Social Engineering'.

இந்தியா முழுவதும் முஸ்லிம் அல்லாத, கிறித்தவர் அல்லாத பிற சமூகங்களையெல்லாம் ஒருங்கிணைக்கிற முயற்சியை பா.ச.க செய்கிறது. இது அவர்களின் பார்வையில் 'Social Engineering'. அதே 'Social Engineering'— இது சமூக பிரிவினைக்கான அரசியல் உத்தி. அவர்கள் மத அடிப்படையில் மக்களைப் பிளவுபடுத்துகிறார்கள். இங்கே, 'தலித்துகளுக்கு எதிராக அனைவரும் ஒன்று சேருங்கள்' என்கிற தலித் வெறுப்பு அரசியல் கையிலெடுக்கப்பட்டது. அப்போது, திருமாவளவன் அறிவிப்பு செய்தது, "இனி எந்தக் காலத்தில் 'Social Engineering' என்கிற நிலைப்பாட்டை வைத்திருக்கிற இந்தக் கட்சியோடு நாங்கள் சேரமாட்டோம்" என்பதாகும். இது எங்கள் நிலைப்பாடு. தேர்தல் அரசியலில் யாரும் இப்படி வெளிப்படையாக ஒரு நிலைப்பாட்டை எடுக்க முடியாது. ஆனால், திருமாவளவன் எடுத்தான்.

இதனால், பாதிப்பு வருமா என்றால் அதைப் பற்றி நாங்கள் கவலைப் படவில்லை. எதிர்காலத்தில் சட்டமன்ற உறுப்பினர்கள் இல்லாமல் போவார்களா என்றால் அதைப் பற்றி நாங்கள் கவலைப்படவில்லை. எதிர்காலத்தில் திருமாவளவன் நாடாளு மன்ற உறுப்பினராக முடியாமல் போகுமா என்றால் அதைப்பற்றி நான் கவலைப் படவில்லை. புரட்சியாளர் அம்பேத்கரின் சிந்தனைகளைப் பாதுகாப்பது மட்டும்தான் எங்கள் நோக்கம்.

**தீயாய் இறங்கி வேலை செய்யவேண்டும்**


2026 சட்டப்பேரவைப் பொதுத் தேர்தலில் மாபெரும் வெற்றி என்கிற செய்தி பதிவாக வேண்டும். பானைச்சின்னம் போட்டியிடக்கூடிய தொகுதிகளிலும், கூட்டணிக்கட்சிகள் போட்டியிடக்கூடிய அனைத்துத் தொகுதிகளிலும் என் உயிரின் உயிரான விடுதலைச் சிறுத்தைகள் தீயாய் இறங்கி வேலை செய்ய வேண்டும். சுற்றிச்சுழன்று பணியாற்ற வேண்டும். இந்த அணியின் வெற்றிக்கு மாபெரும் துணைநிற்க வேண்டும் என்பதைச் சொல்லி, இந்த வாய்ப்புக்கு நன்றி கூறி நிறைவுசெய்கிறேன். நன்றி. வணக்கம்.

# சட்டப்பேரவைத் தேர்தல் 2026:

திமுக தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியில்

## வி.சி.க.விற்கு எட்டுத்தொகுதிகள் ஒதுக்கீடு





சட்டப்பேரவைத் தேர்தல் - 2026

நடைபெற உள்ள 2026 சட்டமன்றப் பொதுத் தேர்தலில், திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களும் – விடுதலை சிறுத்தைகள் கட்சித் தலைவர் திரு.தொல்.திருமாவளவன் அவர்களும் இன்று (24–3–2026) தொகுதி உடன்பாடுகள் குறித்து கலந்து பேசியதில், மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியில் இடம் பெற்றுள்ள விடுதலை சிறுத்தைகள் கட்சி, தமிழ்நாட்டில் மொத்தம் 8 (எட்டு) சட்டமன்றத் தொகுதிகளில் போட்டியிடுவதெனவும் – அவற்றில் 6 தனித் தொகுதிகளிலும் 2 பொது தொகுதிகளிலும் போட்டியிடுவதென முடிவு செய்யப்பட்டது.

24.3.2026

(தொல்.திருமாவளவன்)
தலைவர்,
விடுதலை சிறுத்தைகள் கட்சி


(மு.க.ஸ்டாலின்)
தலைவர்,
தி.மு.க.

"சட்டப்பேரவைத் தேர்தல் 2026க்கான தொகுதிப் பங்கீடு குறித்த பேச்சுவார்த்தை மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியின் தலைவரும் தி.மு.க தலைவருமான திரு.மு.க.ஸ்டாலின் அவர்களுக்கும் வி.சி.க தலைவர் திரு.தொல்.திருமாவளவன் அவர்களுக்கும் இடையே 24.03.2026 அன்று தி.மு.க தலைமையகமான சென்னை அண்ணா அறிவாலயத்தில் நடைபெற்றது. இதில், ஆறு தனித்தொகுதிகள், இரண்டு பொதுத்தொகுதிகள் உள்ளிட்ட எட்டுத்தொகுதிகளில் விடுதலைச் சிறுத்தைகள் கட்சி போட்டியிடுவதென உறுதிசெய்யப்பட்டது.

# சிறுத்தைகள் களமிறங்கும் தொகுதிகள்

**எழுச்சித்தமிழர் அவர்களால் 29.03.2026 அன்று அறிவிக்கப்பட்ட வி.சி.க. வேட்பாளர் பட்டியல்:**





# தமிழ்மண்ணில் இடதுசாரி சனநாயக அரசியல் பாதுகாக்கப்பட வேண்டும்

## தொகுதிப்பங்கீட்டிற்குப் பிறகு எழுச்சித்தமிழர்

**சென்னை, அண்ணா அறிவாலயத்தில் 24.03.2026 அன்று நடைபெற்ற செய்தியாளர்கள் சந்திப்பின் போது:**

மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியில் அங்கம் வகிக்கக்கூடிய விடுதலைச் சிறுத்தைகளுக்கு எட்டு இடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. 6 இடங்கள் தனித்தொகுதிகள், 2 இடங்கள் பொதுத் தொகுதிகள். நேற்று (23.03.2026) நடந்த விடுதலைச் சிறுத்தைகளின் உயர்மட்டக் குழுக்கூட்டத்தில் இரட்டை இலக்கில் தொகுதிகளைப் பெறவேண்டும் என்றும் ஒரு மாநிலங்களவை உறுப்பினரையும் வருகின்ற 2028இல் காலியாக உள்ள இடத்தில் வழங்க வேண்டுமென வலியுறுத்தவும் தோழர்கள் ஒருமனதாகத் தீர்மானம் நிறைவேற்றினர். அந்தத் தீர்மானம் குறித்தும் தி.மு.க தலைவரும் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியின் தலைவருமான தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களிடத்தில் நாங்கள் கலந்து பேசினோம்.

23 கட்சிகள் இடம் பெற்றுள்ள ஒரு மெகா கூட்டணி, 7 அல்லது 8 ஆண்டுகளாகத் தொடர்ந்து கட்டுக்கோப்பாக இயங்கி வருகிற ஒரு கூட்டணி, கருத்தியல் சார்ந்து இயங்குகிற கூட்டணி, தமிழ்நாட்டில் மட்டுமல்ல; அகில இந்திய அளவில் மதவெறி சக்திகள், சாதிவெறி சக்திகள், வலதுசாரி சக்திகள் வலுப்பெறுவதைத் தடுக்கவேண்டும், நாட்டையும் மக்களையும் மதவாத வெறுப்பு அரசியலிலிருந்து பாதுகாக்க வேண்டுமெனவும் உறுதியேற்றுச் செயல்படுகின்ற கூட்டணி. இந்தக் கூட்டணியின் வெற்றியை முன்னிறுத்தி அனைத்துக் கோணங்களிலும் நல்லது கெட்டது போன்றவற்றை சீர்தூக்கிப் பார்த்து விடுதலைச் சிறுத்தைகளின் நலன் எவ்வளவு முக்கியமோ, அந்த அளவுக்கு நாம் அங்கம் வகிக்கும் கூட்டணிக்கும் முக்கியமானது என்பதைக் கருத்தில் கொண்டு இந்த முடிவுக்கு

விடுதலைச் சிறுத்தைகள் கட்சி இடம் பெற்றிருக்கிறது. தொடர்ந்து தி.மு.க.வோடு நாங்கள் பயணிப்பதற்கு மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியில் பயணிப்பதற்கு முதன்மையான காரணம் இடதுசாரி சனநாயக அரசியல் தமிழ்மண்ணில் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதுதான்.

வலதுசாரி பிற்போக்கு அரசியல் காலூன்றிவிடக்கூடாது; வலுப்பெற்றுவிடக் கூடாது; அது தமிழ்நாட்டிற்கும் நல்லதல்ல, இந்திய தேசத்திற்கும் நல்லதல்ல என்கிற பார்வையிலிருந்துதான் என்பதை நாங்கள் அவ்வப்போது தெளிவுபடுத்துகிறோம், உறுதிப்படுத்து கிறோம். அதே அடிப்படையில்தான் இந்தப் பேச்சுவார்த்தையை நாங்கள் நடத்தி முடித்திருக்கிறோம். எனவே, எட்டுத்தொகுதிகளில் இன்றைக்கு கையெழுத்திட்டிருக்கிறோம். 200க்கும் மேற்பட்ட இடங்களில் இந்தக் கூட்டணி வெற்றி பெறவேண்டும் என்கிற வேட்கையோடு, தீவிர முனைப்போடு விடுதலைச் சிறுத்தைகள் தேர்தல் பணிகளை முன்னெடுப்போம். தமிழ்நாட்டு மக்களின் பேராதரவோடு இந்தக் கூட்டணி மாபெரும் வெற்றி பெறும்.

ஒருபுறம் சங்பரிவார்களின் தலைமை யிலான வலதுசாரிகள், இன்னொருபுறம் புரட்சியாளர் அம்பேத்கர், தந்தை பெரியார், மாமேதை மார்க்ஸ் போன்ற மாமனிதர்களின் அரசியலைத் திருத்திப் பேசி, திராவிட அரசியலுக்கு எதிராகக் களமாடுகிறோம் என்கிற பெயரில் சமூகநீதி அரசியலுக்கு வேட்டு வைக்கும் முயற்சியில் ஈடுபடுகிற திரிபுவாத சக்திகள். ஆகவே, வலதுசாரி சக்திகளையும், திரிபுவாத சக்திகளையும் வீழ்த்த வேண்டிய பொறுப்பு விடுதலைச் சிறுத்தைகள் கட்சிக்கு யாரையும்விட கூடுதலாக இருக்கிறது என்று நாங்கள் உணர்கிறோம். தற்காலிகமாக இந்தத் தேர்தலில் லாப நட்டங்களைக் கணக்குப் போட்டு அதன்மூலம் வலதுசாரிகள் வலுப்பெறுவதற்கு இடம் கொடுத்து விட்டால் பிறகு தமிழ்நாட்டு அரசியலில் சாதிவெறியர்களும், மதவெறியர்களும் தான் கொட்டமடிப்பார்கள். அவர்களின் கைகள் ஓங்கும். விளிம்புநிலை மக்களுக்காகப் போராடக் கூடிய இடது சாரி சக்திகள் பின்னுக்குத் தள்ளப் படும் நிலை உருவாகும்.



என்னுடைய பார்வையில் இன்றைக்கு விடுதலைச் சிறுத்தைகளுக்குத் தந்திருக்கின்ற எட்டுத்தொகுதிகளும், கம்யூனிஸ்டு கட்சிகளுக்குத் தந்திருக்கின்ற பத்துத் தொகுதிகளும் சேர்த்து 18 தொகுதிகள் இடதுசாரி அரசியலைப் பாதுகாப்பதற்காகப் போராடக்கூடிய இயக்கங்களுக்கு தி.மு.க வழங்கியிருக்கிறது என்றுதான் நான் புரிந்துகொள்கிறேன். விடுதலைச் சிறுத்தைகள், இடதுசாரிகள் மற்றும் முஸ்லிம் அமைப்புகள், சிறுபான்மையினரின் சனநாயக உரிமைகளைப் பாதுகாக்கிற சக்திகள், ஆகவே, இந்தக் கட்சிகளுக்கெல்லாம் ஒதுக்கப்பட்டிருக்கிற இந்த இடங்கள் மேலோட்டமாகப் பார்த்தால் எண்ணிக்கையில் குறைவு என்று தோன்றும்.

ஆனால், எல்லாத் திசைகளிலும் நாம் கூட்டிக்கழித்துக் கணக்குப் போட்டுப் பார்த்தால் வெற்றி ஒன்றே இலக்கு, வெற்றியை அடிப்படையாகக் கொண்டு இவற்றை நாங்கள் தீர்மானித்திருக்கிறோம். ஒன்றிரண்டு தொகுதிகளுக்காக முரண்பட்டுக் கூட்டணிக்குள்ளே சலசலப்பை உருவாக்கி வெற்றிக்கான வாய்ப்புகளை நாம் சேதப்படுத்திவிடக் கூடாது என்கிற பொறுப்புணர்வோடுதான் இந்த நிலைப்பாட்டை நாங்கள் எடுத்திருக்கிறோம். இதில் எங்களுக்கு மனநிறைவு உள்ளது.

**இன்றைக்கு விடுதலைச் சிறுத்தைகளுக்குத் தந்திருக்கின்ற எட்டுத்தொகுதிகளும், கம்யூனிஸ்டு கட்சிகளுக்குத் தந்திருக்கின்ற பத்துத் தொகுதிகளும் சேர்த்து 18 தொகுதிகள் இடதுசாரி அரசியலைப் பாதுகாப்பதற்காகப் போராடக்கூடிய இயக்கங்களுக்கு தி.மு.க வழங்கியிருக்கிறது**

### புதுச்சேரியில் தனித்துப் போட்டி

புதுச்சேரியில் தனித்துப் போட்டி என்று நாங்கள் அறிவித்திருக்கிறோம். மூன்று தொகுதிகளில் நாங்கள் வேட்புமனுத் தாக்கல் செய்துள்ளோம். ஏன் மூன்று தொகுதிகளில் வேட்புமனு தாக்கல் செய்யவேண்டிய நிலை ஏற்பட்டது என்றால் வேட்புமனுத் தாக்கல் செய்வதற்கு கடைசி நிமிடம் வரையில் கூட்டணி உறுதிப்படவில்லை.

தி.மு.க, காங்கிரசுக்கு இடையே கிட்டத்தட்ட ஏழு அல்லது எட்டு நாட்கள் இடைவிடாமல் பேச்சுவார்த்தை நடந்து கொண்டிருந்தது. அந்தப் பேச்சு வார்த்தையில் எண்ணிக்கை முடிவாக வில்லை. இந்த நிலையில் வேட்புமனுத் தாக்கல் செய்வதற்கான கால அவகாசம் முடிந்துவிடும் என்பதனால் முன்னெச்சரிக்கையாக நாங்கள் மூன்று தொகுதிகளில் வேட்புமனுத் தாக்கல் செய்திருந்தோம். தனித்தொகுதிகளான ஊடுசு, நெட்டப்பாக்கம் உள்ளிட்ட இரண்டு தொகுதிகளிலும் எமது கட்சியின் முன்னணித் தோழர்கள் வேட்புமனுத் தாக்கல் செய்திருக்கிறார்கள். அதேபோல் உழவர்கரை பொதுத்தொகுதியிலும் மனுத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது. கடந்த ஆண்டு காங்கிரஸ் எங்களுக்கு அந்தத் தொகுதியைத்தான் ஒதுக்கியது. தனித்தொகுதியை நாங்கள் கேட்டோம். “இல்லை, உழவர்கரையை நீங்கள் எடுத்துக்கொள்ளுங்கள்” என்று காங்கிரஸ் எங்களுக்கு வழங்கியது. ஆகவே, 6 ஆயிரத்திற்கு மேற்பட்ட வாக்குகளை வாங்கிய தொகுதி என்பதனால் இந்த முறையும் அந்தத் தொகுதி எங்களுக்கு வேண்டுமென்று மூன்று தொகுதிகளை எழுதிக்கொடுத்திருக்கிறோம்.

கடைசியாக வேட்புமனுத் தாக்கல் முடிந்த பிறகு விடுதலைச் சிறுத்தைகள் கட்சிக்கு ஒரு தொகுதிதான் என்ற அறிவிப்பு வெளியானது. ஆனால், அந்த ஒரு தொகுதியிலும் காங்கிரஸ் சார்பில் வேட்புமனுத் தாக்கல் செய்தவர்கள், தனித்தொகுதியிலும் வேட்புமனுத் தாக்கல் செய்தவர்கள் திரும்பப் பெறுவதற்குத் தயாராக இல்லை. அது இன்னும் இழுபறியாகத்தான் உள்ளது.

காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த வேட்பாளர்கள் தனித்து சுயேட்சையாகப் போட்டியிட்டால் அல்லது காங்கிரஸ் போட்டியிட்டால் கூட்டணியில் என்ன அர்த்தம் இருக்கிறது என்று கேள்வி எழுகிறது. ஆகவேதான், அந்த மூன்று தொகுதிகளிலும் தனித்துப்போட்டி என்று அறிவித்திருக்கிறோம். தி.மு.க தரப்பில் எங்களுக்குச் சொல்லப்பட்டிருக்கிற தகவல் ‘வேட்புமனுவைத் திரும்பப் பெறுவதற்கான கால அவகாசம் இருக்கிறது. எனவே, பொறுமையாக இருக்கவேண்டும்’ என்கிற வேண்டுகோளை வைத்திருக்கிறார்கள். நாங்கள் பொறுத்திருக்கிறோம்.

**காட்டுமன்னார்கோவில் சட்டமன்றத் தொகுதி:**

# தலைவர் இளையபெருமாளின் மகன் ஜோதிமணி வி.சி.க வேட்பாளராகப் போட்டி

**தனக்குப் பதிலாகக் களமிறங்குவார் என எழுச்சித்தமிழர் அறிவிப்பு**

சென்னை, அசோக்நகர், அம்பேத்கர் திடலில் 04.04.2026 அன்று நடைபெற்ற செய்தியாளர்கள் சந்திப்பில், “சிதம்பரம் நாடாளுமன்ற உறுப்பினராக நான் 2 ஆண்டுகளை முடித்துள்ளேன். இன்னும் 3 ஆண்டுகள் மீதம் உள்ளது. இருந்தாலும் நான் சட்டப்பேரவைக்குச் செல்ல வேண்டுமென விரும்பினேன். சட்டப்பேரவையில் நான் இருக்க வேண்டும்; விளிம்புநிலை மக்களுக்காகப் பேச வேண்டுமென 25 ஆண்டுகளாக எண்ணி வந்திருக்கிறேன். இது நீண்டநாள் கனவு. 2016இல் காட்டுமன்னார்கோவில் தொகுதியில் 87 வாக்குகள் வித்தியாசத்தில் தோல்வியைத் தழுவினேன்.

அப்போது நான் வெற்றி பெற்றிருந்தால் 2021 சட்டப்பேரவைத் தேர்தலில் போட்டியிட்டிருப்பேன். மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியைப் பலவீனப் படுத்தும் முயற்சியை சனதன சக்திகள் மேற்கொண்டுள்ளன. குறிப்பாக, என்னை கூட்டணியில் இருந்து பிரிக்க முயற்சி செய்தார்கள். தி.மு.க தலைமையிலான கூட்டணி கட்டுக்கோப்பாகக் களம் காண்கிறது என்றால் நான் முக்கியக் காரணம் என்பதை பெருமிதத்தோடு சொல்வேன். எந்த ஆசை வார்த்தைக்கும் இணங்காமல் தி.மு.க கூட்டணியைப் பாதுகாக்கப் பெரும் முயற்சிகள் மேற்கொண்டுள்ளேன்.

இந்தத் தேர்தலில் ‘ஆட்சியில் பங்கு, அதிகாரத்தில் பங்கு’ என்பதைக் கோருவீர்களா? என்று கேட்டபோது, ‘கூட்டணி ஆட்சி குறித்துப் பேச மாட்டோம்; அதற்கான சூழல் இல்லை’ எனக் கூறினேன். இந்த நிலையில், ‘நான் போட்டியிடப் போகிறேன்’ என்று கூறியதும் பல வியூகங்களைக் கட்டமைத்துள்ளனர். ‘கூட்டணி ஆட்சிக்கும் துணை முதல் அமைச்சர் பதவிக்கும் ஆசைப்படுகிறார்’ என்று





எல்.இளையபெருமாள் | எல்.இ.பி.ஜோதிமணி

வியூகங்கள் கிளம்பின. இதேபோல, 2026 சட்டமன்றத் தேர்தல் முடிவுகளுக்குப் பின்னர் தமிழ்நாட்டின் அரசியல் சூழல் மாறும். அப்போது நான் சட்டமன்றத்தில் இருந்தால் நல்லது என்று மட்டுமே கூறினேன். இதில் எந்த உள்நோக்கமும் இல்லை. தமிழ்நாட்டைச் சீர்குலைக்கும் வேலையை பாரதிய சனதா செய்துவரும் நிலையில் சட்டமன்றத்தில் இருப்பது நல்லது என்று மட்டுமே நினைத்தேன். எங்கள் கூட்டணியின் நலனைப் பாதிக்கும் வகையிலான கருத்து பரப்பல் இங்கே நடந்து வருகிறது. எனவே, நான் இதைக் கருத்தில்கொள்ள வேண்டிய நிலை உள்ளது. யுத்த களத்தில் பின் வாங்குவதும் ராஜதந்திரம் தான். என்னுடைய உத்தியை மாற்றி அமைக்கிறேன்.

எனவே, நான் போட்டியிடுவதாக அறிவிக்கப்பட்ட காட்டுமன்னார்கோவில் தொகுதியில் மறைந்த தலைவர் இளையபெருமாளின் இளைய மகன் ஜோதிமணி வேட்பாளராகப் போட்டியிடுவார். அய்யா இளைய பெருமாள் அவர்கள் இந்தச் சமூகத்திற்கு மிகப்பெரிய பங்களிப்பைச் செய்தவர். அவருடைய குடும்பத்தை கவுரவிக்கும் வேண்டும் என்ற உணர்வு காரணமாக ஜோதிமணி வேட்பாளராக அறிவிக்கப்படுகிறார்” என்று கூறினார்.

‘காந்தியடிகளை மறவோம்’ நிகழ்வு
மதுரை

# மதச்சார்பின்மைக் கோட்பாட்டில் உறுதியாக இருந்தவர் காந்தியடிகள்

## எழுச்சித்தமிழர் பார்வை

**மக்கள் நீதி மய்யம் தலைவரும், மாநிலங்களவை உறுப்பினருமான திரு.கமல்ஹாசன் அவர்களின் ஒருங்கிணைப்பில் 22.02.2026 அன்று மதுரையில் நடைபெற்ற ‘காந்தியடிகளை மறவோம்’ என்னும் நிகழ்வில் ஆற்றிய உரையின் சுருக்கம்:**

தமிழ்ச்சொந்தங்களே! உங்கள் அனைவருக்கும் என்னுடைய பணிவார்ந்த வணக்கம். தேசம் தழுவிய அளவில் தொலைநோக்குப் பார்வையோடு சமூகப் பொறுப்புணர்வோடு இந்த நிகழ்வை அண்ணன் கமல்ஹாசன் அவர்கள் ஒருங்கிணைத்திருக்கிறார். அவரை எவ்வளவு பாராட்டினாலும் தகும். விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் சார்பில் முதலில் எமது நெஞ்சார்ந்த பாராட்டுகளை அண்ணன் அவர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

தன் வாழ்நாள் முழுவதும் காந்தியடிகளை அரசியல்ரீதியாகக் கடுமையாக விமர்சித்தவர் புரட்சியாளர் அம்பேத்கர். காந்தியடிகளோடு முரண்பட்டு, காங்கிரசிலிருந்து வெளியேறி தனி இயக்கம் கண்டவர் தந்தை பெரியார். அந்தத் தலைவர்களோடு காந்தியடிகளை இணைத்து இந்த முப்பெரும் மாமனிதர்கள் இன்றைய காலத்தின் தேவையாக இருக்கிறார்கள் என்பதை இந்த நாட்டிற்கு எடுத்துரைக்கக்கூடிய ஆளுமைமிக்க தலைவராக அண்ணன் கமல்ஹாசன் அவர்கள் விளங்குகிறார்.

இங்கே உரையாற்றிய தலைவர்களுக்கெல்லாம் அவர் வழங்கிய பரிசு, நடுவில் காந்தியடிகள், இடதுபுறத்தில் பெரியார், வலதுபுறத்தில் புரட்சியாளர் அம்பேத்கர். இதை மேலோட்டமாகப் பார்க்கிறவர்கள் முரண்பாடான ஒரு இணைப்பு என்றுதான் எண்ணத் தோன்றும். நுட்பமாகப் பார்க்கிறவர்களால் மட்டும்தான் இது காலத்தின் தேவை என்பதை உணர முடியும். அதை உணர்ந்தவர் அண்ணன் கமல்ஹாசன் அவர்கள். எப்படி இவர்களை ஓரணியில் அல்லது ஒரே நேர்க்கோட்டில் நிறுத்த முடியும் என்கிற கேள்வி இயல்பாக எழுகிறது. நிறுத்த வேண்டிய தேவை உள்ளது. அப்படி ஒரே நேர்க்கோட்டில் இவர்கள் நிற்கிறார்கள்; ஒரே புள்ளியில் நிற்கிறார்கள் என்பதும் உண்மை. வரலாற்று உண்மை; புறந்தள்ள முடியாத உண்மை. அந்தப் புள்ளியில்தான் அண்ணன் கமல்ஹாசன் அவர்கள் ‘காந்தியடிகளை மறவோம்’ என்கிற பெயரில் இந்த மகத்தான நிகழ்வை ஒருங்கிணைத்திருக்கிறார்.

### தேசத்துரோகத்தை மறவோம்

‘காந்தியடிகளே! உங்களை மறவோம்; உங்கள் ஈகத்தை மறவோம்; உங்கள் அர்ப்பணிப்பை மறவோம்; இந்த நாட்டின் விடுதலைக்காக நீங்கள் ஆற்றிய பங்களிப்பை மறவோம்’ என்று சொல்வதோடு, அவரைப் படுகொலை செய்த சனாதனக் கும்பலுக்கு ‘நீங்கள் செய்த தேசத்துரோகத்தை மறவோம். உங்களை ஒருபோதும் மன்னிக்க மாட்டோம்’ என்று சொல்லுகிற இந்த அரிய முயற்சிதான் இது. அதுமட்டுமல்ல; இது மிகவும் நுட்பமான ஓர் அரசியல்.

காந்தியடிகளைச் சிறுமைப்படுத்துகிற கும்பல் இன்றைக்கு ஆட்சியதிகாரப் பீடத்தில் அமர்ந்திருக்கிறது. காந்தியடிகளின் நன்மதிப்பைச் சிதைக்கிற கும்பல். காந்தியடிகள்மீது தேசம் வைத்திருக்கிற பிம்பத்தைத் தவிடுபொடியாக்குகிற கும்பல். காந்தியடிகளின் தலைமையை




ஏற்றுக்கொண்ட சர்தார்பட்டேலுக்கு வானுயரச் சிலை அமைத்து, 'பட்டேல்தான் உயர்ந்தவர், காந்தி சிறியவர்' என்று காட்டுகிற அற்ப முயற்சி செய்கிற கும்பல் கோலோச்சுகிற இந்தச் சூழலில் காந்தியடிகளின் பெயரில் நூறு நாள் வேலைத்திட்டம் இருந்தது. அந்தப் பெயரையும் மாற்றுகிற அற்ப அரசியல் செய்கிற கும்பல் கோலோச்சுகிற இந்தச் சூழலில் பேச்சுக்குப் பேச்சு 'நாதுராம் கோட்சே ஒரு தேச பக்தர், தேசத் தலைவர்' என்று சொல்வதன் மூலம் காந்தியைப் படுகொலை செய்வது நியாயம் என்று நியாயப்படுத்துகிற கொலைகாரக் கும்பலுக்கு எச்சரிக்கை விடுக்கவேண்டிய இந்தச் சூழலில் காங்கிரஸ் செய்யவேண்டிய வேலையை அண்ணன் கமல்ஹாசன் செய்துகொண்டிருக்கிறார்.

**காந்தியடிகளை ஏன் நாதுராம் கோட்சே சுட்டுக் கொன்றார்?**

தேசிய அளவில் மீண்டும் காந்தியை உயர்த்திப் பிடிக்கவேண்டிய தேவை உள்ளது. காந்தியடிகளின் அர்ப்பணிப்பை மீண்டும் புதிய தலைமுறையினருக்கு எடுத்துச்சொல்ல வேண்டிய தேவை உள்ளது. காந்தியடிகளை ஏன் நாதுராம் கோட்சே சுட்டுக்கொன்றார்? யார் அவர்? அம்பேத்கர் பெயரில் இயக்கம் கண்டவரா? அம்பேத்கரின் சிந்தனைகளை ஏற்றுக்கொண்டவரா? அல்லது பெரியாரின் அரசியலை உள்வாங்கிக் கொண்டவரா? அல்லது மார்க்சியத்தைப் பேசியவரா? இல்லை, காந்தியடிகள் ஏற்றுக்கொண்ட கொள்கையை ஏற்றுக்கொண்டவர்தான். இந்து மதத்தின்மீது நம்பிக்கை உள்ளவர்தான் காந்தியடிகள். இந்துயிசத்தை ஏற்றுக்கொண்டவர் காந்தியடிகள். 'ஹரே ராம்', 'ஹரே ராம்' என்று தனது இறுதிமூச்சு வரையில் அந்த ராமரின் பெயரை உச்சரித்தவர்தான் காந்தியடிகள். நாதுராம் கோட்சே அவரைச் சுட்டுக்கொன்ற போதுகூட, மண்ணில் சரிந்து விழும்போதுகூட 'ஹரே ராம்' என்று அந்த ராமரை எப்போதும்

எண்ணிக்கொண்டே இருந்தவர்தான் காந்தியடிகள். அப்படிப்பட்ட தீவிரமான ராம பக்தரை, இந்துத்துவப் பற்றாளரை, சனாதனத்தின்மீது நம்பிக்கை உள்ளவரை, அடுத்த பிறவி உண்டு என்று நம்பிக்கை உள்ளவரை நாதுராம் கோட்சே ஏன் சுட்டுக்கொன்றார்?

### ஒரே புள்ளியில் பெரியார், அம்பேத்கர், காந்தியடிகள்

இந்து மதத்தையும் அதன் கோட்பாடுகளையும் மிகக் கடுமையாக விமர்சித்த அம்பேத்கரை நோக்கி அவன் துப்பாக்கி நீளவில்லை. 'காந்தியடிகளையும், காங்கிரசையும் ஒழிக்காமல் விடமாட்டேன்' என்று சபதம் ஏற்றுக்கொண்ட பெரியாரை நோக்கி அவனுடைய துப்பாக்கி நீளவில்லை. இந்து மதத்தின்மீது தீவிரப் பற்றுக்கொண்டிருந்த, சனாதனத்தின்மீது நம்பிக்கை கொண்டிருந்த, இம்மை—மறுமைக் கோட்பாட்டில் நம்பிக்கை கொண்டிருந்த காந்தியடிகளை அவன் சுட்டுக்கொன்றதற்கு என்ன காரணம்? இதுதான் மிக முக்கியமான புள்ளி. இதைத்தான் இந்த தலைமுறையினருக்கு, புதிய தலைமுறையினருக்கு, சனநாயகத்தின் மீது நம்பிக்கை உள்ளவர்களுக்கு நாம் எடுத்துச்சொல்ல வேண்டிய தேவையிருக்கிறது.

இந்தப் புள்ளியில்தான் பெரியாரும், அம்பேத்கரும், காந்தியடிகளும் ஒரே புள்ளியில் நிற்கிறார்கள்; இணைந்து நிற்கிறார்கள். அது எந்தப் புள்ளி என்றால், காந்தியடிகள் எவ்வளவு தீவிரமான மதப்பற்றாளராக இருந்தாலும், கடவுள் நம்பிக்கை உள்ளவராக இருந்தாலும், வைணவக் கோட்பாட்டின்மீது ஈடுபாடு உள்ளவராக இருந்தாலும், இராமரின் பக்தராக இருந்தாலும் அவரிடத்தில் ஒரு அரசியல் நிலைப்பாடு, உறுதியான நிலைப்பாடு, தெளிவான நிலைப்பாடு, தொலைநோக்குப் பார்வை உள்ள நிலைப்பாடு இருந்தது. அதுதான் அந்தப் புள்ளி தான் மதச்சார்பின்மை. மதம் வேறு, அரசு வேறு. அரசு விவகாரங்களில் மதம் தலையிடக் கூடாது. மத விவகாரங்களில் அரசு தலையிடக்கூடாது. மதத்திற்கான சுதந்திரத்தை அரசு கட்டுப்படுத்தக்கூடாது. அரசு மதம் சார்ந்து இயங்கக்கூடாது. இந்த நிலைப்பாட்டில் காந்தியடிகள் பின்வாங்கினார். இதுதான் புரட்சியாளர் அம்பேத்கரின் நிலைப்பாடு, இதுதான் பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியாரின் அரசியல் நிலைப்பாடு. இன்றைக்கு பதவியேற்கிறபோது சிலபேர், 'உளமார உறுதியேற்கிறேன்' என்று ஏற்றுக்கொள்வார்கள். சிலபேர் 'கடவுளின் பெயரால் உறுதியேற்கிறேன்' என்று சொல்வார்கள். அதைப்போல இந்திய அரசமைப்புச் சட்டத்தின் முகப்புரையில் 'கடவுளின் பெயரால்' என்ற வார்த்தை இடம்பெற வேண்டும் என்று விவாதித்தார்கள். இந்தியா, இது இந்துக்களின் தேசம் என்ற சொற்றொடர் இடம்பெற வேண்டுமென்று விவாதித்தார்கள். இந்தியாவுக்கு அரச மதம் வேண்டும்; 'இந்துயிசம்' என்ற சொற்றொடர் இடம்பெற வேண்டுமென்று விவாதித்தார்கள். இவையனைத்தும் நிராகரிக்கப்பட்டது. கருத்துவாதம் இருந்தாலும், கடுமையான கருத்து மோதல் இருந்தாலும் அம்பேத்கரும் காந்தியடிகளும் ஜவஹர்லால் நேரு அவர்களும் ஒரே புள்ளியில் இணைந்தார்கள்.

### சங் பரிவார் கும்பலுக்குத் தந்த எரிச்சல்

அதுதான் இந்த அரசு, புத்தம் புதிய அரசு, இந்திய அரசு மதச்சார்பற்ற அரசு. இதை ஏற்றுக்கொள்ள முடியாத சங்பரிவார் கும்பல்தான், அன்றைய இந்து மகா சபை, அன்றைய ஆர்.எஸ்.எஸ் கும்பல் காந்தியடிகளை விட்டுவைக்கக்கூடாது. இவர், இந்துக்களும், முஸ்லிம்களும் ஒரே மண்ணால் செய்யப்பட்ட வெவ்வேறு பாறை என்கிறார், இந்துக்களும், முஸ்லிம்களும் சகோதரர்கள் என்கிறார்; சகோதரத்துவத்தைப் பேசுகிறார்; நல்லிணக்கத்தைப் பேசுகிறார்; ஒற்றுமையைப் பேசுகிறார்; இவரை விட்டுவைக்கக்கூடாது. இந்துக்களும் முஸ்லிம்களும் ஒருவரையொருவர்

வெட்டிப் படுகொலை செய்து இரத்த ஆறு ஓடுகிற நிலையில் நாடு பிரிவினையைச் சந்திக்கிற சூழலில் பாகிஸ்தானுக்கு இந்தியா புதியதொரு தேசத்தைக் கட்டமைப்பதற்கு ஒரு நிதியைத் தரவேண்டும் என்கிற ஒப்பந்தம் ஏற்பட்டு முதல் தவணை, இரண்டாவது தவணை என்று தவணை, தவணையாக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு கடைசித்தவணை வழங்க காலதாமதம் ஏற்பட்ட நிலையில், அந்தப் போர்ச் சூழலிலும், வன்முறை வெறியாட்டம் நடந்த சூழலிலும் காந்தியடிகள் உண்ணாவிரதம் மேற்கொண்டார். நேரு அரசுக்கு வேண்டுகோள் விடுத்தார். ஒப்புக்கொண்டபடி பாகிஸ்தானை நிறுவுவதற்கு கடைசியாகத் தரவேண்டிய தவணைத்தொகையைத் தரவேண்டும் என்று வலியுறுத்தினார். இதுவெல்லாம் ஆர்.எஸ்.எஸ் சங்பரிவார் கும்பலுக்கு எரிச்சலைத் தந்தது.

**மதச்சார்பின்மைக் கோட்பாட்டில் உறுதி**

இந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இடையில் பகைமை மேலும் வளரவேண்டும் என்று விரும்பிய கும்பல், இசுலாமியர்களுக்கு எதிரான வெறுப்பு அரசியலை அப்போதே தொடங்கிவிட்டார்கள். அதற்கு இவர் ஒரு முட்டுக்கட்டையாக இருக்கிறார் என்பதை உணர்ந்துகொண்ட அந்தக் கும்பல் நயவஞ் சகத்தோடு கைகூப்பி தொழுதுகொண்டே சென்று இரண்டு, மூன்று அடி இடைவெளியில் அவருடைய நெஞ்சில் குறிவைத்து சுட்டுப் படுகொலை செய்தது. காந்தியடிகள் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டதற்கு ஒரேயொரு காரணம் ‘மதச்சார்பின்மை’ என்கிற கோட்பாட்டில் அவர் உறுதியாக இருந்தார் என்பதுதான். இந்திய அரசமைப்புச் சட்டத்தின் உயிர் மூச்சுக் கோட்பாடுகளுள் ஒன்று மதச் சார்பின்மை. இரண்டாவது பன்மைத்துவம், மூன்றாவது, கூட்டாட்சி. பல மாநிலங்கள் இருந்தாலும் அந்த மாநிலங்களின் ஒன்றியமாக டெல்லி அரசு இருக்கவேண்டும் என்கிற கூட்டாட்சி. இந்தக் கோட்பாடுகள் பாது காக்கப்பட வேண்டும். ‘மதச்சார்பின்மை’ என்கிற வார்த்தை அதில் இல்லை. ஆனால், அந்தக் கோட்பாடுகள் இடம்பெற்றன. இந்தச் சூழலில்தான், காங்கிரசோடு இன்றைக்கு நாம் ஏன் நிற்கிறோம் என்பதற்கு உரிய காரணம் இருக்கிறது.


நமது **தமிழ்மண்**

அடித்தட்டு மக்களை அரசியல்படுத்தும் கருத்துவெளி

மார்ச் 2026

தமிழ் 20 | மண் 225

ஆசிரியர் - வெளியிடுபவர்

**முனைவர் தொல்.திருமாவளவன்**

பொறுப்பாசிரியர்

**பூவிழியன்**

ஒளி அச்சு

**கவினி**

இதழ் வடிவமைப்பு

**நீல.தமிழேந்தி**

**மெய்யருள்**

மெய்ப்பு

**தமிழன் இளங்கோ**

புகைப்படங்கள்

**சூம் எழில்இமயன்**

பதிவு முகவரி:
எல்.ஐ.ஜி அடுக்ககம்,
எண்: எல் - 12பி, தரைத்தளம்,
சர்வமங்களா குடியிருப்பு,
அசோக் நகர், சென்னை 600 083
பேசி: 97878 54141

மின்னஞ்சல்:
thamizhmannvck@gmail.com

இணையதளம்
www.thamizhmann.in
www.namadhuthamizhmann.blogspot.com

தனி இதழ் : ரூ.15
இதழ் வளர்ச்சி நிதி : ரூ.2000
(ஐந்தாண்டுகள்)
NAMADHU THAMIZHMANN
எனும் பெயரில் வரைவோலை(DD)

### காந்தியடிகள் காட்டிய அக்கறை

காங்கிரசோடு நமக்கு முரண்பாடுகள் இருக்கலாம். காந்தியடிகளோடு முரண்பாடுகள் இருக்கலாம். ஆனால், இந்தத் தேசத்தின் உயிர்மூச்சுக் கோட்பாடாக இருக்கிற மதச்சார் பின்மையைப் பாதுகாப்பதில் நேரு காட்டிய அக்கறை, காந்தியடிகள் காட்டிய அக்கறை, அதைத் தொடர்ந்து இந்திராகாந்தி அம்மையார் காட்டிய அக்கறை. 1976இல் 'மிசா' என்கிற ஒரு சட்டம் கொண்டு வந்தார். இது மிக மோசமான ஒரு சட்டம் தான். இந்தியா முழுவதும் எதிர்க்கட்சிகளை வேட்டையாடிய சட்டம் தான், நெருக்கடி நிலைதான். அதை விமர்சிக்கிறோம் என்றாலும் அந்தச் சூழலில் இந்திராகாந்தி அம்மையார் செய்த மிக முக்கியமான வரலாற்றுச் சிறப்புக்குரிய செயல், இந்திய அரசமைப்புச் சட்டத்தின் முகப்புரையில் திருத்தம் கொண்டுவந்ததுதான். "இப்படியொரு கும்பல் எதிர்காலத்தில் வரும், அவர்கள் ஆட்சியதிகாரத்திற்கு வருவார்கள், இவர்கள் இந்த அரசமைப்புச் சட்டத்தை மதிக்கமாட்டார்கள், தூக்கியெறிந்து விடுவார்கள் என்கிற நிலையை உணர்ந்து 1976இல் ஒரு திருத்தம் கொண்டுவந்து secular, socialist என்கிற இரட்டைச்சொற்களை அரசமைப்புச் சட்டத்தின் முகப்புரையில் இணைத்தவர் இந்திராகாந்தி அம்மையார்.

### துணிச்சலான நிலைப்பாட்டை எடுத்தவர் இந்திராகாந்தி

இந்த இரண்டையும் அரசமைப்புச் சட்டத்தின் முகப்புரையிலிருந்து நீக்கவேண்டுமென்று சுப்பிரமணிய சாமி வழக்குத் தொடுத்தார் உச்சநீதிமன்றத்தில். இந்த இரண்டு சொற்றொடர்களும் அவர்களுக்கு இன்றைக்கும் நெருடல்களாக இருக்கின்றன. இப்படிப்பட்ட ஒரு துணிச்சலான நிலைப்பாட்டை எடுத்தவர் இந்திராகாந்தி அம்மையார். அவரைத் தொடர்ந்து அதே நிலைப்பாட்டில் உறுதியாக இருந்தவர் ராஜீவ்காந்தி. அவரைத் தொடர்ந்து அதே நிலைப்பாட்டில் இன்றைக்கு உறுதியாக நிற்பவர் ராகுல்காந்தி. ஆகவேதான், லோக்சபாவில் அரசமைப்புச் சட்டத்தை உயர்த்திப் பிடித்துக்கொண்டு, 'இந்த அரசமைப்புச் சட்டத்தைப் பாதுகாப்போம்' என்று உறுதிமொழி ஏற்றார் ராகுல்காந்தி. காரணம்? அந்த அரசமைப்புச் சட்டத்தின் உயிர்மூச்சுக் கோட்பாடுகளுள் மிக, மிக முதன்மையான ஒரு கோட்பாடு மதச்சார்பின்மை. இதுதான் இந்தியாவின் விவாதப் பொருளாக இன்றைக்கு மாறியிருக்கிறது. ஒரு கும்பல் மதச்சார்பின்மைக்கு எதிரானது. இன்னொரு அணி, மதச்சார்பின்மைக்கு ஆதரவான அணி.

### காலத்தின் தேவை காந்தியடிகளின் அரசியல்

இன்றைக்கு அண்ணன் கமல்ஹாசன் அவர்களின் தலைமையில் இங்கே, 'காந்தியடிகளை மறவோம்' நிகழ்வில் கூடியிருக்கிறோமே நாம், தி.மு.க தலைமையிலான கூட்டணிக்கட்சித் தலைவர்களெல்லாம் தேர்தலுக்கு முன்பாக ஒரே மேடையில் ஏறுகிற நிகழ்வாக இந்த வரலாற்று நிகழ்வு இன்றைக்கு அமைந்திருக்கிறது. இதனைத் தொடங்கி வைத்திருப்பவர் அண்ணன் கமல்ஹாசன் அவர்கள். அவர் வெறும் நடிகர் அல்ல; அவர் வெறும் தொழில்முறை நடிகர் அல்ல; அவர் வெறும் இயக்கத்தின் தலைவர் அல்ல. அவருக்கு ஒரு தேசியப் பார்வை இருக்கிறது. அவருக்கு ஒரு தொலைநோக்குப் பார்வை இருக்கிறது.

அவருக்கு ஒரு சமூகப் பொறுப்பு இருக்கிறது. அவருக்கு ஒரு அரசியல் கடமை இருக்கிறது. அது இந்த தேசத்தைப் பாதுகாப்பது. மதச்சார்பற்ற அரசாக இதைப் பாதுகாப்பது. அரசமைப்புச் சட்டத்தைப் பாதுகாப்பது. அதற்கு இன்றைய காலத்தின் தேவை காந்தியடிகளின் அரசியல் என்பதை அவர் உணர்ந்திருக்கிறார். அதனால், இந்த நிகழ்வை ஒருங்கிணைத்திருக்கிறார். அவரை நெஞ்சாரப் பாராட்டி, இந்த அரிய வாய்ப்பை எமக்கு வழங்கியமைக்காக எனது மனமுவந்து நன்றியைத் தெரிவித்து, நிறைவு செய்கிறேன். நன்றி. வணக்கம்.

# புதுச்சேரி: வி.சி.க வேட்பாளர் பட்டியல்

## முனைவர் தொல்.திருமாவளவன் அறிவிப்பு

புதுச்சேரியில் காங்கிரஸ் தலைமையிலான கூட்டணியில் தி.மு.க.வுக்கென ஒதுக்கப்பட்ட 14 தொகுதிகளிலிருந்து ‘உழவர்கரை தொகுதியை’ தி.மு.க விடுதலைச் சிறுத்தைகள் கட்சிக்கு ஒதுக்கியது. அந்தத் தொகுதியில் ஆர்.எஸ்.எஸ், பா.ஜ.க.வைச் சார்ந்தவரும், பா.ஜ.க.விலிருந்து விலகி ஓரிரு வாரங்களுக்கு முன்பு காங்கிரஸ் கட்சியில் சேர்ந்தவருமான ஒருவரைத் தற்போது காங்கிரஸ் கட்சி வேட்பாளராக நிறுத்தியுள்ளது. அந்தத் தொகுதி வி.சி.க.வுக்கென ஒதுக்கப்பட்ட பிறகும்கூட அவரை வாபஸ் பெற வைக்காமல் புதுவை காங்கிரஸ் மறுக்கிறது. இதனால், காங்கிரஸ் கூட்டணியில் வி.சி.க.வுக்கு தொகுதி உண்டா இல்லையா? என்பது தெளிவாகாத நிலை ஏற்பட்டிருக்கிறது.

வேட்பு மனுக்களைத் திரும்பப் பெறுவதற்கான காலக்கெடு இன்று பிற்பகல் 3.00 மணியோடு முடிவடைய உள்ளது. இந்நிலையில் காங்கிரஸின் அணுகுமுறை வி.சி.க.வுக்கு மட்டுமல்ல; ஒட்டுமொத்தமாகக் கூட்டணியின் வெற்றி வாய்ப்பையே கேள்விக்குள்ளாக்குவதாக இருக்கிறது. எனவே, வேறு வழியின்றி வி.சி.க வேட்புமனுத் தாக்கல் செய்துள்ள நான்கு தொகுதிகளுக்குமான அதிகாரப்பூர்வமான வேட்பாளர்களை அறிவிக்கிறோம். கடந்த 5 ஆண்டுகளாக புதுச்சேரியைச் சீரழித்துவரும் பா.ஜ.க கூட்டணியை வீழ்த்தி மீண்டும் சமூக நல்லிணக்கமும், வளர்ச்சியில் அக்கறையும் கொண்ட ஆட்சியைப் புதுச்சேரியில் அமைத்திட மதச்சார்பற்ற உணர்வு கொண்ட புதுச்சேரி மக்கள் வி.சி.க வேட்பாளர்களுக்குப் பேராதரவு அளித்து வெற்றி பெறச் செய்யுமாறு கேட்டுக்கொள்கிறோம். **26.03.2026 | அறிக்கை**

## வேட்பாளர் பட்டியல்



**ஊசுடு**
**திரு. பெ.அரியபுத்ரி என்கிற அரிமாத்தமிழன்**

**உழவர்கரை**
**திருமதி. செல்வ.புஷ்பலதா**

**நெட்டப்பாக்கம்**
**திரு. ப.அமுதவன்**

**ஏனாம்**
**திரு. மெல்லம் சீனிவாச ராவ்**

## உழவர்கரை தொகுதியில் மட்டும் கூட்டணியில் போட்டி

### எழுச்சித்தமிழர் அறிவிப்பு

**“புதுச்சேரியில் தி.மு.க-காங்கிரஸ் பேச்சுவார்த்தை காலதாமதமானதால், விடுதலைச் சிறுத்தைகள் கட்சி 4 தொகுதிகளில் தனித்துப் போட்டியிடுவதாக அறிவித்தோம். வேட்புமனுத் தாக்கல் முடிந்த பிறகு சுமூக உடன்பாடு ஏற்பட்டது. இதையடுத்து, இப்போது உழவர்கரை தொகுதியில் மட்டும் கூட்டணியில் போட்டியிடுவது என்றும், நெட்டப்பாக்கம், ஊசுடு, ஏனாம் ஆகிய மூன்று தொகுதிகளில் வாக்குச் சேகரிப்பதை நிறுத்துவது என்றும் விடுதலைச் சிறுத்தைகள் கட்சி முடிவு செய்துள்ளது.**

**புதுச்சேரியில் எங்கள் கூட்டணியின் இடதுசாரிகளுக்கும் இடம் ஒதுக்கத்தான் பேச்சு வார்த்தை நடந்தது. இப்போது, கூட்டணியில் இடதுசாரிகள் இல்லாமல் போனது வருத்தம் தான். இருப்பினும், இதனால் கூட்டணி வெற்றி பாதிக்கப்படாது” என்று கூறினார்.**

**புதுச்சேரி | செய்தியாளர்கள் சந்திப்பு | 05.04.2026**




இரமலான் நோன்பு

# 22ஆம் ஆண்டில் எழுச்சித்தமிழர்

விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் இசுலாமிய சனநாயகப் பேரவையின் சார்பில் சென்னையில் இஃப்தார் மற்றும் சகர் நிகழ்வுகள் ஒருங்கிணைக்கப்பட்டது.

எழுச்சித்தமிழர் அவர்கள் 22ஆம் ஆண்டாக 02.03.2026 முதல் 06.03.2026 வரை வழக்கம் போல ஐந்து நாட்கள் நோன்பு இருந்தார்.

**சென்னை, அபுபேலஸ் விடுதியில் இசுலாமிய உறவுகளுடன் விடியற் காலையில் எழுச்சித்தமிழர் பங்கேற்ற சகர் நிகழ்வுகள்:**

02.03.2026: இ.ச.பேரவையின் மாநிலத் துணைச்செயலாளர் வாணியம்பாடி ஹஃபீஸ், வி.சி.க.வின் கர்நாடக மாநிலச் செயாளர் ஏ.ரியாஸ், இ.ச.பேரவையின் மாநிலத் துணைச் செயலாளர் பின்னத்தூர் முஹமது அய்யூப்

03.03.2026 : இ.ச.பேரவையின் மாநிலத் துணைச் செயலாளர் ரவனை சலீம், தொழிலதிபர் ஏ.ரியாஸ், இ.ச.பேரவையின் மாநிலத் துணைச்செயலாளர் கீழக்கரை ஏ.இஸ்மாயில்

04.03.2026 : இ.ச.பேரவையின் மாநிலத் துணைச்செயலாளர் மீனம்பூர் அப்ரார் உசேன், சென்னை உயர்நீதிமன்ற வழக்கறிஞர் எம்.ராஜா அய்யூப், இ.ச.பேரவையின் மாநிலத் துணைச்செயலாளர் வேலூர் எஸ்.ஏ.ஜாபீர்

05.03.2026 : இ.ச.பேரவையின் மாநிலத் துணைச்செயலாளர் சேலம் ஏ.காஜா மைதீன், ஹலால் இந்தியா குழுமத்தின் நிறுவனர் ஏ.முகமதுஜின்னா, இ.ச.பேரவையின் மாநிலத் துணைச் செயலாளர் கிருஷ்ணகிரி ஜெ.ஆர்.பாபு

06.03.2026 : ஈரோடு மாவட்டச் செயலாளர் எஸ்.எம்.சாதிக், இ.ச.பேரவையின் மாநிலத் துணைச் செயலாளர் குமரி அல்காலித், ஊடகப் பிரிவின் மாநிலத் துணைச்செயலாளர் தென்காசி ஆசிக் உசேன்





**இஃப்தார்**

*02.03.2026* : முகப்பேர் தொழிலதிபர் எஸ்.ரியாஸ் அவர்களின் இல்லத்திலும், *03.03.2026* : தலைமை நிலையச் செயலாளர் இளஞ்சேகுவேரா அவர்களின் தலைமையில் சைதாப்பேட்டையிலும், *04.03.2026* : வழக்கறிஞர் எம்.ராஜா அய்யூப் அவர்களின் இல்லத்திலும், *05.03.2026* : ஹலால் இந்தியா குழுமத்தின் நிறுவனர் ஏ.முகமதுஜின்னா அவர்களின் தலைமையில் திருவல்லிக்கேணியிலும் நடைபெற்றது.

நோன்பை நிறைவு செய்யும் நாளான *06.03.2026* அன்று விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் இசுலாமிய சனநாயகப் பேரவையின் சார்பில் எழும்பூர் ஃபைஸ் மஹாலில் இஃப்தார் மைய நிகழ்வு மாநிலச் செயலாளர் அப்துர் ரஹ்மான் தலைமையில் ஒருங்கிணைக்கப்பட்டது. இந்நிகழ்வில், மனிதநேய மக்கள் கட்சியின் தலைவர் பேரா.ஜவாஹிருல்லா, தமிழ்நாடு வஃபு வாரியத் தலைவர் திரு.நவாஸ்கனி, எம்.பி., எஸ்.டி.பி.ஐ மாநிலத் தலைவர் திரு.நெல்லை முபாரக், இசுலாமியக் கூட்டமைப்பின் ஒருங்கிணைப்பாளர் திரு. பஷீர் அகமது, விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் துணைப்பொதுச் செயலாளர் ஷா நவாஸ், ஊடகவியலாளர் திரு. முத்தார் உள்ளிட்ட இசுலாமிய அமைப்புகளின் முன்னணித் தலைவர்கள் பங்கேற்றனர். நிறைவாக, எழுச்சித்தமிழர் அவர்கள் இஃப்தார் உரை நிகழ்த்தினார்.



## எழுச்சித்தமிழருடன் நோன்பிருந்த சிறுத்தைகள்



**இளஞ்சேகுவேரா, மா.சங்கத்தமிழன், சூம் எழில் இமயன், மகிழ்வரசு, தமிழேந்தி, தயா.நெப்போலியன், வேளச்சேரி இளையா, தங்க. தாமரைவண்ணன், வழ.முத்தமிழ்ப் பாண்டியன், கவிஞர் வெண்ணிலன், வேளச்சேரி மோனீஸ்வரன், வேளச்சேரி ராஜேஷ்.**



பி.ஆர்.டி.எஸ். நிகழ்வு
கேரளா

# நானும் ஸ்ரீகுமாரகுருதேவனின் சீடன்தான்

## எழுச்சித்தமிழர் பெருமிதம்

**கேரள மாநிலம் திருவல்லா பகுதியில் 16.02.2026 அன்று 'PRDS' அமைப்பின் சார்பாக நடைபெற்ற ஸ்ரீகுமாரகுருதேவன் (பொய்காவில்) அவர்களின் பிறந்தநாள் விழா நிகழ்வில் ஆற்றிய உரையின் சுருக்கம்:**

உங்கள் அனைவருக்கும் என்னுடைய பணிவார்ந்த வணக்கம். முதலில் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். தமிழ்நாட்டிலும் தேர்தல் வரவிருக்கிறது.எல்லா அரசியல் கட்சிகளும் தேர்தல் பணிகளைத் தீவிரமாகக் கவனம் செலுத்தி வருகிறார்கள். ஆனாலும், உங்களின் அன்பான அழைப்பையேற்று இந்த நிகழ்வில் பங்கேற்பதற்காக நான் வந்திருக்கிறேன்.

ஸ்ரீகுமாரகுருதேவன் அவர்களின் பிறந்த நாள் விழா வெற்றிகரமாக நடந்து கொண்டிருக்கிறது. அவரது பிறப்பு எளிய மக்களை மீட்பதற்கானதாக அமைந்திருக்கிறது. கேரளாவிலும் சாதியின் பெயரால் எத்தனையோ கொடுமைகளை மக்கள் அனுபவித்திருக்கிறார்கள். அந்தக் கொடுமைகள் அவருக்கும் நேர்ந்திருக்கிறது. ஆகவே, அவர் அதிலிருந்து விடுதலை பெற வேண்டும், வெளியேற வேண்டும் என்று முடிவெடுத்து கிறித்தவத்தைத் தழுவியிருக்கிறார்.

அங்கேயும் தேவாலயங்களில் அந்தப் பாகுபாடுகள் தொடர்ந்திருக்கின்றன. ஆகவே,"அவர் எங்கே சென்றாலும் இந்தக் கொடுமைகள் நீடிக்கின்றன, பாகுபாடுகள் நீடிக்கின்றன. இதிலிருந்து மக்கள் மீள முடியாதா?" என்கிற சிந்தனைக்கு ஆளாகியிருக்கிறார். அதனுடைய விளைவாகத்தான் அவர் 'பிரத்யக்ஷ ரக்ஷா தெய்வ சபை' (PRDS) என்கிற இந்த இயக்கத்தை உருவாக்கி 'சாதியற்ற ஒரு சமூகத்தைப் படைக்க வேண்டும், மதமில்லாத ஒரு சமூகத்தை உருவாக்க வேண்டும்' என்று கனவு கண்டிக்கிறார். தமிழ்நாட்டில் இவரைப்போல

வைகுண்ட சுவாமிகள் ஆன்மிகத் தளத்தில் தோன்றினார். தமிழ்நாட்டில் அதைப்போல இராமலிங்க சுவாமிகள் இவர்களுக்கெல்லாம் முன்னோடியாக உருவானவர். அவர் முருக பக்தராக இருந்தார். முருகனைத் தான் கண்டதாகவும் பதிவு செய்திருக்கிறார். ஆனால், கடைசிக்காலத்தில் மதமும் வேண்டாம், சாதியும் வேண்டாம், ‘அருட்பெரும் ஜோதி, தனிப்பெரும் கருணை’ என்று ஒரு மாபெரும் இயக்கத்தை முன்னெடுத்தார். அவரும் இப்படி வெள்ளுடைதான் உடுத்தினார். எந்த நிறமும் தேவையில்லை.

காவி நிறமோ அல்லது மஞ்சள் நிறமோ என்று எந்த நிறமும் வேண்டாம்; வெள்ளுடை அணிவோம் என்று மக்களுக்கு வழிகாட்டினார். சாதியைத் தவிர்ப்போம், மதச்சடங்குகளைத் தவிர்ப்போம், கடவுள் என்பது கருணை வடிவில்தான் இருக்கிறார், ஜோதியின் வடிவில்தான் இருக்கிறார். கருணைதான் ஜோதி, ஜோதிதான் கருணை. கருணைதான் கடவுள், ஜோதிதான் கடவுள் என்று மக்களுக்குப் போதித்தவர் வள்ளலார் என்கிற இராமலிங்க சாமிகள். அதே வழியில்தான் அதே கருத்தை இந்த மண்ணில் பரப்பிய பெருமைக்குரியவர் நம்முடைய ஸ்ரீகுமாரகுருதேவன் அவர்கள்.

### கொடுமைகள் நிலவிய காலம்

அய்யா வைகுண்டர் சாமித்தோப்பில், இன்றைக்கு அது கன்னியாகுமரி மாவட்டமாக தமிழ்நாட்டில் இணைந் திருக்கிறது. வைகுண்டர் காலத்தில் இது திருவிதாங்கூர் மகாராஜா கட்டுப்பாட்டில் இருந்த பகுதி. நாஞ் சில் பகுதி என்று அழைக்கப்படுகிற கன்னியாகுமரி மாவட்டம். அப்போது அங்கே நிலவிய கொடுமை, பெண்கள் மேலாடை அணிய முடியாத நிலை இருந்தது. இடுப்பில் கட்டியிருக்கின்ற துண்டைக்கூட தோளில் போடக்கூடாது, அக்குளில்தான் வைக்கவேண்டும் என்ற கொடுமை இருந்தது. நெருங்கினால் தீட்டுப்பட்டுவிடும், கண்ணால் பிறரைப் பார்த்தால் தீட்டுப்பட்டுவிடும். இப்படிப்பட்ட கொடுமைகள் இருந்த காலத்தில், கொடுமை நிலவிய காலத்தில் சாமித்தோப்பில் உருவானவர்தான் அய்யா வைகுண்டர்.

அவரும், “கடவுள் உனக்குள்ளேதான் இருக்கிறார், உன் உள்ளத்திற்குள்ளேதான் இருக்கிறார், நீ நிலைக்கண்ணாடி வைத்துப் பார். அந்தக் கண்ணாடியில் உன் உருவம்தான் தெரியும். எனவே, நீயே உனக்குக் கடவுள்” என்று சொன்னவர் அய்யா வைகுண்டர். அவரும் சாதிக்கொடுமைகளை எதிர்த்தவர். தீண்டாமைக் கொடுமைகளை எதிர்த்தவர். சாதியின் பெயரால், மதத்தின் பெயரால் நிலவிய கொடுமைகளை எதிர்த்தவர். “துண்டையெடுத்து தலைப் பாகை கட்டிக்கொள்; மண்ணை யெடுத்து நெற்றியில் பூசிக்கொள், கோயிலின் கருவறைக்குள் ஆளுயர நிலைக்கண்ணாடியை வை, உள்ளே சென்றால் உன் உருவம்தான் உனக்குத் தெரியும், விக்ரகம் வேண்டாம்” என்று சொன்னவர் ஆன்மிகத் தளத்தில் அய்யா வைகுண்டர்.

### சாதி வேண்டாம், சமத்துவம் வேண்டும்

அதைப்போல ஸ்ரீநாராயண குரு இதே கேரளா மண்ணில் தோன்றியவர். பல மதங்களாக மக்கள் சிதறிக் கிடக்கக் கூடாது; பல சாதிகளாகச் சிதறிக் கிடக்கக்கூடாது; பாகுபாடுகள் இருக்கக்கூடாது; கொடுமைகள் இருக்கக்கூடாது; ஒரே மதம் அது மனிதநேயம்தான். எல்லோரும் சமம் என்கிற கொள்கையை வரையறுத்தவர் ஸ்ரீநாராயண குரு. அந்த வரிசையில் ஸ்ரீகுமாரகுருதேவன் அவர்களும் ‘மதம் வேண்டாம், சாதி வேண்டாம், சமத்துவம் வேண்டும்’ என்று சொன்ன ஒரு புரட்சியாளர். அவருடைய பெயரில் இன்றைக்கு ‘PRDS’ வெற்றிகரமாக இயங்குகிறது. கல்வி நிறுவனங்களை நடத்துகிறது; மக்களை நல்வழிப்படுத்துகிறது; சமத்துவத்திற்காகப் போராடுகிறது என்பதை எண்ணி நான் பெருமைப்படுகிறேன், மகிழ்ச்சியடை கிறேன். அந்தக் கொள்கைகளைப் பரப்புகிற இயக்கமாகத்தான் என்னுடைய தலைமையில் இருக்கிற விடுதலைச்




சிறுத்தைகள் கட்சி தமிழ்நாட்டில் இயங்கிக் கொண்டிருக்கிறது.

அந்த வகையில்தான், இன்றைக்கு இந்தச் சபையில் நானும் உங்களோடு அமரமுடிகிறது, உங்களிடையே பேச முடிகிறது. ஒரு வகையில் நானும் ஸ்ரீகுமாரகுருதேவ் சீடன் என்று சொல்லிக் கொள்வதில் பெருமைப் படுகிறேன். 'சாதி வேண்டாம்' என்று சொல்கிற ஒவ்வொருவரும் அவருடைய சீடன்தான். மதம் வேண்டாம்; பாகுபாடு வேண்டாம்; கொடுமைகள் வேண்டாம்; சமத்துவம் வேண்டும் என்று சொல்கின்ற ஒவ்வொருவரும் அவருடைய மாணாக்கர்கள்தான்.

அந்த வகையில், இந்த அவையில் நின்று பேசக்கூடிய வாய்ப்பை எமக்கு வழங்கிய 'PRDS' நிறுவனத்திற்கு தலைவர் சதாசிவம் உள்ளிட்ட அனைவருக்கும் என்னுடைய நன்றியை இந்த நேரத்தில் பதிவு செய்து, விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் சார்பில் கேரள அரசுக்கு நான் விடுக்கின்ற வேண்டுகோள், இரண்டு கோரிக்கைகள், முதலமைச்சருக்கு முன்னால் பேசுகின்ற வாய்ப்புக் கிட்டவில்லை.

ஆனால், உங்களின் சார்பில் அவரை விரைவில் சந்தித்து, இந்தக் கோரிக்கைகள் அடங்கிய மனுவை நான் வழங்கலாம் என்று எண்ணியிருக்கிறேன். இரண்டு கோரிக்கைகளில் ஒன்று, சபரியில் உருவாகிக்கொண்டிருக்கிற விமான நிலையத்திற்கு 'ஸ்ரீகுமாரகுருதேவ் விமான நிலையம்' என்று பெயர் சூட்டவேண்டும். இது கேரள அரசுக்கு நான் விடுக்கின்ற வேண்டுகோள். அதுபோல், விழிஞ்சம் பகுதியில் உருவாகியிருக்கிற துறை முகத்திற்கு 'மகாத்மா அய்யங்காளி' பெயர் சூட்டவேண்டும்.

அய்யங்காளி, ஸ்ரீகுமாரகுருதேவ் அவர்களைப்போல ஆன்மிகத் தளத்தில் செயல்படாவிட்டாலும் புரட்சியாளர் அம்பேத்கரைப்போல சாதியக் கொடுமைகளை எதிர்த்துப் போராடியவர், பள்ளிக் கூடங்களை அமைத்தவர், எளிய மக்களுக்குக் கல்வியைத் தந்தவர், மிகப் பெரும் புரட்சியாளராக இந்த மண்ணில் வாழ்ந்தவர்.

எனவே, விழிஞ்சம் துறைமுகத்திற்கு 'மகாத்மா அய்யங்காளி' பெயர் சூட்ட வேண்டும்என்று இரண்டுகோரிக்கைகளை விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் சார்பில் இந்த மாபெரும் அவையில் முன்வைத்து, நிறைவில் இது தொடர்பாக முதலமைச்சர் அவர்களைச் சந்தித்து கோரிக்கை மனு ஒன்றை வழங்குவோம் என்பதைச் சொல்லி, இந்த வாய்ப்புக்கு நன்றி கூறி நிறைவுசெய்கிறேன். நன்றி. வணக்கம்.

## இந்தித் திணிப்பு எதிர்ப்புப் போராளி திலீபனுக்கு எழுச்சித்தமிழர் அஞ்சலி



சென்னையில் இந்தித் திணிப்புக்கு எதிராகப் போராடி உயிர் நீத்த ‘மே 17’ இயக்கத்தின் தோழர் சிவா என்கிற திலீபன் அவர்களின் திருவுடலுக்கு 19.03.2026 அன்று மலர்மாலை வைத்து அஞ்சலி செலுத்தினார் எழுச்சித்தமிழர்.

## அமெரிக்க ஏகாதிபத்தியத்தால் படுகொலை செய்யப்பட்ட அலி காமினி நினைவேந்தல்:




அமெரிக்கா நடத்திய வான்வழித் தாக்குதலில் ஈரானின் உச்ச தலைவர் அலி காமெனி படுகொலை செய்யப்பட்டார். இதனையடுத்து, சென்னை இராயப்பேட்டைப் பகுதியில் தமிழ்நாடு ஷியா முஸ்லிம் ஜமாஅத் ஏற்பாட்டில் 08.03.2026 அன்று நடைபெற்ற இஸ்லாமிய உம்மத்தின் தலைவர் தியாகி ஆயத்துல்லா அலி காமெனி அவர்களின் நினைவேந்தல் நிகழ்வில் எழுச்சித்தமிழர் பங்கேற்றார்.




### அம்பேத்கர் இயக்கங்களை அரவணைத்தது குறித்து

# இடதுசாரி இயக்கங்கள் சுயவிமர்சனம் செய்யவேண்டும்!

**எழுச்சித்தமிழர் தோழமைச்சுட்டு**

**சென்னை, வள்ளுவர்கோட்டம் அருகில் 01.02.2026 அன்று நடைபெற்ற இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் நூற்றாண்டு நிறைவு விழாவில் ஆற்றிய உரையின் சுருக்கம்:**

உங்கள் அனைவருக்கும் என்னுடைய பணிவார்ந்த வணக்கம்.

ஆதிக்கத்தை எதிர்க்க முடியும், ஆதிக் கத்தை ஒடுக்க முடியும், சுரண்டலை எதிர்க்க முடியும் என்கிற நம்பிக்கையை விதைத்த இயக்கம் கம்யூனிஸ்ட் கட்சி. முதலாளித்துவத்தை எதிர்க்க முடியும் என்கிற நம்பிக்கையை தொழிலாளர் களிடையே விதைத்த இயக்கம். தொழிலாளர்களை அரசியல்படுத்தி, அமைப்பாக்கி, அணிதிரட்டி முதலாளித் துவத்திற்கு எதிரான அறப்போர்களை நடத்தி சாதித்துக் காட்டிய இயக்கம் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, இடதுசாரி இயக்கங்கள். பெரும் நிலவுடைமைச் சக்திகளாக இருக்கிற பண்ணையார்களை எதிர்த்துப் போரிட முடியும் என்கிற




நம்பிக்கையை காலம் காலமாக கழனிகளில் உழன்று கொண்டிருந்த உழவர் பெருங்குடி மக்களை அமைப்பாக்கிய பெருமைக்குரிய இயக்கம் இடதுசாரிகள் கட்சி.

‘சாதி ஆதிக்கத்தையும் எதிர்த்துப் போரிட முடியும்’ என்பதற்கு இன்றைக்கும் சாட்சியமாக இருக்கிற இயக்கம் இடதுசாரி இயக்கம், கம்யூனிஸ்ட் கட்சி. இந்தச் சமூகத்தில் நிலவுகிற வர்க்க முரண்களை எதிர்த்து, சாதிய முரண்களை எதிர்த்து, பாலின முரண்களை எதிர்த்து அந்தப் பாகுபாடுகளைக் களையவேண்டும் என்பதற்கான முற்போக்கு அரசியலை இந்த மண்ணில் விதைத்த பெருமைக்குரிய இயக்கம், தேசிய அளவில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியும், அதனைத் தொடர்ந்து இயங்குகிற இடதுசாரி கட்சிகளும் ஆகும்.

இந்த மண்ணில் இடதுசாரி இயக்கங்களால் தான் விளிம்புநிலை மக்களிடையே மிகப்பெரிய அளவில் விழிப்புணர்வு ஏற்பட்டது என்பதை யாரும் மறுத்துவிட முடியாது. அவர்களை அரசியலாக்கியதில் அமைப்பாக்கியதில் மிகப்பெரிய பங்களிப்பு இடதுசாரிகளுக்கு உண்டு. அதற்காக இடதுசாரிகள் செய்த தியாகங்கள் அளப்பரியவை. சாதி, மதம், மொழி, இனம், தேசம் என்கிற அடையாளங்களைத் தாண்டி உழைக்கும் மக்களை, விளிம்புநிலை மக்களை நேசிக்கிற இயக்கம் இடதுசாரி இயக்கம்.

**போர்க்குணத்தை விதைத்த இயக்கம் இடதுசாரிகள் இயக்கம்**

சாதியைப் பிடித்துக்கொண்டு தொங்குவதோ, மதத்தைப் பிடித்துக் கொண்டு தொங்குவதோ, மொழி, இனம் என்கிற அடிப்படையிலான தேசியவாதத்தைப் பிடித்துக்கொண்டு தொங்குவதோ முற்போக்கான அரசியல் இல்லை. உழைக்கிறவர்கள் யாராக இருந்தாலும், எந்த மொழியைப் பேசக்கூடியவர்களாக இருந்தாலும், எந்த மதத்தைப் பின்பற்றக் கூடியவர்களாக இருந்தாலும், எந்தத் தேசத்தைச் சார்ந்தவர்களாக இருந்தாலும் அவர்களுக்காகப் போராடவேண்டும் என்கிற போர்க்குணத்தை விதைத்த இயக்கம் இடதுசாரிகள் இயக்கம்.

அதனால்தான், சே குவேரா உருவாக முடிந்தது. அதனால்தான், மாவோ உருவாக முடிந்தது. இது ‘எந்தக் காலத்திலும் சமூகக் கட்டமைப்பை மாற்றவே முடியாது’ என்று முடங்கிக்கிடந்த மக்களை அமைப்பாக்கித் திரட்டி ரஷ்யாவில் ஜார் மன்னர்களை வீழ்த்தி ஒரு சனநாயகப் புரட்சியை நிகழ்த்திக் காட்டிய இயக்கம் இடதுசாரி இயக்கம்.

**இடதுசாரி அரசியல்**

காலம் காலமாக மக்கள் இப்படியே அடிமைத்தளத்தில் உழல்கிறார்கள். அதற்குப் பழகிப் போனார்கள். இனி அவர்களை ஒன்றும் செய்ய இயலாது என்று எண்ணாமல், அவர்களை அரசியல் படுத்த முடியும், அமைப்பாக்க முடியும்,

வெகுண்டெழச் செய்ய முடியும், படை கட்ட முடியும், ஆதிக்கத்தை எதிர்த்துப் போரிட முடியும் என்கிற நம்பிக்கையை விதைத்து சோவியத் புரட்சியைச் சாதித்துக் காட்டிய இயக்கம் இடதுசாரி இயக்கம். அதனைப் பின்பற்றி சீனாவில் ‘மக்கள் சீனம்’ அமைந்தது. பண்பாட்டுப் புரட்சி நிகழ்ந்தது. இப்படி உலகளாவிய அளவில் எங்கெல்லாம் மனிதகுலம் அடக்குமுறைக்கு ஆளாகிறதோ, உழைப்புச் சுரண்டலுக்கு உள்ளாகிறதோ அங்கெல்லாம் செங்கொடி பறக்கும் என்கிற சிந்தனையை விதைத்த அரசியல்தான் இடதுசாரி அரசியல்.

உலகளாவிய அளவில் வலதுசாரி களுக்கு மிகப்பெரிய சிம்ம சொப்பனமாக உருவான இயக்கம்தான் இடதுசாரி இயக்கம். இந்தியாவிலும் அப்படி ஒரு நூறாண்டு காலம் இந்த இயக்கம் அளப்பரிய சாதனைகளைச் செய்துகாட்டியிருக்கிறது. அதற்கு நம் தமிழ்மண்ணே ஒரு சான்று. அம்பேத்கர் பெயரில் இயக்கங்கள் உருவாகுவதற்கு முன்பே, பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியாரின் தலைமையிலான இயக்கங்கள் இந்த மண்ணில் உருவாகுவதற்கு முன்பே, அவை நிறைந்து பரவுவதற்கு முன்பே ஒடுக்கப்பட்ட மக்களை அமைப்பாக்கிய இயக்கம், தஞ்சை கீழ்வெண்மணிக்கான விடுதலை இயக்கத்தை நடத்திய இயக்கம், சாதி ஒழிப்பை முன்னிறுத்திய இயக்கம், நிலவுடைமை ஆதிக்கத்தை எதிர்த்த இயக்கம், அதற்காகச் சிந்திய இரத்தம் அளப்பரியது. சந்தித்த நெருக்கடிகள் அளப்பரியவை. அப்படி இந்த தமிழ்மண்ணில் இத்தனை சாதனைகளைப் படைத்ததைப்போல இந்தியாவில் எல்லா மாநிலங்களிலும் இன்றைக்கும் செங்கொடியினர் நடத்தி யிருக்கிற சாதனைகளின் சுவடுகள் மறைந்துவிடவில்லை.

#### அடையாள அரசியலைத் தகர்க்கும் புரட்சிகர அரசியல்

இன்றைக்கும் ஒடுக்கப்பட்ட மக்களுக்காக, பழங்குடி மக்களுக்காக ஆயுதம் ஏந்திக் களத்தில் நிற்பவர்கள். அவர்களுக்கு நாடாளுமன்ற சன நாயகத்தின்மீது நம்பிக்கை இல்லாமல் இருக்கலாம், தேர்தல் அரசியல்மீது நம்பிக்கை இல்லாமல் இருக்கலாம், நாடாளுமன்ற சனநாயகத்தை நம்பி களத்தில் நிற்கிற நம்மீது அவர்களுக்கு முரண்பாடு இருக்கலாம்,

ஆனாலும், அவர்கள் நமக்காகப் போராடுகிறவர்கள். இன்றைக்கு கார்ப்பரேட்மயமாவதை எதிர்க்கிறவர்கள், முதலாளித்துவ சுரண்டலை எதிர்த்து நிற்பவர்கள், எல்லாவற்றையும்விட ஆதிக்க சாதிவெறியர்களை எதிர்த்து இந்த ஒடுக்கப்பட்ட மக்களின் விடுதலைக்காக, பழங்குடியின மக்களின் விடுதலைக்காகக்

> **ஒடுக்கப்பட்ட மக்களை அமைப்பாக்கிய இயக்கம், தஞ்சை கீழ்வெண்மணிக்கான விடுதலை இயக்கத்தை நடத்திய இயக்கம், சாதி ஒழிப்பை முன்னிறுத்திய இயக்கம், நிலவுடைமை ஆதிக்கத்தை எதிர்த்த இயக்கம், அதற்காகச் சிந்திய இரத்தம் அளப்பரியது. சந்தித்த நெருக்கடிகள் அளப்பரியவை!**

கடுமையான நெருக்கடிகளை, சவால்களைக் களத்தில் சந்தித்துக் கொண்டிருப்பவர்கள் இடதுசாரிகள். அவர்கள் மார்க்சிஸ்ட், லெனினிஸ்ட் என்கிற பெயரில் இருக்கலாம்; மாவோயிஸ்ட் என்கிற பெயரில் இருக்கலாம்; ஆனாலும், அது இடதுசாரி அரசியல். அது முற்போக்கு சனநாயக அரசியல்.

அடையாள அரசியலைத் தகர்க்கும் புரட்சிகர அரசியல். நாம் நம்புகின்ற இந்த நாடாளுமன்ற சனநாயகத்தை அவர்கள் மறுதலிக்கலாம். ஆனால், அவர்கள் மக்களுக்காக இருக்கிறார்கள். ஆகவே, இந்தியா முழுவதும் இன்றைக்கு

ஒடுக்கப்பட்டவர்களுக்காக, உழைக்கிற மக்களுக்காக, விளிம்புநிலை மக்களுக்காக, பெண்களுக்காக, தொழிலாளர்களுக்காக, உழவர்களுக்காகச் சிந்திக்கிற இயக்கமாக, செயல்படுகிற இயக்கமாக, புரட்சிகர அரசியலைக் கற்பிக்கிற இயக்கமாக இடதுசாரி இயக்கங்கள் இருக்கின்றன என்பதை நாம் இன்னும், இன்னும் வெகுமக்களிடத்தில் கொண்டுபோய்ச் சேர்க்க வேண்டும்.

**அம்பேத்கர் இயக்கமும் இடதுசாரி இயக்கம் தான்**

இடதுசாரி இயக்கங்களின் இன்னொரு வடிவமாகத்தான் இந்த மண்ணில் பெரியார் இயக்கங்கள், இடதுசாரி இயக்கங்களின் இன்னொரு பரிணாமமாகத்தான் புரட்சியாளர் அம்பேத்கரின் சிந்தனைகளைத் தாங்கி நிற்கின்ற அம்பேத்கர் இயக்கங்கள். அம்பேத்கர் இயக்கங்கள் சாதிய இயக்கங்கள் அல்ல. பெரியார் இயக்கமும் திராவிட அரசியல் என்கிற அடிப்படையில் ஒரு குறிப்பிட்ட நிலப்பரப்புக்குள்ளே முடங்கிக்கிடக்கிற அரசியல் அல்ல. அதுவும் இடதுசாரி அரசியல்தான். அம்பேத்கர் இயக்கமும் இடதுசாரி இயக்கம் தான். இடதுசாரி சக்திகள் இந்த அமைப்புகளோடு இணக்கமாகவும், நெருக்கமாவும், தீவிரமாகவும் இணைந்து பணியாற்றவேண்டிய தேவையிருக்கிறது.

**தோழமையோடு முன்வைக்கிறேன்**

நான் அவ்வப்போது இடதுசாரிகளின் மேடைகளில் சொல்வதுண்டு, "மாயாவதி, ராம்விலாஸ் பாஸ்வான், ராம்தாஸ் அத்வாலே போன்ற தலைவர்கள் எல்லாம் வலதுசாரிகளோடு போய்விட்டார்கள் என்று நாம் விமர்சிக்கிறோம். அந்த வலதுசாரிகள் இந்தத் தலைவர்களை நெருங்கி, அரவணைத்து அவர்களைத் தன்வயப்படுத்துவதற்கு மேற்கொண்ட முயற்சிகளைப்போல், "இடதுசாரி இயக்கங்கள் எந்த அளவுக்கு அம்பேத்கர் இயக்கங்களை அரவணைத்திருக்கிறோம் என்பதை ஒரு சுயவிமர்சனமாகப் பார்க்க வேண்டும்" என்று நான் சொல்வதுண்டு. தோழமையாக இதை நான் முன்வைப்பதுண்டு. அம்பேத்கர் இயக்கங்களை சாதிய இயக்கங்களாகப் புறந்தள்ளி, ஒதுக்கிவிட்டால் அவர்கள் வலதுசாரிகளோடு சேர்வதற்கான சூழல்தான் உருவாகும். சாதி ஒழிப்பை முன்னிறுத்துகிற எந்த இயக்கமும் வலதுசாரி இயக்கம் இல்லை. சுரண்டலை எதிர்த்துப் போராடுகிறவர்கள் அம்பேத்கர் பெயரில் இயங்கினாலும், பெரியார் பெயரில் இயங்கினாலும் அவர்கள் முற்போக்கு சனநாயக சக்திகள்தான்; இடதுசாரி சக்திகள் தான்.

எனவே, இன்றைக்கு இந்திய மண்ணைப் பொறுத்தவரையில் அகில இந்திய அளவில் சிறுபான்மை மக்களின் நலன்களுக்காகவும், ஒடுக்கப்பட்ட மக்களின் நலன்களுக்காகவும், இதர விளிம்புநிலைச் சமூகத்தினரின் நலன்களுக்காகவும் பாடாற்ற வேண்டிய பொறுப்பும், அதற்குத் தலைமை தாங்கவேண்டிய பொறுப்பும் இடதுசாரிகளுக்கு உண்டு என்று நான் பெரிதும் நம்புகிறவன். அதைத் தொடர்ந்து வலியுறுத்த விரும்புகிறேன். இந்த உறவு தேர்தல் களத்தையும் தாண்டிய உறவாக வலிமை பெற வேண்டும். நமக்கு தேர்தலில் வெற்றி, தோல்வி என்பதல்ல. தமிழ்நாட்டைச் சூழ்ந்திருக்கிற வலதுசாரி அரசியலை, சனாதன அரசியலை முறியடிப்பதற்கு தி.மு.க தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி வரிந்து கட்டிக்கொண்டு களத்தில் நிற்கிறது. அண்ணன் தளபதி அவர்களின் தலைமையில் வீரியமாக இயங்குகிறது. இந்தக் கூட்டணியைச் சிதறடிக்கவேண்டும், சிதைக்கவேண்டும் என்று சூதுமதியாளர்கள் சூழ்ச்சி செய்கிறார்கள். அந்தச் சூழ்ச்சிகளை முறியடித்து, 'தமிழ்மண்ணில் உங்களுக்கு வேலையில்லை' என்று விரட்டியடிப்பதற்கான நாட்கள் மிகச் சொற்பமாக இருக்கின்றன. களம் நெருங்கிவிட்டது; காலம் கனிந்துவிட்டது. மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியால் தான் இந்தியாவுக்கு ஒரு விடிவுகாலம் பிறக்கும் என்பதைச் சொல்லி வாய்ப்புக்கு நன்றிகூறி நிறைவுசெய்கிறேன். நன்றி. வணக்கம்.

ஈரான் மீதான ஏவுகணை தாக்குதல்:

# இந்திய நாடெங்கும் சமையல் எரிவாயு தட்டுப்பாடு! எஸ்மா சட்டத்தைத் திணிக்கும் மோடி அரசின் போக்கைக் கண்டிக்கிறோம்!

## முனைவர் தொல்.திருமாவளவன் கண்டனம்

ஈரான் நாட்டை அமெரிக்காவும் இஸ்ரேலும் தாக்கத் தொடங்கியதன் காரணமாக வளைகுடா நாடுகளில் இருந்து இந்தியாவுக்கு வரும் எரிவாயு, கச்சா எண்ணெய் முதலானவை வர முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் இந்தியா முழுவதும் சமையல் எரிவாயு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. உணவகங்கள் மூடப்படுகின்றன. இந்தச் சூழ்நிலையை முன்னுணர்ந்து முன்னெச்சரிக்கையான நடவடிக்கைகளை எடுக்காமல் இந்திய ஒன்றிய அரசு மெத்தனமாக இருந்ததே இதற்கு காரணம். பொதுமக்களின் நலன்களில் அக்கறை செலுத்தாமல், அரசியல் பொறுப்புணர்வோடு செயல்படாத ஒன்றிய பா.ஜ.க அரசின் போக்கை மிக வன்மையாகக் கண்டிக்கிறோம். சமையல் எரிவாயு தட்டுப்பாடின்றிக் கிடைப்பதற்கு உடனடியாக போர்க்கால நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று வலியுறுத்துகிறோம்.

ஈரான் நாட்டை அமெரிக்கஇஸ்ரேலியப் படைகள் தாக்குவதற்கான தயாரிப்புகளை செய்து கொண்டிருந்தபோதே, இந்தியாவில் கச்சா எண்ணெய், சமையல் எரிவாயு மற்றும் தொழிற்சாலைகளுக்கான எரிவாயு போற்றவற்றுக்குத் தட்டுப்பாடு ஏற்படும் என்று பலரும் எச்சரித்தனர். ஆனால், அந்த எச்சரிக்கைகளை மதிக்காமல் மோடி அரசு அலட்சியமாக இருந்தது. இப்போது வளைகுடா நாடுகளில் இருந்து எண்ணெய், எரிவாயு விநியோகம் முற்றிலுமாகத் தடை செய்யப்பட்டுள்ளது. இந்த நிலையில் என்ன செய்வதென்று தெரியாமல் ‘எஸ்மா சட்டத்தை’ ஒன்றிய பாஜக அரசு பிறப்பித்துள்ளது. நாடு முழுவதும் உணவகங்கள் மூடப்படுகின்றன. மாணவர் விடுதிகளில் உணவு வழங்கமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

வீடுகளுக்கான சமையல் சிலிண்டர் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. ‘சில வாரங்களுக்கு கையிருப்பு உள்ளது’ என்று ஒன்றிய அரசு சொன்னாலும் பெரும்பாலான மாநிலங்களில் சிலிண்டர் விநியோகம் செய்ய முடியவில்லை. மக்கள் சமைத்து சாப்பிடுவதற்கே திண்டாடும் நிலை ஏற்பட்டுள்ளது. உள்நாட்டு உற்பத்தியை அதிகரிக்கச் சொல்லியிருக்கிறோம் என்று மோடி அரசு சொன்னாலும் அது உடனடியாக நடக்கப் போவதில்லை. இந்தக் குழப்பங்களுக்கு மோடி அரசின் கையாலாகத்தனமே காரணம்.

கொரோனா வந்த போதும், ரூபாய் நோட்டுகள் செல்லாது என அறிவிக்கப்பட்ட போதும் இதே போலத்தான் எந்த முன்னெச்சரிக்கையும் இல்லாமல் மோடி அரசு நடந்து கொண்டது. அதனால் கொரோனாவின்போது இலட்சக்கணக்கான உயிரிழப்புகள் ஏற்பட்டன. இப்போதும் மோடி அரசு அதே போலத்தான் நடந்து கொள்கிறது.

நாட்டுக்கு எந்தவொரு நெருக்கடி வந்தாலும் மக்களைக் காப்பாற்ற வேண்டும் என்ற அக்கறை இல்லாமல் தனது கார்ப்பரேட் கூட்டாளிகளுக்கு அதில் எவ்வளவு லாபம் பார்க்கலாம் என்ற விதத்திலேயே மோடி அரசு செயல்படுகிறது. இப்போதும் கூட

அமெரிக்காவில் எண்ணெய் சுத்திகரிப்பு செய்ய மோடியின் கூட்டாளி அம்பானிக்கு லைசன்ஸ் கொடுக்கப்பட்டிருக்கிறது. அமெரிக்காவை நெருக்கடியிலிருந்து காப்பாற்றுவதற்கு அம்பானிக்கு உதவும் மோடி அரசு இந்திய மக்களைப் பற்றி கொஞ்சமும் கவலைப்படவில்லை.

எஸ்மா சட்டம் பிறப்பிக்கப்பட்டதாலே எரிவாயு விநியோகம் முறையாக நடந்து விடும் என்று நம்புவதற்கு இல்லை. எஸ்மா சட்டத்தையும் தவறாகப் பயன்படுத்தவே மோடி அரசு முயற்சிக்கும். எனவே இப்படி நாடகமாடி மக்களை ஏய்ப்பதை நிறுத்திக்கொண்டு உருப்படியாக மக்களுக்கு உதவுவது எப்படி என ஒன்றிய அரசு சிந்திக்க வேண்டும். போர் முடிந்தாலும்கூட எரிவாயு விநியோகம் சீரடைய பல மாதங்கள் பிடிக்கலாம். எனவே, மக்களுக்கு உதவும் இடைக்கால நடவடிக்கைகளை ஒன்றிய அரசு எடுக்கவேண்டும். மின்சார அடுப்புகளை மானிய விலையில் கிடைக்கச் செய்யவேண்டும். கிராமப்புற மக்களுக்குக் கூடுதலாக மாதம் 10லிட்டர் மண்ணெண்ணெய் இலவசமாக வழங்கவேண்டும். சோலார் மின்வசதி ஏற்படுத்திக்கொள்ள உணவகங்களுக்கு மானியம் வழங்கவேண்டும். தேவையான இடங்களில் மையப்படுத்தப்பட்ட சமையல்கூட வசதியை உருவாக்கி இலவசமாக உணவு வழங்கவேண்டும். இவற்றுக்கான நிதிச்சுமையை வழக்கம் போல மாநிலங்களின் தலையில் கட்டாமல் எவருக்கும் தெரியாமல் ஒளித்து வைத்திருக்கும் ‘பிஎம் கேர்ஸ்’ நிதியிலிருந்து கொடுக்க வேண்டும் என வலியுறுத்துகிறோம்.

**11.03.2026 | அறிக்கை**

## தமிழ்நாட்டைத் தொடர்ந்து வஞ்சிக்கும் என்.டி.ஏ அரசைக் கண்டித்து ஆர்ப்பாட்டம்



**‘தமிழ்நாட்டுக்குத் திட்டங்களும் இல்லை; அடுப்பு எரிக்க கேஸ் சிலிண்டரும் இல்லை.தமிழ்நாட்டைத் தொடர்ந்து வஞ்சித்து வரும் NDA அரசையும் அதன் அடிமைக் கூட்டணியையும்’ கண்டித்து மதச் சார்பற்ற முற்போக்குக் கூட்டணி சார்பில் சென்னை சைதாப்பேட்டையில் 15.03.2026 அன்று நடைபெற்ற மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டத்தில் விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் சார்பில் கலந்துகொண்டு உரையாற்றினார் எழுச்சித்தமிழர்.**



# தனது இறுதிமூச்சு வரையில் என்னோடு கைகோர்த்து நின்றவர் தம்பி பாவரசு!

**எழுச்சித்தமிழர் உருக்கம்**

**மதுரை, தல்லாகுளத்தில் 07.03.2026 அன்று நடைபெற்ற விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைமை நிலையச் செயலாளர் ஏ.சி.பாவரசு அவர்களின் படத்திறப்பு மற்றும் நிதியளிப்பு நிகழ்வில் எழுச்சித்தமிழர் ஆற்றிய உரை.**

என் உயிரின் உயிரான விடுதலைச் சிறுத்தைகளே! உங்கள் அனைவருக்கும் என்னுடைய பணிவார்ந்த வணக்கம்.

தம்பி பாவரசு அவர்களுக்கு இலட்சோப இலட்சக்கணக்கான விடுதலைச் சிறுத்தைகளின் சார்பில் முதலில் எமது செம்மாந்த வீர வணக்கத்தைச் செலுத்துகிறேன். கட்சியின் முதன்மைச் செயலாளராக மிகத் திறம்படப் பணியாற்றிய ஒரு தோழரை நாம் இன்றைக்கு இழந்து நிற்கிறோம். 1990களின் தொடக்கத்தில் மதுரையில் நான் ஒரு அரசு ஊழியராகப் பணியாற்றிய அந்த காலச்சூழலில் என்னோடு கைகோர்த்துக் களமாடிய முன்னணித் தோழர்களுள் தம்பி பாவரசு ஒருவர். இன்றைக்கு அவர் நம்மிடையே இல்லை. இங்கே பேசிய தோழர்கள் கடந்தகால நிகழ்வுகளைக் கண்கலங்க எடுத்துரைத்தார்கள். எப்படியெல்லாம் களப்பணியாற்றினோம், நெருக்கடிகளைச் சந்தித்தோம், வழக்குகளைச் சுமந்தோம், கொள்கைப் பகைவர்களை எதிர் கொண்டோம் என்பது குறித்து நேரத்தின் அருமை கருதி இங்கே சுருக்கமாகப் பேசினார்கள்.

நான் திரும்பிப் பார்க்கிறேன், பாவரசு, கண்ணதாசன், முடக்காத்தான் பாண்டியன் ஆகிய மூன்று பேரும் ஒட்டிப் பிறந்தவர்களைப்போல எப்போதும் ஒன்றாகவே களத்திற்கு வருபவர்கள், வந்தவர்கள். இன்றைக்கு நம்மிடையே முடக்காத்தான் பாண்டியனும் இல்லை,

தம்பி பாவரசும் இல்லை. நான் தடய அறிவியல் ஆய்வகத்தில் ஒரு அறிவியல் உதவியாளராகத்தான் பணியில் சேர்ந்தேன். 1988 ஏப்ரல் 5ஆம் தேதி நான் முதன் முதலாக மதுரைக்கு வந்தேன். முற்றிலும் புதிய சூழல். நான் பிறந்த அங்கனூரும், நான் பயின்ற சென்னையும் தான் எனக்கு அறிமுகம். வேறெந்த நகரத்திற்கும் அப்போது சென்றதில்லை. வேலை நிமித்தமாகத்தான் மதுரைக்கு வந்தேன். ஒரு அரசு ஊழியராகப் பணி யாற்றும் நோக்கில் வந்தேன்.

**புதிய இடம், புதிய தளம், புதிய சூழல்**

மதுரையில் எனக்கு கிழக்கு—மேற்கு தெரியாது. நல்லது—கெட்டது புரியாது. சாதி, மதம் தொடர்பான அரசியல் எதுவும் தெரியாது. முற்றிலும் புதிய இடம், புதிய தளம், புதிய சூழல். அப்போது வழக்கறிஞர் விஜயன அவர்களின் மூலமாக எனக்கு அறிமுகமானவர் அண்ணன் மலைச்சாமி அவர்கள். என்னுடைய அலுவலகம் தேடிவந்து என்னை ஒரு நிகழ்வில் பங்கேற்குமாறு அழைப்பு விடுத்தார். தமிழ்நாடு ஓட்டல், அதில் ஒரு நிகழ்ச்சி. அப்போது எனக்கு அறிமுகமான ஓரிரு தோழர்களுள் தம்பி பாவரசும் ஒருவர்.

தலித் அரசியலும் தெரியாது, தமிழக அரசியலும் தெரியாது. ஓரளவு அம்பேத்கரைப் படித்தவன் அவ்வளவு தான். அண்ணன் மலைச்சாமி அவர்களை மிகக் குறுகிய காலத்தில் காலம் பறித்துவிட்டது. அவரோடு பழகிய தம்பிகளுள் மிக மிகச் சொற்பமான தோழர்கள் ஆற்றலரசு; என்னைச் சந்தித்து அவ்வப்போது பேசிக்கொண்டிருந்த சூழலில்தான் நான் ‘அண்ணன் மலைச்சாமிக்கு ஏன் ஒரு இரங்கல் கூட்டம்கூட நடத்தாமல் இருக்கிறீர்கள்’ என்று கேட்டு, ஒரு முன்முயற்சி எடுத்து, டிசம்பர் 31ஆம் தேதி அவருக்கு தமுக்கம் கலையரங்கத்தில் வீரவணக்க நிகழ்வை நாம் நடத்தினோம். இந்த இயக்கம் உண்மையில் தொடர்புடைய இயக்கம் என்று தெரியும். ஆனால், யாரும் தொடர்பு இல்லை, உண்மையில் நமக்கு யாரும் தெரியாது. அவர்களைத் தொடர்புகொண்டு அழைத்து வந்து பேச்சு நடத்துவதற்குக்கூட இயலாத ஒரு சூழல். ஏனென்றால், நானே இந்தக் களத்தில் புதியவன்; தலித் அரசியல் எனக்குத் தெரியாது. ஆனால், அவர் காலமான நிலையில் அவருக்கு ஒரு இரங்கல் கூட்டம்கூட நடத்தாமல் இருக்கிறீர்களே என்று நான் கடிந்து கொண்டு, அதனடிப்படையில் நான் எடுத்த முன்முயற்சியின் விளைவாக 100க்கும் குறைவானவர்கள் பங்கேற்கிற ஒரு நிகழ்வாக அந்த வீரவணக்க நிகழ்வை நடத்தினோம்.

**இறுதிமூச்சு வரையில் என்னோடு கைகோர்த்து நின்றார் தம்பி பாவரசு**

அந்த நிகழ்ச்சியை நடத்துவதற்கு கையில் பணம் இல்லை. என்னுடைய சம்பளத்தைத்தவிர வேறு வருமானம் கிடையாது; நன்கொடை தருவதற்கு வேறு யாரும் இல்லை. அரசு ஊழியர்கள் கூட அறிமுகம் இல்லை. அந்த நேரத்தில் அவ்வப்போது தொடர்ச்சியாக என்னைச் சந்தித்த தோழர்கள் பாவரசு, கண்ணதாசன், முடக்காத்தான் பாண்டியன் மதுரை மாநகரத்தில். மேலூரிலிருந்து வந்து சந்தித்த தோழர்கள் ஆற்றலரசு, எஸ்.பி.சந்திரன், எட்டிமங்கலம் சந்திரமோகன், முத்துக்குமார் இப்படி சில தோழர்கள். இவர்களைக் கொண்டு நான் அந்த இரங்கல் கூட்டத்தை ஒருங்கிணைத்தேன். அப்படி இந்த அரசியலில் அடியெடுத்து வைக்கிற சூழல் உருவானது. அன்றைக்கு ஏற்பட்ட அந்த அறிமுகம் தனது இறுதிமூச்சு வரையில் தம்பி பாவரசு என்னோடு கைகோர்த்து நின்றார்.

மாவட்ட அளவில் பொறுப்பு, தொண்டரணியில் பொறுப்பு, பிறகு மாநில அளவில் தொண்டரணிச் செயலாளர். தம்பி பாலாஜி சொன்னதைப்போல ஒரு தன்முனைப்பு அவரிடத்தில் உண்டு. அவர் ஒரு பட்டதாரி என்கிற அளவுக்கு கல்வி பெற்றவராக இருந்திருந்தால் இன்னும் திறம்பட அவரால் செயல்பட்டிருக்க முடியும். அவர் ஒரு பெயிண்டர். ஆட்டோ மொபைல்ஸ்க்கு

மோல்ட் செய்யக்கூடிய ஒரு தொழிலாளி. காலை, மாலை என்று அலுவலகம் தேடிவந்து என்னைத் தொடர்ந்து சந்தித்துக்கொண்டிருந்த தம்பிகளுள் அவரும் ஒருவர். அதன்மூலம் தான் இந்த மாவட்டத்தில் ஆங்காங்கே நடைபெறுகிற பிரச்சினைகள் எனக்குத் தெரிய வந்தன. அப்போதே என்னுடைய உறக்கம் தொலைந்துபோனது. நள்ளிரவு 1 மணிக்கு, 2 மணிக்கு வெட்டுக்காயங்களோடு வரும் தோழர்கள் நிறையபேர் உண்டு. வீட்டிற்குள் புகுந்து தாக்கிவிட்டார்கள் என்று அழுதுகொண்டு வருகின்ற தோழர்கள் என் வீட்டைத் தட்டுவார்கள்.

அந்த நேரங்களில் கிளம்பி காவல் நிலையங்களுக்குச் செல்வது, விடிந்ததும் எஸ்.பி. அலுவலகங்களுக்குச் செல்வது, ஆட்சியாளர் அலுவலகங்களுக்குச் செல்வது என்று இவர்களையெல்லாம் நான் முதல் முறையாக எஸ்.பி. அலுவலகத்திற்குள்ளே அழைத்துச் சென்றேன். ‘ஏ.சி. அறையை வந்து பாருங்கள், உள்ளே உட்காருங்கள், ஆட்சியரைச் சந்தியுங்கள், எஸ்.பி.யைச் சந்தியுங்கள்’ என்று முதல் தலை முறை, அவர்களை அதிகார வர்க்கத்தோடு அறிமுகப்படுத்துகிற நிலையில் அப்போதுதான் நான் தொடங்கி வைத்தேன்.

**‘புரட்சியாளர் அம்பேத்கர்’ என்றழைத்த இயக்கம்**

காலை, மாலை என்று நான் வேலை செய்யக்கூடிய அலுவலகத்திற்கு வந்து, காத்திருந்து என்னைச் சந்தித்து ஏதேனும் உரையாடிவிட்டுச் செல்கிற தோழர்களுள், அன்பைச் செலுத்துகிற தோழர்களுள், ஊக்கப்படுத்துகிற தோழர்களுள் முதன்மையானவர் தம்பி பாவரசு. நான் எழுதிக்கொடுக்கின்ற வசனங்களை உடனடியாக சுவரொட்டியாக அச்சிட்டு அதை ஒட்டுகிற பணிகளில் தீவிரம் காட்டுவார்கள். ஏப்ரல் 14க்கு முழக்கங்களை எழுதித் தருவது, செப்டம்பர் 14, அண்ணன் மலைச்சாமியின் நினைவு நாளில் முழக்கங்களை எழுதித் தருவது. சாதிப் பிரச்சினைகள் குறித்து ‘சுவரொட்டிகளை அச்சிட்டு ஒட்டுங்கள்’ என்று பேருந்துகளில் முதலில் தலித் அரசியலைக் கொண்டுபோய்ச் சேர்த்த இயக்கம். அந்தப் பணியை நான் தொடங்கிவைத்தேன். சுவரெழுத்துகள் எழுதும் பணிகளைத் தொடங்கிவைத்தேன். இரவு நேரங்களில் சுவர்களில் வெள்ளையடிக்கும் வேலையைச் செய்தேன். எல்லோரும் ‘பாபாசாகேப்’ என்று சொல்லிக்கொண்டிருந்த அந்தக் காலத்தில் ‘புரட்சியாளர் அம்பேத்கர்’ என்கிற அடைமொழியோடு சுவர்களில் முதலில் எழுதியது மதுரை மண்ணில் தான்.

**மூன்று மணிநேரம்தான் உறக்கம்**

இரவெல்லாம் இவர்களோடு இருந்து விட்டு, அன்றைக்கு இரண்டு அல்லது மூன்று மணிநேரம்தான் உறக்கம். அப்படியே தூங்காமல் குளித்துவிட்டு பல நாட்கள் அலுவலகத்திற்குச் சென்றிருக்கிறேன். புதூர் மற்றும் தல்லாகுளம் தோழர்களை அழைத்துக்கொண்டு மதுரைச் சுவர்களில் சுவரொட்டியை ஒட்டியிருக்கிறோம். காலை 9 மணியளவில் புதூர் பேருந்து நிலையத்தில் நின்று சுவரொட்டிகளை ஒட்டிவிட்டு கையில் இருக்கிற பசையைக் கழுவிவிட்டு நான் அப்படியே அலுவலகம் செல்வேன். அப்படி, பல கிராமங்களில் இரவு நேரங்களில் மக்களைத் திரட்டி அமர வைத்துப் பேசுவேன். அந்தக் கிராமங்களில் எல்லாம் காந்தி படம் இருக்கும், காங்கிரஸ் கொடி இருக்கும். முதல் முதலில் அம்பேத்கர் படம் வைக்கச்சொல்லி, அவரைப் பற்றி அங்கே பேசச்சொல்லி இளைஞர்களிடையே ஒரு விழிப்புணர்வை நான் ஏற்படுத்தினேன். அப்போதெல்லாம் என்னுடன் வந்த தோழர்களுள் தம்பி பாவரசும் ஒருவர். அப்படி இந்தப் பகுதியில் களப்பணி ஆற்றியபோது எனக்குத் துணைநின்ற தோழர்களுள், விரல் விட்டு எண்ணக்கூடிய ஒருசில தோழர்களுள் தம்பி பாவரசும் ஒருவர்.

**சிறுத்தைகள் கொண்டாடும் சித்திரைத் திருவிழா**

திசம்பர் 6ஆம் தேதி ‘கருஞ்சிறுத்தைகள்



**விசிக தலைமையகத்தின் சார்பில் அம்பேத்கர் திடலில் 14.03.2026 நடைபெற்ற நினைவேந்தல் நிகழ்வு**

அணிவகுப்பு'. ஏப்ரல் 14 — 'சிறுத்தைகள் கொண்டாடும் சித்திரைத் திருவிழா' இப்படி நான் அறிவிப்பு செய்தேன். உங்களுக்கெல்லாம் கள்ளழகர்தான் நாயகன்; அவர் ஆற்றில் இறங்குகிறார். எங்களுக்கு அம்பேத்கர்தான் நாயகர். அவருடைய பிறந்த நாள் தான் எங்களுக்குச் சித்திரைத் திருநாள். இப்படி ஒரு புதிய கோணத்தில் அம்பேத்கரை நான் அறிமுகப்படுத்தினேன். அம்பேத்கர் பிறந்த நாள் என்றில்லாமல் 'சித்திரைத் திருநாள்' என்று அறிவித்தேன். எனவே, அந்த நாள் எங்களுக்கு சித்திரை திருநாள். இதை அறிவிப்புச் செய்து அதனடிப்படையில் ஆயிரக்கணக்கானவர்களைத் திரட்டினோம். மேலூரிலிருந்து பத்திற்கும் மேற்பட்ட வண்டிகளோடு தம்பி ஆற்றலரசு இறங்குவார். அப்போதே இரண்டு அல்லது மூவாயிரம் பேர் பங்கேற்பார்கள்.

மதுரை மாநகரத்தில் புதூர், தல்லாகுளம், பந்தல்குடி ஆகிய பகுதிகளில் மிக அடர்த்தியாக அப்போது தோழர்கள் பங்கேற்பதுண்டு. பிறகு கரும்பாலை, எஸ்.எம்.பி. காலனி, மேலவாசல், மஞ்சள்மேடு இந்தப் பகுதிகளில் இருந்து தோழர்கள் பங்கேற்பார்கள். பெரும்பாலும் மேலூர் வட்டாரத்தில் இருந்துதான் பேரணியில் பங்கேற்பார்கள். அப்போதெல்லாம் நமக்கு நன்கொடை தருவதற்குக்கூட ஆட்கள் கிடையாது. ஒரு நிகழ்ச்சியை நடத்துவதற்காக 'நன்கொடைச் சீட்டு அச்சிட்டு சில அரசு ஊழியர் சங்கங்களைப் பார்க்கலாம்' என்று நான் முயற்சித்தேன். அப்போது கண்ணதாசன், முடக்காத்தான் பாண்டியன், ஆற்றலரசு, பாவரசு இவர்கள் எல்லாம் provident fund சங்கத்தைச் சந்திக்கலாம் என்று அழைத்துக்கொண்டு சென்றார்கள். provident fund சங்கத்தைச் சார்ந்தவர்கள் ஒருமணி நேரம் உட்கார வைத்து எடக்குமுடக்காகப் பேசினார்கள். ஏராளமான கேள்விகளைக் கேட்டார்கள்.

அப்போதுதான் எனக்குத் தெரிந்தது மதுரையில் சாதி அரசியல் எந்த அளவுக்கு ஆழமாக மேலோங்கிக் கிடக்கிறது என்பதைப் புரிந்துகொண்டேன். தலித்துகளுக்குள்ளே இருக்கிற பிளவு, இடைவெளி, அரசியல் முரண்கள் சென்னையில் அதுபற்றித் தெரியாது, வடமாவட்டங்களில் எந்த அடையாளமும் கிடையாது. எஸ்.சி என்றால் எல்லாம் ஒன்று என்றுதான் தெரியும். மதுரையில் இவர்களையெல்லாம் சந்தித்த போது அவர்கள் கேட்ட கேள்விகளும், செய்த அவமானங்களும் தாங்க முடியாது.

ஒருமணி நேரம் பேசிய பிறகு அவர்கள் நன்கொடைச் சீட்டை வாங்கி 5 ரூபாய் நன்கொடை வழங்கினர். இப்படித்தான் அன்றைய நிலை. அவரவர் சொந்த முயற்சியில் சுவரொட்டிகளை அச்சிட்டு ஒட்டுவார்கள். நான் பணம் கொடுக்க மாட்டேன்.

**இதை யாரும் மறுக்க முடியாது**

ஏப்ரல் 14: 'சிறுத்தைகள் கொண்டாடும் சித்திரைத் திருவிழா' என்றால், திசம்பர் 6: கருஞ்சிறுத்தைகள் அணிவகுப்பு. கருஞ் சிறுத்தைகள் என்றால் கருப்பு உடை அணியவேண்டும்; 100 பேருக்காவது நீங்கள் பயிற்சி கொடுக்க வேண்டும்; அவர்களை தந்தி அலுவலகத்திலிருந்து அணிவகுப்பாகச் சென்று பாண்டியன் ஓட்டல் அருகில் இருக்கின்ற அம்பேத்கர் சிலைக்கு மாலை அணிவிக்க வேண்டும். இதுதான் என்னுடைய வழிகாட்டுதல். இதை முதன்முதலில் முயற்சியெடுத்து செய்துகாட்டியவர் தம்பி பாவரசு. மிகவும் தன்முனைப்பு உள்ள தோழர். வேலையை இழுத்துப்போட்டுக் கொண்டு செய்பவர்கள் ஒருசில பேர்தான். கட்சியை வலுப்படுத்த, பலப்படுத்த நாம் ஏதாவது செய்யவேண்டும் என்கிற தன்முனைப்போடு களப் பணியாற்றியவர்கள் விரல்விட்டு 10 பேர்களைச் சொன்னால் அதில் பாவரசு, உஞ்சை அரசன் போன்ற மறைந்த தோழர்கள், முன்னணித் தோழர்கள். இதை யாரும் மறுக்க முடியாது.

மாநாடு அறிவித்துவிட்டால் ஊர் ஊராகச் சென்று, மாவட்டம் மாவட்டமாகச் சென்று பொறுப்பாளர் களைச் சந்தித்து, அவர்களிடையே மாநாட்டிற்கான பணிகளை ஊக்கப்படுத்துகிற வேலைகளை இவர்கள் இருவரும் இழுத்துப் போட்டுக்கொண்டு செய்வது வழக்கம். நான்கூட சில நேரங்களில் சண்டை போடுவேன். ஆனால், நான் என்ன சண்டை போட்டாலும், வருத்தப்பட்டாலும், கடிந்துகொண்டாலும் 'இது நம்முடைய கட்சி, நாம் செய்யவேண்டும்' என்கிற முனைப்பு. இதுபோன்ற தோழர்கள் இருந்தால்தான் கட்சியை வளர்க்க முடியும். வடமாவட்டங்களில் 95க்குப் பிறகுதான் பரவியது. ஆனால், 90களிலிருந்து 95 வரையில் இந்த ஐந்தாண்டு காலம் மதுரையில் நாம் அப்படியே நெருப்பில் நின்றோம்.

**என்மீது கொண்டிருந்த பற்றுதல்**

எல்லாளன் இங்கே சொன்னார், கோசாகுளம் ஆனையூரிருந்து விடியற் காலையில் வந்த முதல் பேருந்து. இதுவெல்லாம் எனக்குத் தெரியாது. எந்த அளவுக்கு தோழர்களிடையே ஒரு உந்துதல் இருந்தது என்பதைப் பிறகுதான் நான் உணர்ந்துகொண்டேன். ஏதோ ஒருவகையில் என்னுடைய பேச்சோ, என்னுடைய நடவடிக்கையோ, என்னுடைய முழக்கமோ இந்த இளைஞர் களை ஊக்கப்படுத்தியிருக்கிறது என்பதை நான் புரிந்துகொண்டேன். என்னால் இவர்களுக்கு எந்தப் பயனும் இல்லை, நான் எதுவும் அவர்களுக்குத் தரவில்லை. ஆனால், என்மீது அவர்கள் கொண்டிருந்த பற்றுதல் அன்றைக்கு வெளிப்பட்டது. என்மீது அவர்கள் கொண்டிருந்த நம்பிக்கை வெளிப்பட்டது. அவர்கள் காட்டிய அந்த நம்பிக்கைதான், அந்தப் பற்றுதல்தான் எனக்குள் உறங்கிக் கொண்டிருந்த நெருப்பை உசுப்பியது. என் அடிவயிற்றில் கனன்று கொண்டிருந்த அந்த உறுதித் தீ பற்றிக்கொண்டது. இவர்களுக்காக நாம் நம்மை ஒப்படைக்க வேண்டும் என்கிற உறுதி எனக்குள் உருவானது.

**தென்னிந்தியாவில் மாநிலக் கட்சியாக அங்கீகாரம் பெற்ற ஒரே கட்சி வி.சி.க.தான்**

இந்திய அரசியல் வரலாற்றில் அம்பேத்கர் இயக்கங்களை, அரசியல் இயக்கமாக மாற்றி அங்கீகாரம் பெற்ற கட்சிகள் ஒன்றிரண்டுதான். அதில் ஒன்று விடுதலைச் சிறுத்தைகள் கட்சி. நீண்ட நெடிய முக்கால் நூற்றாண்டில் தென்னிந்தியாவில் மாநிலக் கட்சியாக அங்கீகாரம் பெற்ற ஒரே கட்சி விடுதலைச் சிறுத்தைகள் கட்சி. இந்த 40 ஆண்டு காலத்தில் நாம் ஆற்றியிருக்கிற பணிகள், அந்த நாள் தொடங்கி இந்த நாள் வரையில்




மகளிர் விடுதலை இயக்கத்தின் சார்பில் அம்பேத்கர் திடலில் 08.03.2026 நடைபெற்ற நினைவேந்தல் நிகழ்வு

நான் பன்னிரெண்டு மணிக்கு முன்பு ஒருநாளும் உறங்கியதில்லை. கிட்டத்தட்ட 35 ஆண்டுகள் ஆகின்றன. எவ்வளவோ மனச்சோர்வு, உடல்சோர்வு இருக்கிறது. ஆனாலும், அந்த வீரம் குறையாமல் இன்றைக்கும் நிற்பதற்குக் காரணம் இவர்களைப் போன்ற தோழர்களின் ஒத்துழைப்பு தான். எந்தப் பயனையும் அவர்கள் அனுபவிக்கவில்லை; எந்த அதிகாரத்தையும் அவர்கள் நுகரவில்லை.

### என் வாயில் துப்பாக்கி வைத்து மிரட்டினார்கள்

தேர்தல் அரசியலில் ஈடுபட வேண்டாம் என்று நான் இருந்த காலத்தில் அவ்வளவு அடக்குமுறைகள், ஒடுக்கு முறைகள். விடுதலைப் புலிகளோடு தொடர்புபடுத்தினார்கள்; நக்சல்பாரி களோடு தொடர்பு படுத்தினார்கள். விடுதலைப் புலிகளிடமிருந்து பல நூறு கோடிகளை திருமாவளவன் பணம் பெற்றிருக்கிறான் உங்கள் பெயரில், அவன் பணம் வாங்கிக் கொழுக்கிறான் என்று அப்போதே உளவுத்துறையைச் சார்ந்தவர்கள் அவதூறுகளைப் பரப்பினார்கள். செல்லும் இடமெல்லாம் என்னைப் பின்தொடர்ந்தார்கள். கோவையிலிருந்து என்னைக் கடத்தி வந்து மதுரை நவீன் விடுதியில் வைத்து என்னை அச்சுறுத்தினார்கள். வாயில் துப்பாக்கியை வைத்து மிரட்டினார்கள். மிகக் கேவலமான சொற்களால் என்னை வசைப்பாடினார்கள்.

அந்த நேரத்திலும் மதுரையில் இந்தத் தம்பிகள் மக்களைத் திரட்டி அந்த நவீன் விடுதியை முற்றுகையிட்டனர். அதன்பின்னர் என்னை விட்டுவிட்டார் கள். இல்லையென்றால் என்னைக் கைது செய்து, குண்டர் தடுப்புச் சட்டத்தில் போட்டிருப்பார்கள். பள்ளத்தூருக்குக் கொண்டுபோனதும் சரி, நவீன் விடுதியில் வைத்து என் வாயில் துப்பாக்கி வைத்து மிரட்டிய அதிகாரிகள் இன்றும் இருக்கிறார்கள். அன்றைக்கு காவல்துறை கொடுக்கின்ற நெருக்கடிகளைக் கண்டு பின் நோக்கி ஓடாமல் என்னோடு கைகோர்த்து நின்ற தோழர்கள்தான் மதுரை மாவட்டத்தைச் சார்ந்த தம்பிகள். அதில் ஒருவர் தம்பி பாவரசு. மதுரையில் நடைபெறும் கள்ளழகர் திருவிழாவில்

தண்ணீர் பீய்ச்சும் நிகழ்ச்சியில் பங்கேற்பார்கள். அந்த நிகழ்வில் பாவரசும் பங்கேற்றுள்ளார். அந்த ஆன்மிக நம்பிக்கையையெல்லாம் உதறிவிட்டு, அம்பேத்கரின் பிள்ளைகளாக மாறி, என்னோடு சாதிய, மத வெறிபிடித்த பகைவர்களை எதிர்கொண்டு களமாடுகிற முன்னணித் தளபதிகளாகத் தன்னை வளர்த்துக்கொண்டவர்.

**தேர்தல் அரசியலில் ஈடுபடலாமா, வேண்டாமா? எனும் விவாதம்**

1999இல் முதன் முதலாக தேர்தல் அரசியலில் ஈடுபடலாமா, வேண்டாமா? என்று விவாதம் நடந்தது. மதுரையில் என்னோடு இருந்த அத்தனை பேரும் 'வேண்டாம்' என்றுதான் சொன்னார்கள். அதன்பிறகு,பெரம்பலூரில் உள்ள திருமாந் துறையில் ஒரு கூட்டம், பெரம்பலூரில் ஒரு கூட்டம், பிறகு விழுப்புரத்தில் மாநிலச் செயற்குழு. புதியதாக வந்து சேர்ந்த வடமாவட்டத் தோழர்கள் எல்லாம் 'தேர்தலில் நிற்கவேண்டும்' என்று சொன்னார்கள். அதன்பிறகு பெரும்பான்மை அடிப்படையில் நானும் ஒரு முடிவுக்கு வந்தேன். அப்போது, திருவள்ளுவன் குண்டர் சட்டத்தில் கைது.

அவருக்கு முன்பு பாண்டுரங்கன், பால்ராஜ் கைது. வடமாவட்டங்களில் குண்டர் சட்டத்தில் தோழர்கள் கைது. அப்போது, திமுக அரசு; கலைஞர் முதலமைச்சர். பா.ம.க சொல்வதையெல்லாம் கேட்டு எங்கள் மீது வழக்கு. பெரம்பலூர், கடலூர் மாவட்டத்தைச் சார்ந்த 10க்கும் மேற்பட்ட தோழர்கள் குண்டர் தடுப்புச் சட்டத்தில் சிறைப்படுத்தப்பட்டார்கள். எல்லோரும் ஓராண்டு சிறையில் இருந்தார்கள். முதல் கைது குண்டர் சட்டத்தில் வயலூரைச் சார்ந்த பாண்டுரங்கன், பால்ராஜ். அவர்கள் எந்த அதிகாரத்தையும் நுகரவில்லை. அதன்பிறகு திருவள்ளுவன். வடமாவட்டங்களில் அப்படிப் பலபேர் கைது செய்யப்பட்ட காலம்.

2001இல் தி.மு.க கூட்டணி. 'உதய சூரியன்' சின்னத்தில் நின்றோம். ஓட்டு கேட்போம்; வெற்றி தோல்வியைப் பற்றிக் கவலையில்லை என்று நான் களத்தில் இறங்கியபோது பாவரசு செய்த வேலை உடனே மதுரையில் இருந்து 30 ஓவியர்களை அழைத்துவந்து, அதிகப்படியான பெயிண்ட் வாங்கிக் கொண்டு வந்து நான்கு நாட்களில் ஏராளமான இடங்களில் 'உங்கள் வேட்பாளர் திருமாவளவன்', 'உங்கள் சின்னம் உதயசூரியன்' என்று எழுத வைத்தார். இந்த தன் முனைப்பு. தோல்வியோ, வெற்றியோ அதைப் பற்றிக் கவலையில்லை. ஏதோ தப்பித் தவறி இரண்டாயிரம் வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றோம். விடுதலைச் சிறுத்தைகள் தேர்தல் அரசியலில் அடியெடுத்து வைத்து முதல் வெற்றி அது.

**ஒரு வேட்பாளரைப்போல் கிடந்து உழன்று பணியாற்றியவர்**

1999இல் மூப்பனார் அவர்களோடு சிதம்பரம் தொகுதியில் பணியாற்றியவர்களுள் தம்பி பாவரசுவும் ஒருவர். எத்தனை நாள்கள் நான் பிரச்சாரம் செய்தேனோ அத்தனை நாள்களும் ஒரு வேட்பாளரைப் போல் கிடந்து உழன்று பணியாற்றிய, பாடாற்றிய முன்னணித் தோழர்களுள் தம்பி பாவரசும் ஒருவர். அதில் தோற்றுப் போனோம். ஆனால், தேர்தல் அரசியல் வரலாற்றில் விடிய விடிய திருவிழா போல் தேர்தல் பிரச்சாரம் நடந்தது என்றால் அது சிதம்பரம் நாடாளுமன்றத் தொகுதியில் தான். சைக்கிள் சின்னங்களை மக்களே எழுதினார்கள். வீதிக்கு வீதி சைக்கிளைத் தூக்கிக் கட்டிவைத்தார்கள். 10 மணிக்குள் தேர்தல் பிரச்சாரம் முடிந்ததே இல்லை. விடிய விடிய தேர்தல் பிரச்சாரம் நடந்தது. அப்படி 20 நாள்கள் படாதபாடு பட்டோம். மதுரை மண்ணில் வேர் கொண்ட இயக்கம் என்றாலும் அங்கீகரித்த ஒரு தாய் மடியாக சிதம்பரம் நாடாளுமன்றத் தொகுதி, கடலூர் மாவட்டம் அன்றைக்கு நம்மைத் தாங்கிக்கொண்டது. எதிர்பாராத அளவுக்கான எழுச்சி, வரவேற்பு. மூப்பனார் அவர்கள் பொதுக் கூட்டத்தை முடித்துவிட்டு சிதம்பரம் மேடையைவிட்டு இறங்கும்போது,

"என் வாழ்நாளில் எம்.ஜி.ஆருக்குப் பிறகு இவ்வளவு பெரிய மக்கள் திரளை இப்போதுதான் நான் பார்க்கிறேன்" என்று சொன்னார்.

அன்றைக்கு முதன் முதலாகப் பிரச்சாரப் பொதுக் கூட்டத்திற்கு வந்த சிறுத்தைகள் அரசியல் களத்தை அதிரவைப்பதற்கான ஒரு எழுச்சி இருந்தது. அந்தக் களத்தில் ஒரு வேட்பாளரைப்போல் உறக்கம் இல்லாமல், நான் எத்தனை மணிநேரம் விழித்திருந்தேனோ அத்தனை மணிநேரம் விழித்திருந்த தம்பி. நான் எத்தனை மணிநேரம் பிரச்சாரம் செய்தேனோ அத்தனை மணிநேரம் பிரச்சாரம் செய்த தம்பி. அப்படிப் பயணப்பட்ட அந்தத் தம்பிதான் பாவரசு.

**உற்ற துணையாக இருந்த தோழர்களுள் ஒருவர்**

இந்த 35 ஆண்டுகாலத்தில் நாம் சந்தித்த சவால்களும், நெருக்கடிகளும், அவமானங்களும், அவதூறுகளும் கணக்கிலிட முடியாதவை, விவரிக்க முடியாதவை. அப்படிப்பட்ட நேரத்தில் எனக்கு உற்ற துணையாக இருந்த தோழர்களுள் தம்பி பாவரசுவும் ஒருவர் என்பதை நன்றி உணர்வோடு பதிவுசெய்ய விரும்புகிறேன்.

சிங்கள அதிபர் சந்திரிகா குமாரதுங்க கொடும்பாவியை மதுரையில் கட்டபொம்மன் சிலை அருகில் எரித்துக் கொண்டிருக்கிறோம். நான் கொஞ்ச தூரம் தள்ளி நின்று 'நீங்கள் போய் கொளுத்துங்கள்' என்று சொன்னேன். அவர்களிடையே ஒரு மந்தம். மந்தமாக இருப்பவர்களைத் தூண்டிவிட வேண்டும். ஏனென்றால், எல்லோரும் புது தலைமுறை. போராட்டம் என்பதுகூட நான்தான் சொல்லித் தரவேண்டும். சுவரொட்டி ஒட்டுவதற்கு நான்தான் சொல்லிக்கொடுத்தேன். பேருந்தில் அரசியல் செய்ய நான் தான் அறிமுகப்படுத்துகிறேன். எல்லோரும் வடஇந்திய முழக்கங்களை எழுப்பியபோது நம் தமிழ்மண்ணுக்கே உரிய அந்த உணர்வை வெளிப்படுத்தும் 'வீரவணக்கம்' என்கிற முழக்கத்தை நான் அறிமுகப்படுத்தினேன். 'ஜெய்பீம்' என்று எல்லோரும் சொல்லிக்கொண்டிருந்த நிலையில் வீரவணக்கம்' என்கிற தமிழ் முழக்கத்தை நான் தோழர்களிடையே அறிமுகப்படுத்தினேன்.

'பாபாசாகேப்' என்று புரட்சியாளர் அம்பேத்கர் அவர்களை எல்லோரும் வடமொழியில் அழைத்தபோது, அவருடைய அரசியல் தன்மையை வெளிப்படுத்தக்கூடிய வகையில் புரட்சியாளர் அம்பேத்கர் என்று அறிமுகப்படுத்தினோம். இப்படி இந்தக் களத்தில் நாம் ஒரு தவிர்க்க முடியாத அரசியல் சக்தியாக இன்றைக்கு நிமிர்ந்து நிற்கிறோம். இது தற்பெருமையல்ல; நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும் என்பதற்காகச் சொல்கிறேன். நாம் ஒரு தவிர்க்க முடியாத சக்தி என்று நான் தான் சொல்லவேண்டும்.

**நாங்கள் துணையாக இருப்போம்**

இப்படிப்பட்ட கடுமை நிறைந்த ஒரு பயணத்தில் எல்லா நிலைகளிலும், எல்லாச் சூழல்களிலும் என்னோடு கைகோர்த்து நின்ற, விரல்விட்டு எண்ணக்கூடிய முன்னணித் தோழர்களுள் தம்பி பாவரசு அவர்களும் ஒருவர் என்பதை இந்த நேரத்தில் நன்றி உணர்வோடு சொல்லி, அவருடைய அன்புக்குழந்தை செந்தமிழ் நிலா, 'அப்பா இல்லை; எப்போதும் நீங்கள் எங்களுக்கு துணை நிற்க வேண்டுமென்று' சொல்லி கண் கலங்கினார்.

உங்களுக்கு நாங்கள் துணையாக இருப்போம்; அவர் எங்களுக்குத் துணை யாக இருந்தார் என்பதைச் சொல்லி, தம்பி பாவரசு அவர்களுக்கு இலட்சோப இலட்சக்கணக்கான விடுதலைச் சிறுத்தைகளின் சார்பில் செம்மாந்த வீரவணக்கத்தைச் செலுத்தி, தாமாக முன்வந்து நிதி வழங்கிய என் உயிரின் உயிரான விடுதலைச் சிறுத்தைகள் அனைவருக்கும் என்னுடைய நெஞ் சார்ந்த நன்றியைத் தெரிவித்து, விடைபெறுகிறேன். நன்றி. வணக்கம்.

●●




# பின்லேடனை உருவாக்கியது இசுலாமியச் சமூகம் இல்லை; அமெரிக்க ஏகாதிபத்தியம்!

**எழுச்சித்தமிழர் உறுதி**

**சென்னை, ராயப்பேட்டை பகுதியில் 08.03.2026 அன்று தமிழ்நாடு ஷியா முஸ்லிம் ஜமாஅத் சார்பில் ஒருங்கிணைக்கப்பட்ட இஸ்லாமிய உம்மத்தின் தலைவர் தியாகி ஆயத்துல்லா அலி காமெனி அவர்களின் நினைவேந்தல் நிகழ்வில் ஆற்றிய உரையின் சுருக்கம்:**

உங்கள் அனைவருக்கும் என்னுடைய பணிவார்ந்த வணக்கம். மறைந்த தலைவர் தியாகி காமெனி அவர்களுக்கு விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் சார்பில் எனது செம்மாந்த வீரவணக்கத்தைச் செலுத்துகிறேன். அவர் படுகொலை செய்யப்பட்டார் என்ற தகவல் அறிந்ததும் நாம் மிகவும் அதிர்ச்சியடைந்தேன். என்ன செய்வது என்று அறியாமல் திகைத்துக்கொண்டிருந்தேன். அண்ணன் பஷீர் அகமது அவர்களிடமிருந்து ஒரு அழைப்பு வந்தது. ‘அண்ணா சாலையில் உள்ள பீட்டர்ஸ் சாலையில் ஒரு மறியல் போர் தொடங்கியிருக்கிறது; எங்கே இருக்கிறீர்கள்’ என்று கேட்டார். ‘சென்னையில்தான் இருக்கிறேன், உடனே வருகிறேன்’ என்று நான் கிளம்பி அந்த ஆர்ப்பாட்ட மறியலில் கலந்துகொண்டேன். ஈராக் அதிபர் சதாம் உசேன் படுகொலை செய்யப்பட்ட போதும் உடனடியாக அண்ணா சாலையில் இசுலாமியத் தோழர்களோடு கண்டனப் போராட்டத்தில் நான்

பங்கேற்றது இப்போது நினைவுக்கு வருகிறது.

திருமாவளவனுக்கும் இதற்கும் என்ன சம்மந்தம்? என்று சமூக வலைதளங்களில் கேலியும் கிண்டலும் செய்கிற போக்கு இருந்தது. இசுலாமியர்களுக்கு ஒரு பிரச்சினை என்றால் இசுலாமியர்கள்தான் போராட வேண்டும்; தலித்துகளுக்கு பிரச்சினை என்றால் தலித்துகள்தான் போராட வேண்டும் என்று சிந்தித்துப் பழக்கப்பட்டுப்போன அந்தச் சக்திகளுக்கு இசுலாமியர்களின் வாழ்வுரிமைகளுக்காக சனநாயகச் சிந்தனையுள்ள யாரும் போராட முடியும் என்பதைப் புரிந்துகொள்ள முடியாது.

**ஆதிக்கம் எங்கே தலைதூக்கினாலும் எதிர்ப்போம்**

நான் ஏன் ஈராக் அதிபர் படுகொலை செய்யப்பட்ட போது கண்டிக்க வேண்டும்? நான் ஏன் ஈரான் அதிபர் ஆயத்துல்லா அலி காமெனி அவர்கள் படுகொலை செய்யப்பட்ட போது கண்டிக்க வேண்டும் என்கிற கேள்வி எழுவது இயல்புதான். அதில் மாற்றுக்கருத்து இல்லை. ஆனால், நான் என்னை 'Sectarian leader'— ஆக வளர்த்துக்கொள்ளவில்லை. ஒரு குறிப்பிட்ட சாதிக்காக அல்லது குறிப்பிட்ட மதத்திற்காக மட்டுமே குரல் கொடுப்பது என்கிற நிலையில் என்னை நான் ஆளாக்கிக்கொள்ளவில்லை. அநீதி இந்தப் பூமிப்பந்தில் எந்த மூலையில் இழைக்கப்பட்டாலும், ஆதிக்கம் எங்கே தலைதூக்கினாலும் அதை எதிர்த்து நம்மாலான குரலை எழுப்பவேண்டும் என்கிற புரிதலைக் கொண்டவன் நான்.

ஈராக் அதிபர் சதாம் உசேன், அமெரிக்க ஏகாதிபத்தியத்திடம் மண்டியிடாத ஒரு மாவீரர். "அமெரிக்க டாலருக்கு உலகில் எல்லா நாடுகளிலும் மதிப்பு இருக்கலாம். ஆனால், என் நாட்டில் வெறும் பேப்பர்" என்று சொன்ன துணிச்சல் ஈராக் அதிபருக்கு இருந்தது. "டாலருக்கு இங்கே எந்த மதிப்பும் இல்லை; உங்களைக் கண்டு நான் அச்சப்படத் தேவையில்லை; உங்களிடம் நான் தலைதாழத் தேவை யில்லை; உங்கள் காலடியில் மண்டியிட்டு



ஆயத்துல்லா அலி காமெனி

நான் இந்த மகுடத்தைச் சுமக்கவேண்டும் என்கிற தேவையில்லை" என்று தூக்குக்கயிற்றை முத்தமிடுகிற இடத்திலும் புன்னகையோடு அதை ஏற்றுக்கொண்ட ஒரு மாவீரன் ஈராக் அதிபர் சதாம் உசேன். இதை யாரும் மறுத்துவிட முடியாது. ஏகாதிபத்தியத்தை எதிர்க்கிற துணிச்சல் இடதுசாரி கட்சிகளுக்கு அல்லது இடதுசாரி நாடுகளுக்கு மட்டுமில்லை. ஈராக்கிற்கும் உண்டு, ஈரானுக்கும் உண்டு என்பதை காட்டியவர்கள், வரலாறு படைத்தவர்கள் சதாம் உசேன், காமெனி.

சோவியத் ரஷ்யா அமெரிக்க ஏகாதிபத்தியத்தை எதிர்த்து நின்றது; அது சிதறிப்போனது. கியூபா ஒரு கம்யூனிஸ்ட் நாடு. அமெரிக்க ஏகாதிபத்தியத்தை எதிர்த்த நாடு. சேகுவேரா எதிர்த்து நின்றார். இவர்கள் எல்லாம் கம்யூனிஸ்ட்டுகள். ஏகாதிபத்தியத்தை எதிர்த்து நிற்பதில் உறுதியானவர்கள். இப்படித்தான் அரசியலை நாம் படித்திருக்கிறோம். ஆனால், கடவுள் நம்பிக்கை உள்ளவர்கள், ஆன்மிக நம்பிக்கை உள்ளவர்கள், அல்லா ஒருவரே என்று நம்பிக்கை உள்ளவர்கள், ஏகாதிபத்தியத்தை எதிர்ப்பதில் உறுதியாக இருக்கிறார்கள் என்பதற்கு இடதுசாரிகளைப் போலவே உறுதியாக இருக்கிறார்கள் என்பதற்கு அதிபர் சதாம் உசேனும், அதிபர் காமெனியும் நம் முன்னால் சாட்சியங்களாக

இருக்கிறார்கள். ஏகாதிபத்தியத்தை எதிர்க்கிற இடங்களில் விடுதலைச் சிறுத்தைகளும் நிற்போம் என்கிற அடிப்படையில்தான் அன்றைக்கு 'ஷியா' இசுலாமியர்கள் என்கிற ஒரு பிரிவு மட்டுமல்ல; ஒட்டுமொத்த இசுலாமியச் சமூகம் அணிதிரண்டு பீட்டர் சாலையில் நின்றபோது திருமாவளவனும் அங்கு நின்றான். ஏகாதிபத்திய எதிர்ப்பு; அமெரிக்க ஆணவ எதிர்ப்பு; அமெரிக்கத் திமிர் எதிர்ப்பு.

**எதிர்ப்பதற்கு எவரும் இல்லை என்கிற ஆணவம்**

எல்லா நாடுகளிலும் தலையீடு செய்வது, உள்விவகாரங்களின் தலையீடு செய்வது, ஒவ்வொரு நாட்டிலும் தனக்கான இராணுவத் தளவாடங்களை நிறுவுவது, அதற்கான மையங்களை ஏற்படுத்துவது, உலக நாடுகளை அச்சுறுத்துவது, தம் விருப்பம்போல் ஒவ்வொரு நாட்டின் தேர்தலிலும் தனக்கு வேண்டியவர்களை பிரதமர்களாகவோ, அதிபர்களாகவோ தேர்ந்தெடுக்கச் செய்வது, உள்நாட்டுக் குழப்பங்களை ஏற்படுத்தி மக்கள் புரட்சி என்கிற பெயரால் ஒவ்வொரு நாட்டின் அரசியல் நிலைத்தன்மையைச் சீர்குலைப்பது இவையெல்லாம் இன்றைக்கு அமெரிக்க ஏகாதிபத்தியம் செய்துவருகிற அட்டூழியங்கள். கேட்பதற்கு யாரும் இல்லை என்கிற அகந்தை. எதிர்ப்பதற்கு எவரும் இல்லை என்கிற ஆணவம்.

**ஏகாதிபத்திய எதிர்ப்பில் உறுதி**

ரஷ்யாவில் எண்ணெய் வாங்கக் கூடாது, வாங்கினால் உனக்குத் தண்டனை விதிப்போம்; 50 சதவிகிதம் வரி விதிப்போம். பணிந்தால் வரியைக் குறைப்போம். இப்போது 30 நாட்களுக்கு ரஷ்யாவிடமிருந்து கச்சா எண்ணெய் வாங்க அனுமதி. இந்திய அரசை எப்படி இவர்கள் ஆட்டிப்படைக்கிறார்கள். அமெரிக்க ஏகாதிபத்தியத்தை எதிர்க்கிற துணிச்சல் இந்தியாவுக்கு இல்லையே, இந்தியப் பிரதமருக்கு இல்லையே என்று எண்ணுகிறபோது வேதனை மிஞ்சுகிறது. அவர் யார்— எந்த நாட்டில் நாம் கச்சா எண்ணெயை இறக்குமதி செய்வதற்கு முடிவு செய்ய? எந்த நாட்டோடு நாம் வர்த்தக ஒப்பந்தங்களைச் செய்துகொள்ள வேண்டும் என்று தீர்மானிக்க? 'உங்களுக்கு என்ன அதிகாரம்' என்று கேட்கிற துணிச்சல் நமக்கு இல்லை. அதிபர் காமெனிக்கு இருக்கிறது, அதிபர் சதாம் உசேனுக்கு இருக்கிறது. இதுதான் பிரச்சினை.

ஏகாதிபத்திய எதிர்ப்பில் உறுதியாக இருந்தவர் இமாம் ஆயத்துல்லா அலி காமெனி; இது முதல் காரணம். இரண்டாவது காரணம் அவர் பாலஸ்தீனத்திற்கு ஆதரவாக இஸ்ரேலைத் தம்முடைய பிறவி எதிரியாகவே அணுகினார்கள். பாலஸ்தீனம்தான் உலக வரைபடத்தில் இருக்க வேண்டிய ஒரு நிலப்பரப்பு; இஸ்ரேல் அல்ல. அதை இறுதிமூச்சு வரையில் எதிர்ப்போம் என்பதில் அவர் உறுதியாக இருந்தார். அந்த நிலைப்பாட்டின் அடிப்படையில் அவர் இஸ்ரேலுக்கு எதிரான ஆயுதம் தாங்கிய குழுக்களை ஆதரித்தார் என்பது அவர் மீதான குற்றச்சாட்டுகளுள் ஒன்று. ரஷ்புல்லா, ஹமாஸ், ஹிஸ்புல்லா போன்ற குழுக்களை ஆதரித்தார்; அவர்களுக்குத் துணை நின்றார். இந்தப் படைகளை ஊக்கப்படுத்துகிறார்; இஸ்ரேலுக்கு மிகப்பெரிய தலைவலியாக இருக்கிறார். இஸ்ரேலின் ஆயுதபலத்தைக் கேள்விக்குள்ளாக்குகிறார். எப்போதும் ஒரு பெரும் அச்சுறுத்தலாக இருக்கிறார் இஸ்ரேலுக்கு. ஆகவே, அமெரிக்காவுக்கு அவர் எப்படி அச்சுறுத்தலாக இருக்கிறாரோ அதைப்போல இஸ்ரேலுக்கு அவர் அச்சுறுத்தலாக இருக்கிறார் என்பதுதான் இரண்டாவது காரணம்.

**பொய்க் குற்றச்சாட்டு**

மூன்றாவதாக அவர்கள் சொல்கிற காரணம், ஈரான் அணு ஆயுதங்களைத் தயாரிக்கிறது; அதைத் தடுக்க வேண்டும். ஈரான் அணு ஆயுதங்களைத் தயாரித்தால் அது உலகை அழிவில் கொண்டு போய் நிறுத்தும். எனவே, இஸ்ரேலைப் பாதுகாப்பது மட்டுமல்ல; உலக




நாடுகளையே பாதுகாக்க வேண்டும். அதனால் ஈரான்மீது நாங்கள் இந்தத் தாக்குதலை நடத்துகிறோம்.

ஈரான் அப்படி அணுகுண்டுகளைத் தயாரிக்கிறது என்பதற்கு எந்த ஆதாரமும் இல்லை. ஈராக் அதிபர் மீதும் அதே குற்றச்சாட்டை வைத்தார்கள். படுகொலை செய்தார்கள். எல்லாப் பாதாளங்களையும் ஆராய்ந்து பார்த்தார்கள். இந்த இடத்திலும் அப்படி அவர்களால் ஒரு அணுகுண்டு தயாரிப்புக்கான தளவாடங்களைப் பார்க்க முடியவில்லை; ஆதாரம் காட்ட முடியவில்லை. அது வெறும் பொய்க் குற்றச்சாட்டு.

மின்சாரம் தயாரிப்பதற்கு எல்லா நாடுகளிலும் ரேடியம் பயன்படுத்தப்படுகிறது. அணுமின் உலைகள் நிறுவப்படுகின்றன. எந்த நாட்டில் அணுமின் உலை இல்லை? மின் உற்பத்திக்கான தேவையாக அது இருக்கிறது, இப்படி பொதுமக்களிடையே ஒரு நம்பிக்கையை, ஈரானுக்கு எதிரான கருத்தின்மீதான நம்பிக்கையை ஏற்படுத்துகிறார்கள், அவதூறுகளைப் பரப்புகிறார்கள். ஈரானை அழிப்பதற்கு அவர்கள் கையாளுகிற உத்திகளுள் ஒன்று அது, அணுகுண்டு தயாரிக்கிற முயற்சியில் ஈடுபடுகிறது. அந்த முயற்சியைத் தடுப்பதற்காக நாங்கள் இந்த நடவடிக்கைகளில் ஈடுபடுகிறோம். இப்படிப்பட்ட இந்தக் குற்றச்சாட்டுகளைச் சொல்கிறார்கள்.

நான்காவது, எண்ணெய் வளமிக்க நாடுகளுள் ஈரானும் ஒன்று. கச்சா எண்ணெய் உற்பத்தியை உலக நாடுகளில் முதன்மையான நாடுகளுள் ஈரானும் ஒன்று. அந்த வர்த்தகத்தில் அமெரிக்க ஏகாதிபத்தியம் தலையீடு செய்து, அதனால், அது மிகப் பெரிய ஆற்றல் வாய்ந்த ஒரு பேரரசாக மாறிவிடக் கூடாது, அதைத் தடுக்க வேண்டும் என்கிற நோக்கத்தில் தலையீடு செய்கிறார்கள் என்கிற கருத்து ஒன்று. இவையெல்லாம், காரணங்கள். ஆனால், அடிப்படையில் அவர் அந்த ஏகாதிபத்தியத்திற்கும் மண்டியிடாத துணிச்சல் வாய்ந்த ஒரு பேராளுமை என்பதுதான் மிக முக்கியமானது. இதைத்தான் நாம் புரிந்துகொள்ள வேண்டும். இந்த அடிப்படையில்தான் நாம் இமாம் காமெனி அவர்களின் நிலைப்பாட்டைப் புரிந்துகொள்ள வேண்டும், அணுகவேண்டும். என்ன

வேண்டுமானாலும் செய்ய முடியும், எந்த நாட்டிற்குள்ளும் என்னால் ஊடுருவ முடியும், வீட்டிற்குள்ளே புகுந்து அவனை அழித்தொழிக்க முடியும் என்கிற அளவுக்கு இந்தியாவிலே இன்றைக்கு மதவெறி பிடித்த ஃபாசிஸ்டுகள் இடதுசாரிகளின் வீட்டிற்குள்ளே புகுந்து துப்பாக்கியால் சுடுகிற ஃபாசிசத்தை நாம் பார்க்கிறோம். ஒரு நாட்டிற்குள்ளே இப்படி மதவெறி பிடித்த ஃபாசிஸ்டுகள் ஆயுதம் ஏந்தி சுதந்திரமாக ஒருவன் வீட்டிற்குள்ளே வந்து படுகொலை செய்யப்படுகின்ற நிலை இங்கே தலைவிரித்து ஆடுகிறது.

அதைத்தான் இன்றைக்கு அமெரிக்க ஏகாதிபத்தியம் 'சர்வதேச தாதாவாக' மாறி உலகத்தில் எந்த நாட்டிற்குள்ளும் என்னால் தலையிட முடியும், எந்த அதிபரையும் கொல்ல முடியும் என்கிற நிலைப்பாட்டை எடுத்திருக்கிறது. இது உலக நாடுகளுக்கு மிகப்பெரிய தலைகுனிவு, வெட்கக்கேடு. 'நீ உன்னுடைய அடுத்த சுப்ரீம் தலைவரைத் தேர்ந்தெடுக்க முடியாது; நான்தான் தேர்ந்தெடுப்பேன்' என்று சொல்கிறார். இது எவ்வளவு பெரிய ஆணவம், எவ்வளவு பெரிய நெஞ்சழுத்தம். ஈரான் மக்கள் தங்களுக்கான சுப்ரீம் தலைவர் யார் என்பதைத் தேர்ந்தெடுக்கிற உரிமை பெற்றவர்கள். ஆனால், உன்னுடைய சுப்ரீம் தலைவரை நான்தான் தேர்ந்தெடுப்பேன்; இது எப்படி ஒரு சனநாயகமாகும். இது எவ்வளவு பெரிய அடாவடி அரசியல் போக்கு. இதைக் கண்டிப்பதற்கு உலக நாடுகள் இல்லையா என்கிற ஏக்கம் நமக்கு உருவாகிறது. எனவே, அவர்கள் எவ்வளவு பெரிய சக்தி படைத்தவர்களாக இருந்தாலும் அவர்கள் செய்த செயல், சனநாயக விரோதச்செயல் என்கிறபோது நாம் காமெனியின் பக்கம்தான் நிற்கவேண்டும். இந்தக் கருத்தை மக்களிடத்தில் கொண்டு போய் சேர்ப்பது நம்மைப் போன்றவர்களின் கடமை.

### அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் விளைச்சல்

தோழர்கள் சொன்னார்கள், 'நபிகள் அலியைப் போல் வாழ்ந்தார்; நபிகள் உசைனைப் போல் மறைந்தார் நம்முடைய இமாம் காமெனி அவர்கள்' என்று சொன்னார்கள். நபிகள் நாயகத்தின் குடும்ப வாரிசுகளான அவர்கள் இந்த மக்களின் நலன்களுக்காக, இசுலாமிய சமூகத்தின் நலன்களுக்காக இப்படிப்பட்ட பல கொடூரங்களை, வன்முறைகளை, வன்கொடுமைகளை, படுகொலைகளை காலம் காலமாகச் சந்தித்து வந்திருக்கிறார்கள். இதனை இசுலாமியத் தீவிரவாதம் என்கிறார்கள். இதனை அடிப்படைவாதம் என்கிறார்கள். பின்லேடனை உருவாக்கியது இசுலாமியச் சமூகம் இல்லை; அமெரிக்க ஏகாதிபத்தியம். பின்லேடனின் நடவடிக் கைகளுக்கும் இசுலாத்திற்கும் எந்தச் சம்பந்தமும் இல்லை. அது அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் விளைச்சல். அவர்களே உருவாக்கினார்கள், அவர்களே அந்த விளைவைச் சந்திக்க நேர்ந்தது. இசுலாம் மார்க்கம் அப்படி யாரையும் உருவாக்கவில்லை. அது சகோதரத்துவத்தைத் தழைக்கச் செய்திருக்கிறது. அன்பைப் போதிக்கிறது. பாகுபாடுகள் இல்லாத ஒரு சமூகத்தை உலகம் தழுவிய அளவில் கட்டியெழுப்ப வேண்டும் என்கிற மகத்தான கோட் பாட்டைப் போதிக்கிறது.

ஆகவே, உலக நாடுகளை அச்சுறுத்திக் கொண்டிருக்கிற அமெரிக்க ஏகாதி பத்தியத்திற்கு எதிரான துணிச்சல் மிகுந்த மக்களின் அறப்போரை இந்திய மண்ணிலிருந்து நம்மால் முன்னெடுக்க முடியும். மக்கள் போராக அதை மாற்ற முடியும் என்பதற்குச் சான்றுதான் இரண்டு நாட்களுக்கு முன்பு சென்னை பீட்டர்ஸ் சாலையில் நடந்த, பல்லாயிரக்கணக்கான இசுலாமியர்கள் திரண்ட அந்தப் பேரணி என்பதை இங்கே நான் பதிவுசெய்ய விரும்புகிறேன். அத்தகைய களத்தில் சனநாயகத்தை, நீதியைப் பாதுகாக்கிற களத்தில் என்றென்றும் உங்களுக்கு உற்ற துணையாக விடுதலைச் சிறுத்தைகள் நிற்போம் என்பதைச் சொல்லி, இமாம் காமெனி அவர்களுக்கு எமது செம்மாந்த வீரவணக்கத்தைச் செலுத்தி நிறைவுசெய்கிறேன். நன்றி. வணக்கம்.

### மக்கள் நீதி மய்யம் தேர்தலில் போட்டியிட வேண்டும்:

# ‘வெல்வோம் ஒன்றாக’ எனும் முழக்கம் முழுமையுற வேண்டும்!

**மாண்புமிகு முதல்வருக்கு எழுச்சித்தமிழர் வேண்டுகோள்**



தி.மு.க தலைமையிலான மதச் சார்பற்ற முற்போக்குக் கூட்டணியில் தொகுதிப் பங்கீடு நிறைவுபெறும் தறுவாயில் உள்ளது. அடுத்து எந்த எந்தத் தொகுதிகள் என்பது குறித்த பேச்சுவார்த்தை தொடங்கவுள்ளது. இதுவும் மிக இலகுவாக விரைவாக நடந்தேறும். இந்நிலையில், தி.மு.க கூட்டணியில் ‘மக்கள் நீதி மய்யம்’ போட்டியிடாமல் கூட்டணியை ஆதரிக்கும் நிலை எடுத்திருப்பது ஏற்புடையதாக இல்லை. அக்கட்சியின் தலைவர் அண்ணன் கமல்ஹாசன் அவர்கள் தமிழ்ச்சமூகத்தின் நன் மதிப்பைப் பெற்ற ஒரு மகத்தான திரைக்கலைஞர். நான்கு சதவிகித அளவிலான வாக்கு வங்கியைக் கொண்ட ஓர் அரசியல் தலைவர். அவர் நம்மோடு மனமுவந்து களத்தில் நிற்பதுதான் நமது கூட்டணிக்கு நலம் பயக்கும்.

மக்கள் நீதி மய்யம் மேற்கொண்டுள்ள இத்த நிலைப்பாடு குறித்தும் கூட்டணியில் நடந்தேறிய பேச்சுவார்த்தைகள் குறித்தும் விடுதலைச் சிறுத்தைகளின் கருத்துகளைக் கூட்டணியின் தலைவர் அண்ணன் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களது மேலான பார்வைக்கு வெளிப்படையாக முன்வைப்பது எமது சனநாயகப் பொறுப்பு எனக் கருதுகிறோம்.

கருத்தியல் அடிப்படையிலும், கொள்கைப் பகைவர்களை வீழ்த்தி வெல்வதற்கான உத்திகளின் அடிப் படையிலும், தொலைநோக்குப் பார்வையோடு ஓரணியில் திரண்டு ‘மதச் சார்பற்ற முற்போக்குக் கூட்டணி’யாக நாம் பல ஆண்டுகளாக இயங்கி வருகிறோம். 2017 ஆம் ஆண்டிலிருந்து நாம் ஒருமித்த கருத்தோடு இதுநாள் வரையில் ஒற்றுமையாகக் கைகோர்த்துக் களமாடி வருகிறோம். தேர்தலுக்குத் தேர்தல் வாக்குகளுக்காக மட்டுமே கூடிக்கலையாமல், மக்கள் நலன்களை முன்னிறுத்தி மாநில அளவிலும் இந்திய அளவிலும் வாதாடுகிற போராடுகிற ஒரு ‘கூட்டியக்கமாகவே’ தொடர்ந்து தொய்வின்றி இயங்கி வருகிறோம்.

நம்மிடையே அவ்வப்போது கருத்து முரண்கள் எழுந்தாலும் அவற்றின் அடிப்படையில் சிறுசிறு உரசல்கள் நிகழ்ந்தாலும் கடந்த ஏழு ஆண்டுகளாக கூட்டணியின் கட்டுக்கோப்பில் ஒரு மெல்லிய கீறலோ, சிறிய சிராய்ப்போ ஏற்படாமல் மிகுந்த நல்லிணக்கத்தோடு ஒருவருக்கொருவர் உற்ற துணையாக இருந்து செயலாற்றி வருகிறோம். இதற்கு தங்களின் சகோதரத்துவமான நல்லிணக்கமான அணுகுமுறையே அடிப்படைக் காரணமாகும். கடந்த சில

ஆண்டுகளாக மேலும் சில கட்சிகளும் சமூக அமைப்புகளும் இக்கூட்டியக்கத்தில் இணைந்து நம்மோடு களமாடி வருகின்றன. இக்கூட்டியக்கத்தில் மக்கள் நீதி மய்யம், தேமுதிக உள்ளிட்ட இருபதுக்கும் மேற்பட்ட கட்சிகள் மற்றும் சமூக இயக்கங்கள் ஒருங்கிணைந்து ஒரு பேரியக்கமாகப் பரிணமித்துள்ளது. இது இந்திய அரசியல் களத்தில் ஒரு புதுமையே ஆகும். இப்படி ஒரு 'மெகா கூட்டணி' இந்தியாவில் வேறெங்கும் இல்லை எனலாம். தங்களின் ஆற்றல் வாய்ந்த தலைமைத்துவத்துக்கே இப்பெருமை உரித்தாகும்.

இந்தக் கூட்டியக்கத்தின் அல்லது கூட்டணியின் முதன்மையான நோக்கம் 'தேர்தல் மட்டுமே அல்ல' என்பதைக் கடந்தகால நமது செயற்பாடுகள் உணர்த்தும். சமூகநீதி என்னும் இடதுசாரி அரசியலை முன்னிறுத்தும் களம் பல அமைத்து வலதுசாரி பிற்போக்குச் சக்திகளை எதிர்த்து அவரவர் வலிமைக்கேற்ப தனித்தும் தேவையான சூழல்களில் கூட்டியக்கமாக இணைந்தும் செயல்பட்டிருக்கிறோம். அதேபோல அதிகாரத்தைப் பகிர்ந்து கொள்ளும் தேர்தல் களங்களிலும் ஒருங்கிணைந்து பணியாற்றி ஏராளமான வெற்றிகளை ஈட்டிச் சாதித்திருக்கிறோம். 2019, 2021, 2024 என நாடாளுமன்ற, சட்டமன்றப் பொதுத்தேர்தல்களிலும் உள்ளாட்சித் தேர்தல்களிலும் மகத்தான வெற்றிகளைக் குவித்திருக்கிறோம். ஒவ்வொரு கட்சியும் அவரவர் வலிமைக்கேற்ப அவரவரின் பங்களிப்பு கூட்டணியின் வெற்றிக்கு உறுதுணையாக இருந்துள்ளது.

ஒரு கட்சியின் வலிமை என்பது அக்கட்சியின் வாக்கு வங்கியை மட்டுமே குறிப்பதாகாது. அது மிகவும் குறிப்பான ஒரு அளவுகோல்தான். ஆனாலும், வாக்கு வங்கி வலிமை மட்டுமின்றி, ஒரு கட்சியின் கருத்தியல் வலிமை, அக்கட்சி மீதான மக்களின் நன்மதிப்பு மற்றும் அக்கட்சியின் தலைமை மீதான நன்மதிப்பு போன்றவையும் அக்கட்சிக்குரிய வலிமைக்கான அளவுகோல்கள் ஆகும். அதாவது, "வாக்குவங்கி வலிமை, கட்சிக்குரிய நன்மதிப்பு, கட்சியின் தலைமைக்குரிய நன்மதிப்பு, கருத்தியல் வலிமை மற்றும் கட்சியின் பொருளாதார வலிமை" போன்ற யாவும் ஒரு கட்சியின் வலிமைக்கான அளவீடுகளாக இருக்கும்.

கூட்டணிக் கட்சிகளுக்கிடையிலான பேச்சுவார்த்தையின்போது இந்த அளவீடுகளில் வாக்குவங்கி வலிமை தான் முதன்மையானதாக அமைகிறது. பெரும்பாலும் உறுதிப்படுத்தப்பட்ட வாக்கு சதவிகிதத்தின் அடிப்படையில்தான் கூட்டணியில் இடப்பகிர்வுகள் மேற்கொள்ளப் படுகின்றன. அந்த வரையறைகளுக்கு உட்படாத சில கட்சிகளை அவற்றின் சமூக அடையாளங்களைப் பின்னணியாகக் கொண்டு மதிப்பீடு செய்யப்படுகிறது. ஆனால், கட்சிகளின் 'கருத்தியல் வலிமை' ஒரு அளவுகோலாக எடுத்துக்கொள்ளப் படுவதில்லை என்பது கசப்பான உண்மையாகவுள்ளது.

தொகுதிப்பங்கீடுநடக்கிறபோதுஒவ்வொரு கட்சிக்குமான தொகுதி எண்ணிக்கைகள் எத்தகைய வரையறைகளின் அடிப் படையில் தீர்மானிக்கப்படுகின்றன என்பது அவ்வப்போது நிலவும் அரசியல் சூழல்களைப் பொறுத்து அமைகின்றன. அத்துடன், கூட்டணியில் அங்கம் வகிக்கும் கட்சிகளின் அணுகுமுறைகளைப் பொறுத்தும்; கூட்டணியின் தலைமை கையாளும் அரசியல் உத்திகளைப் பொறுத்தும் இடப்பகிர்வுகள் நிகழ்கின்றன.

கூட்டணிக்குத் தலைமை வகிப்பவரின் நிலையிலிருந்து ஒட்டுமொத்தக் கூட்டணியின் வெற்றியை முன்னிறுத்தி அனைத்துக் கூறுகளையும் சீர்தூக்கிப் பார்த்து தலைமைக்கு ஒத்துழைக்க வேண்டியது கூட்டணியிலுள்ள ஒவ்வொரு கட்சிக்கும் உள்ள பொறுப்பாகும். கொள்கைப் பகையை வீழ்த்துவதும் கூட்டணியின் வெற்றியை உறுதிசெய்வதும் ஒவ்வொரு கட்சியின் கடமை. ஆனால், அந்தக் கட்சிகளின் நலன்களையும் கருத்தில் கொண்டு வெற்றிக்கான உத்திகளை

வகுக்க வேண்டியது தலைமைக்குரிய தவிர்க்க முடியாத பொறுப்பாகும். கருத்தியல் வலிமையை இன்றியமையாத ஒரு அளவுகோலாகக் கொண்டு இடப்பகிர்வு உள்ளிட்ட அணுகுமுறைகளைக் கையாள வேண்டியது இன்றைய வரலாற்றுத் தேவையாக உள்ளது.

கருத்தியல் உறுதிப்பாடு கொண்ட, நம்பகத்தன்மை வாய்ந்த தோழமை சக்திகளை வலுப்படுத்துவதன் மூலமே கொள்கைப் பகையை இம்மண்ணில் வேரூன்ற விடாமல் தடுக்க முடியும். அத்தகைய தொலைநோக்குப் பார்வை கொண்ட இடதுசாரித் தோழமைச் சக்திகளை அரவணைப்பதில் கூடுதல் முன்னுரிமை அளிக்க வேண்டியதும் அவர்களை வலுப்படுத்த வேண்டியதும் காலத்தின் கட்டாயமாகவுள்ளது. அதன்மூலம் ஒட்டுமொத்தக் கூட்டணிக்குமான நன்மதிப்பு மக்களிடையே பன்மடங்காகப் பெருகும்.

தற்போது நடந்தேறிய தொகுதிப் பங்கீடு பேச்சுவார்த்தையில் ‘மக்கள் நீதி மய்யம்’ கட்சிக்கு இடப்பகிர்வு அளிப்பதில் ஏற்பட்டுள்ள நெருடல், அக்கட்சி இத்தேர்தலில் போட்டியிடுவதில்லை என முடிவெடுக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது. அதேவளையில் மதச்சார்பற்ற கூட்டணியின் வெற்றிக்குப் பாடுபடுவோமென்றும் அறிவித்துள்ளது. இது அக்கட்சி மற்றும் அக்கட்சித் தலைவரின் நாகரிகமான அணுகுமுறை என நாம் பெருமிதப்பட்டாலும், நம் கூட்டணியின் நன்மதிப்புக்கு ஊறுவிளைவிக்குமோ என்கிற அச்சம் மேலிடுகிறது.

தோழமைக்கட்சிகள் தாமே விரும்பி கூட்டணிக்குத் தலைமை வகிக்கும் கட்சியின் சின்னத்தில் போட்டியிட விரும்பினால் அதனை ஏற்றுக்கொள்ளவது அக்கட்சிக்குச் செய்யும் பேருதவியாகும். அதேவேளையில், தனிச்சின்னத்தில் போட்டியிட விரும்பும் தோழமைக்கட்சிகளை அவற்றின் விருப்பத்திற்கு மாறாக தலைமை வகிப்போரின் சின்னங்களில் போட்டியிடக் கோருவது ஏற்புடையதல்ல. அது அவர்களின் சுதந்திரமான அரசியல் நடவடிக்கைகளை முடக்கிப் போட்டுவிடும். கூட்டணியின் தலைமைத் தோழமைக்கட்சிகளின் அத்தகைய சுதந்திரத்தில் தலையிடாமல் இருப்பதே சனநாயகத்துக்கும் செலுத்தும் பெருமதிப்பாக அமையும்.

இந்த நெருக்கடியான சூழலில், மதவாத திரிபுவாத வலதுசாரிக் கும்பலை வீழ்த்த வேண்டிய இந்த அறப்போரில், ‘மக்கள் நீதி மய்யம்’ கட்சியும் நம்மைப் போலவே தேர்தலில் போட்டியிடும் ஒரு பங்கேற்பாளராக நம்மோடு கைகோர்த்துக் களமாட வேண்டும். அதாவது அண்ணன் கமல்ஹாசன் அவர்களும் தங்கள் தலைமையில் கொள்கைப்பகை வீழ்த்த கருத்தியல் வாளேந்த வேண்டும்.

‘மக்கள் நீதி மய்யம் இத்தேர்தலில் போட்டியிடாது’ என முடிவெடுப்பது அவரது பெருந்தன்மையாக இருக்கட்டும். மதவெறி எதிர்ப்பில் உறுதியாக நிற்கும் கருத்தியல் வலிமையும், நான்கு சதவிகித அளவில் உறுதிப்படுத்தப்பட்ட ‘வாக்கு வங்கி வலிமையும்’, தமிழ்ச்சமூகத்தில் பெரும் செல்வாக்கு என்னும் உயரிய ‘நன்மதிப்பு வலிமையும்’ கொண்ட அண்ணன் கமல்ஹாசன் அவர்களை, ‘அவ்வாறு விட்டுவிட மாட்டோம்’ என அவரை அரவணைத்துக்கொள்ள வேண்டியது தங்களின் உயரிய மாண்பாக அமையட்டும்.

தொகுதிகளின் எண்ணிக்கை எதுவானாலும் அவர்களுக்கென ஒதுக்கப்பட்டுள்ள ‘டார்ச்’ சின்னத்தில் போட்டியிட அனுமதித்து, கூட்டணியின் மீதான நன்மதிப்பையும் தங்களின் மீதான பெருமதிப்பையும் மென்மேலும் உயர்த்திட வேண்டும் என தோழமையோடும் தங்களின் உடன்பிறப்பு என்னும் உரிமையோடும் கேட்டுக்கொள்கிறேன். அப்போதுதான் ‘வெல்வோம் ஒன்றாக’ என்கிற தங்களின் உன்னதம் வாய்ந்த சகோதரத்துவ முழக்கம் வெற்றிகரமாக முழுமையுறும்!

**25.03.2026 | அறிக்கை**



## வி.சி.க மறுசீரமைப்பு நடவடிக்கை 2026:

# அரசியல் களத்தில் ஒரு புதிய முயற்சி!


**சென்னை, கோயம்பேடு தனியார் விடுதி ஒன்றில் எழுச்சித்தமிழர் தொல்.திருமாவளவன் அவர்கள் தலைமையில் 23.03.2026 அன்று விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் உயர்நிலைக்குழுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்:**

1. ஏப்ரல் 23, 2026 அன்று நடைபெறவுள்ள சட்டப்பேரவைத் தேர்தலில், விடுதலைச் சிறுத்தைகள் கட்சி அங்கம் வகிக்கும் தி.மு.க தலைமையிலான 'மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி', வலதுசாரி பிற்போக்குச் சக்திகளையும் அவர்களுக்கு மறைமுகமாகத் துணைநிற்கும் திரிபுவாதச் சக்திகளையும் வீழ்த்தி, 200 இடங்களுக்கும் மேலாக மகத்தான வெற்றியைப் பெற வேண்டும். அதற்கேற்ப தமிழ்நாடு தழுவிய அளவில் கூட்டணி கட்சிகளைச் சார்ந்த பொறுப்பாளர்களோடு இணைந்து விடுதலைச் சிறுத்தைகள் மிகுந்த பொறுப்புணர்வோடும் தீவிர முனைப்போடும் களப்பணி ஆற்றுவோம் என இந்த உயர்நிலைக்குழுக் கூட்டம் தீர்மானிக்கிறது.

2. விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் கட்டமைப்பில் மேள்கொள்ளப்பட்டுவரும் 'மறுசீரமைப்பு நடவடிக்கை' அரசியல் களத்தில் ஒரு புதிய முயற்சியாகும். வருவாய் மாவட்ட எல்லைகளை அடிப்படையாகக் கொண்டு கட்சியின் கட்டமைப்பை உருவாக்குவது வழக்கமான நடைமுறையாகும். ஆனால், அதனின்று மாறுபட்டு, தேர்தல் ஆணையம் வரையறுத்துள்ள சட்டமன்ற, நாடாளுமன்றத் தொகுகளின் எல்லைகளை அடிப்படையாகக் கொண்டு மாவட்டம் மற்றும் மாநில அளவிலான நிர்வாக முறையை அறிமுகப்படுத்திக் கட்சியின் கட்டமைப்பை மாற்றியமைத்து, 234 சட்டமன்றத் தொகுதிகளையும் 'தொகுதி மாவட்டங்களாக' அறிவிக்கப்பட்டுள்ளது. இது அரசியலரங்கில் முதல் முறையாக வி.சி.க முன்னெடுத்துள்ள அரிய முயற்சியாகும்.

அத்துடன், 'அதிகாரப் பரவலாக்கம்' என்னும் சனநாயக நடைமுறையைப் பின்பற்றி அனைத்துத் தொகுதி மாவட்டங்களுக்கும் மாவட்டச் செயலாளர்கள் மற்றும் மாவட்டப் பொறுப்பாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். மேலும், ஒன்றியம், நகரம், பேரூர் மற்றும் மாநகரம் ஆகியவற்றிலும் உள்ளாட்சி நிர்வாக எல்லைகளை அடிப்படையாகக் கொண்டு கட்சியின் நிர்வாகக் கட்டமைப்பையும் மாற்றியமைத்து, அதிகாரப் பரவலாக்கத்தை நடைமுறைப்படுத்தும் வகையில் ஊரகப் பகுதிகளுக்கான பொறுப்பாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இதன்மூலம் பல்லாயிரக்கணக்கான தோழர்கள் கட்சி அதிகாரத்தைக் கையாளும் தலைவர்களாகப் பரிணாமம் அடைந்துள்ளனர். குறிப்பாக, மகளிர், இளையோர் மற்றும் தலித் அல்லாதவர்களுக்கு கட்சி அதிகாரத்தில் குறிப்பிட்ட விழுக்காட்டில் பங்கீடு அளிக்கப்பட்டுள்ளது. இது அதிகாரப் பொறுப்புகளைச் சனநாயகப்படுத்துவதில் முன்னுதாரணம் இல்லாத ஒரு மகத்தான



சாதனையாகும். தொலைநோக்குப் பார்வை யுடன் இத்தகைய சனநாயக நடவடிக்கைகளை நமது கட்சியின் தலைவர் எழுச்சித்தமிழர் வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தி உள்ளார். இதன்மூலம் தமிழ்நாட்டில் உள்ள அனைத்துச் சட்டமன்றத் தொகுதிகளிலும் வாக்குச்சாவடி முகவர்களை நியமிக்கக் கூடிய ஆற்றல் வாய்ந்த கட்சியாகவும் விசிக வலுப்பெற்றுள்ளது. கட்சியின் கட்டமைப்பையும் நிர்வாகத்தையும் சனநாயகப்படுத்திக் கட்சியை அமைப்பு ரீதியாக வலிமைப்படுத்தியுள்ள தலைவர் எழுச்சித்தமிழர் அவர்களுக்கு இந்த உயர்நிலைக்குழு பாராட்டுகளையும் நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறது.

3. அமெரிக்காவும், இஸ்ரேலும் கூட்டுச்சேர்ந்து ஈரான்மீது நடத்திவரும் அநீதியான போரை இந்த உயர்நிலைக் குழு வன்மையாகக் கண்டிக்கிறது. சர்வதேச சட்டங்களுக்கு மாறாக குழந்தைகள் படிக்கும் பள்ளியின்மீது குண்டுவீசி சுமார் குழந்தைகள் உட்பட 168 பேரை அமெரிக்கா படுகொலை செய்துள்ளது. இது போர்க்குற்றமாகும். இதற்கு அமெரிக்க அதிபர் டொனால்டு டிரம்ப்பே காரணம். எனவே, சர்வதேச கிரிமினல் நீதிமன்றம் அமெரிக்க அதிபரைப் போர்க்குற்றவாளியாக அறிவிக்க வேண்டும் என இந்த உயர்நிலைக்குழு கேட்டுக்கொள்கிறது.

4. ஈரான்மீது நடந்துவரும் போரின் காரணமாக உலகம் முழுவதும் எண்ணெய், எரிவாயு உள்ளிட்டவற்றின் விலைகள் கடுமையாக உயர்ந்துள்ளன. அது மட்டுமின்றி மிகப்பெரிய பொருளாதார நெருக்கடியும் ஏற்பட்டு வருகிறது. எனவே, இந்தப் போரை நிறுத்துவதற்கு 'பிரிக்ஸ்' கூட்டமைப்பின் தலைமைப் பொறுப்பில் இருக்கும் இந்தியா முழுமூச்சாகப் பாடுபட வேண்டும் என்று இந்த உயர்நிலைக் குழு இந்திய ஒன்றிய அரசைக் கேட்டுக் கொள்கிறது.

5. ஈரான் அரசு ஹோர்முஸ் நீரிணையை மூடி வைத்துள்ளது. எண்ணெய் எரிவாயு தேவைகளுக்குப் பெரும்பாலும் வளைகுடா நாடுகளையே நம்பி இருக்கும் இந்தியாவில் இதனால் மிகப் பெரிய நெருக்கடி ஏற்பட்டுள்ளது. எனவே, இந்திய ஒன்றிய அரசு தனது அமெரிக்க இஸ்ரேல் ஆதரவு நிலைப்பாட்டைத் திருத்திக்கொண்டு பா.ஜ.க ஆட்சிக்கு முன்பு வரை இந்திய ஒன்றிய அரசு கடைப்பிடித்து வந்த நடுநிலைக் கொள்கையைக் கடைப்பிடிக்க வேண்டும் என்று ஒன்றிய அரசை இந்த உயர்நிலைக் குழு வலியுறுத்துகிறது.

6. ஐந்து மாநிலங்களில் நடைபெறவுள்ள சட்டப்பேரவைத் தேர்தல் வாக்குப்பதிவு முடிந்ததும் எண்ணெய், எரிவாயு விலையை ஒன்றிய அரசு உயர்த்த போவதாக செய்திகள் வெளியாகி வருகின்றன. அவ்வாறு செய்து 'ஏழை எளிய மக்கள்மீது நிதிச் சுமையை ஒன்றிய பா.ஜ.க அரசு அதிகரிக்கச் செய்யக்கூடாது' என இந்த உயர்நிலைக் குழு ஒன்றிய அரசைக் கேட்டுக்கொள்கிறது.

7. தேர்தல் நடத்தை விதிகள் நடைமுறையில் இருப்பதைக் காரணம் காட்டி தேர்தல் பறக்கும் படையினர் சிறுவணிகர்கள் தமது அன்றாடக் கொள்முதலுக்காக எடுத்துச் செல்லும் சிறு சிறு தொகைகளைக்கூட பறிமுதல் செய்வது அவர்களது வாழ்வாதாரத்தையே சிதைப்பதாக உள்ளது. பிற மாநிலங்களில் இந்த அளவுக்கு நெருக்கடி இல்லை. தமிழ்நாட்டில் இப்படி தேர்தல் விதிமுறைகளுக்குப் புறம்பாகச் செயல்படுவதை நிறுத்தி மக்களின் இயல்பு வாழ்க்கை தடைபடாமல் பார்த்துக்கொள்ள வேண்டும் என்று உரிய அறிவுறுத்தலை வழங்குமாறு மாநிலத் தேர்தல் அதிகாரியை (CEO) இந்த உயர்நிலைக் குழு கேட்டுக் கொள்கிறது.

8. தி.மு.க தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியில் இடம்பெற்று 2019 ஆம் ஆண்டு முதல் இந்தக் கூட்டணியின் வெற்றிக்கு மிகப்பெரிய அளவில் விடுதலைச் சிறுத்தைகள் கட்சி பங்களிப்புச் செய்துள்ளது. எனவே, கட்சியின் வலிமைக்கேற்ப எதிர்வரும் சட்டப்பேரவைத் தேர்தலில் தி.மு.க தலைமையிலான கூட்டணியில் 'இரட்டை இலக்கத்தில்' தொகுதிகளைக் கேட்டுப் பெற வேண்டுமென்றும், 2028 ஆம் ஆண்டு நடைபெற உள்ள மாநிலங்களவைக்கான தேர்தலில் வி.சி.க.வுக்கு ஒரு இடத்தைக் கேட்டுப் பெற வேண்டுமென்றும், தலைவர் எழுச்சித் தமிழர் அவர்களை இந்த உயர் நிலைக்குழு கேட்டுக்கொள்கிறது.

## காவல்துறையின் காட்டுமிராண்டித்தனத்தால் இளைஞர் படுகொலை : எழுச்சித்தமிழர் ஆறுதல்




சிவகங்கை மாவட்டம் மானாமதுரை, கிருஷ்ணராஜபுரம் கிராமத்தைச் சார்ந்த இளைஞர் ஆகாஷ் 06.03.2026 அன்று காவல் நிலையத்தில் நடந்த விசாரணையின்போது காவல்துறையினர் சிலர் நடத்திய காட்டுமிராண்டித்தனமான தாக்குதலுக்கு ஆளாகிப் பலியானார். அவரை இழந்து வாடும் அவரது பெற்றோர் உள்ளிட்ட குடும்பத்தினரைச் சந்தித்து 14.03.2026 அன்று ஆறுதல் கூறினார் எழுச்சித்தமிழர். அப்போது, வி.சி.க சார்பில் ரூ.2 இலட்சம் ஆறுதல் நிதி அளிக்கப்பட்டது.

## கவிப்பேரரசு வைரமுத்துக்கு 'ஞானபீட விருது' : எழுச்சித்தமிழர் வாழ்த்து

இந்திய இலக்கியத் தளத்தின் உயரிய விருதான 'ஞானபீட விருது'க்குத் தேர்வாகியுள்ள கவிப்பேரரசு வைரமுத்து அவர்களுக்கு விடுதலைச் சிறுத்தைகளின் மனமுவந்த வாழ்த்துகள், பாராட்டுகள்.

தொல்.திருமாவளவன்
15.03.2026
எக்ஸ் தளப் பதிவு



Owned & Published by Thol.Thirumaavalavan, Printed by E.Sudeesh Kumar.
Printed at Chennai Offset Printers, No. 19/1, 21/2, Kitabath Khan Bhadur Street, Ellis Road, Chennai - 600 002. Published from L.I.G Flats, No. L - 12B, Ground Floor, Sarvamangala Colony, Ashok Nagar, Chennai - 600 083. Editor: THOL.THIRUMAAVALAVAN




வி.சி.க. வேட்பாளர்கள் அறிமுகம் | அம்பேத்கர் திடல், தலைமையகம் | 30.03.2026

ISSN : 2581 5474
Date of Publication : First week of Every Month
Namadhu Thamizh Mann Tamil Monthly REGISTERED No. : TN/CC(S) DN/305/2024 - 2026
RNI No.: TNTAM/2006/19426 WPP No.TN/PMG (CCR) / WPP - 128 / 2024 - 2026
Posted at Egmore RMS / 1 Pathrika channel, Chennai - 8 / Posted between 3 - 9 of every month

# தி.மு.க தலைவரிடம் வி.சி.க வேட்பாளர்களை அறிமுகப்படுத்தும் எழுச்சித்தமிழர்



2026 சட்டப்பேரவைத் தேர்தலில் தி.மு.க தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியின் சார்பில் தமிழ்நாட்டில் எட்டுத்தொகுதிகளில் களமிறங்குகிறது விடுதலைச் சிறுத்தைகள். இந்நிலையில் வேட்பாளர்களை 29.03.2026 அன்று அறிவித்தார் எழுச்சித்தமிழர். பிறகு, எழுச்சித்தமிழர் தலைமையில் வி.சி.க தலைமையகமான அம்பேத்கர் திடலில் வி.சி.க வேட்பாளர்கள் அறிமுக நிகழ்வு 30.03.2026 அன்று காலை நடைபெற்றது. இதனையடுத்து மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியின் தலைவரும் தி.மு.க தலைவருமான திரு. மு.க.ஸ்டாலின் அவர்களை சென்னை அறிவாலயத்தில் சந்தித்து விசிக வேட்பாளர்களை அறிமுகப்படுத்தினார் எழுச்சித்தமிழர். எட்டுத்தொகுதிகளிலும் வெற்றி பெறுவதற்கு வாழ்த்துகளைத் தெரிவித்தார் திரு.மு.க.ஸ்டாலின்.